விலை 30/-
Muhavary.com
ISSN: 2478-0766



# புதிய முகவரி

## PUTHIYA MUHAVARY

மாதாந்த சஞ்சிகை | எண் 22 | பாதை 2 புரட்டாதி 2016

## உள்ளே...


ப:05
சமபந்தி போசனம் மட்டும் சாதியை ஒழிக்குமா?


ப:17
மொழிகளின் மூலம் தமிழ்மொழியே


ப:30
ஆடம்பரமாக வாழக்கூடாது மைத்திரி

உள்ளே... தரம் 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

# நல்லாட்சியும் சுடும்...!



# உடற் பலவீனத்தையோ, மனப்பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகாதீர்கள்

## பிரதம நீதியரசர் க.ஶ்ரீபவன்

இலங்கையின் 44 ஆவது பிர-தம நீதியரசர் கனகசபாபதி ஸ்ரீபவன் அவர்கள் யாழ். இந்துக் கல்லூரியில் 126 ஆவது பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆற்றிய உரையினை மாணவர் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கான ஆலோசனையாகக் கருதி புதிய முகவரியூடாக வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

– ஆசிரியர்.

ஆசிரியப் பெருந்தகைகளே, மாணவத் தலைவர்களே கல்லூரியின் மாணவர்களே, மற்றும் இங்கு வருகை தந்துள்ள பெற்றோர், பெரியோர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் என்ற முறையில் எனது கல்லூரியின் 126 ஆவது வருட நிறைவின்போது மாணவர்களினதும் மாணவத்தலைவர்களினதும் முன் உரையாற்றும் வாய்ப்புக் கிடைத்தமை எனக்கு மன நிறைவைத் தருகிறது. **இக்கல்லூரியில் படிக்கும் அரிய வாய்ப்பை எனக்களித்த என் பெற்றோரையும், எனக்கு கல்வி கற்பித்த ஆசிரியப் பெருமக்களையும் இத்தருணத்தில் அன்புடனும், பணிவுடனும் நினைவு கூருகின்றேன்.**

எனது மாணவப்பருவத்தை நினைத்துப் பார்க்கையில் அமைதியான சூழ்நிலையில் நான் கல்வி பயின்றது என் நினைவில் நிற்கிறது. படிப்பில் முழுக்கவனம் செலுத்துவதற்கு அந்தச் சூழல் ஏதுவாக இருந்தது. ஆனால், இன்றைய மாணவச் சமுதாயம் பல சவால்களை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

பல இன்னல்களை இழப்புக்களைச் சந்தித்து மனதாலும், உடலாலும் காயப்பட்டு நிற்கும் மாணவ சமுதாயத்தின் முன், காலம் இன்று என்னை இந்நாட்டின் பிரதம நீதியரசராக நிற்க வைத்துள்ளது.

உலக சரித்திரத்தை ஆராயுமிடத்து அது தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறு என்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. பலவித துன்பங்களும் கொடுங்கோன்மையுங்கூட மனிதவர்க்கத்தை உயர்த்தவே பயன்பட்டன என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது.

**கிரேக்க, உரோம, சாம்ராஜ்யங்களின் வளர்ச்சியும், வீழ்ச்சியும் போர்த்துக்கேய, டச்சு, பிரித்தானிய ஏகாதிபத்தியங்களும் அவற்றின் முடிவும், முதலாம், இரண்டாம் உலக மகா யுத்தங்களும், சித்திரவதை முகாம்கள், இடப்பெயர்வுகள் போன்ற பல கொடுமைகளுக்கு மத்தியிலும் மனித சமுதாயம் இன்னும் வாழ்ந்து கொண்டும் வளர்ந்து கொண்டும் இருக்கிறது.** இந்த அழிவுகள் இனிமேல் வராமல் தடுக்க வல்லரசுகள் போராடுவதும், போட்டியிடுவதும் அதனாலேயே பல அழிவுகள் நிகழ்வதும் தொடர்ந்தும் நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கிறது. இதைச் சுருக்கமாக இப்படிச் சொன்னார். Bernard Shaw - "If the lessons of History teaches us anythins, it is that nobody learns the lessons that history teaches us" என்று கி.மு. 266 இல் கலிங்கத்தை வென்ற பின் அசோகன் நிறுவிய கல்வெட்டில் (XIII Rock Edict) பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. "1 லட்சத்து 50 ஆயிரம் பேர் கைதிகளாக்கப்பட்டார்கள். 1 லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். அதை விட பன்மடங்கானவர்கள் இறந்து போனார்கள்" என்று போர் வெறி கொண்ட சாளுக்கிய மன்னன் அசோகன் கலிங்கத்தை வெற்றி கொண்ட பின், **"இதுவல்ல வெற்றி, தண்டனையைவிட மன்னிப்பே மேலானது என்று இப்போது நான் உணர்கின்றேன்"** என்றான். நமக்கு தீமை செய்த ஒருவரை எத்தனை முறை நாம் மன்னிக்க வேண்டும் என்று யேசுநாதரிடம் அவரின் சீடர்கள் வினவிய போது யேசுபிரான் சொன்னார் 7x75 (525) என்று. மகா அலெக்சாண்டர் பல நாடுகளை வெற்றி






கொண்ட பின் இந்தியாவிற்குள் வந்தபோது அவனை எதிர்கொண்ட மன்னர்கள் அவனுக்கு அடிபணிந்தனர். அலெக்சாண்டருக்கு அடி-பணிய மறுத்த Poros அவன் எதிர்த்துப் போரிட்டு, தோல்வியுற்று சிறைப் பட்டான். Poros ஐப் பார்த்து அலெக்சாண்டர் கேட்டான்.

"உம்முடைய விருப்பம் என்ன? என்று **"நான் ஒரு அரசனைப் போல் நடத்தப்படவேண்டும்"** என்றான் Poros. நிச்சயமாக ஆனால் உமது தனிப்பட்ட விருப்பம் என்ன? என்று மீண்டும் கேட்டான் அலெக்சாண்டர். அதற்கு poros சற்றும் தயங்காமல் "அரசனாக நடாத்தப்பட வேண்டும் என்று நான் சொன்னதில் எல்லாம் அடங்கிருக்கிறது" என்றான். தன் இருக்கையில் இருந்து எழுந்து வந்த அலெக்சாண்டர் Poros மன்னனின் விலங்குகளைக் கழற்றிவிட்டான். இன்று உண்மையான வீரத்தைக் கண்டேன்" என்றான். இவையெல்லாம் சரித்திரம் எமக்குப் புகட்டும் பாடம். எப்பொழுதும் மற்றவர்களை மன்னிப்பதை முதல் பாடமாக கற்றுக்கொள்ளுங்கள்.

(அடுத்த இதழில் தொடரும்...)

புதிய முகவரி
PUTHIYA MUHAVARY

**Editor in Chief**
A.Vijayakrishnan

**Editor**
V.Jeyaratnam

**Advisory Board**
Dr.V.Ameerdeen
Mr.A.Panchalingam
Mr.A.Sathyamoorthy
Dr.(Mrs)S.Thirumagal
Dr.S.Nanthakumar
Prof.V.P.Sivanathan

**Bureau Chief**
S.P.Bala

**Advertisements**
R.Achuthapakan

**Layout & Design**
Mrs. S.Mariyaseeli

**Public Relations**

**Technology**



Contact
Canadian Academy of Professional Studies (CAPS)
52, Palaly Road,
Thirunelvely,
Jaffna,
Sri Lanka.
E Mail: spbmukunthan@gmail.com
Tel : 021 205 2240
Fax : 021 205 2240
Web:



The **Puthiya Muhavary** an Entertainment Magazine is being published by us as Fortnight Magazine. Actually the Object of the magazine is to uplift knowledge of the Tamil People. (Students, Youth, Women and Elders) The Contents of the Magazine are Culture, Fine arts, History, Political, Agriculture, Fisheries, New Technologies and uplifting the relations between Tamil and Sinhala people, Based on Languages, Culture, Religion and other mutual understandings.

The Opinions and views Expressed in this Magazine is those of the author and not of the Publisher. Advertisers are completely responsible for the contents of the advertisement and **Puthiya Muhavary** Reserves the right to refuse to publish any article or advertisement considered unsuitable for publication. All rights reserved and the contents may be reproduced with written permission from the publisher. In Spite of the author's Professional capacity no contents of **Puthiya Muhavary** Should be considered as Professional advice. Neither the Publisher nor **Puthiya Muhavary** is responsible for any claims or action damage that the reader may have through reliance on the contents of the magazine including advertisement.


# உயிர் உன்னதமானது


உயிர் உன்னதமானது என்பதை வெறும் வார்த்தைகளால் விபரிக்க முடியாது. இயற்கையின் படைப்பிலே காணப்படுகின்ற அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது எழுதாத விதியாகும். சொந்த மண்ணில் சொந்த மரங்களை நாட்டி அதனை நாடிவரும் உயிரினங்களை மகிழ்வூட்டுவோம் என்ற கருப்பொருளில் நவம்பர் 1 முதல் மரநடுகைமாதம் இடம்பெற்று வருகின்றது. இவ்வாறாக சூழலைப் பாதுகாக்கவும் தூய்மைப்படுத்தவும் மேடையேறி பேசுகின்றனர். அது ஆரோக்கியமான ஓர் விடயம்.

ஆனால் கடந்த 21.10.2016 அன்று இரு பல்கலைக்கழக மாணவர்களின் உயிரிழப்பு ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்துகின்ற விடயமாகும். சட்டத்தை காவல் செய்கின்றவர்கள் தங்களைச் சார்ந்த ஓர் உயிரை எடுப்பதற்கு பயன்படுத்தும் ஆயுதம் ஆபத்தானது. ஆசிரியர் பாடசாலைகளில் வகுப்புகளில் மாணவர்களை தண்டிப்பது நல்வழிப்படுத்துவதாக இருக்க மேண்டுமேயொளிய வன்முறையைத் தூண்டுவதாக இருக்க கூடாது என்பது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் சட்டத்தை காவல் செய்பவர்கள் மக்களைப் பாதுகாப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதனை எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை வரையறுத்திருக்க வேண்டும்.

தவறு செய்யாதவர் மனிதனாக இருக்க முடியாது. தவறுகள் ஏற்படும் போது தண்டனைகள் எதுவாக அமைய வேண்டும் என்பதை காவல் துறையினர் அறிந்திருக்க வேண்டும். கோபத்தில் கையில் இருப்பது என்ன என்று தெரியாமல் தண்டிக்ககூடாது. **இலங்கையில் மலிவான பொருள் உயிர்** என்றாகிவிட்டது. யுத்தத்தால், சுனாமியால் தற்போது விபத்துக்களால் உயிர்கள் இழக்கப்படுகின்றன.

2011 இல் லண்டனில் ஒரு வன்முறை மூலம் கடைகள் சூறையாடப்பட்டன. இவை நடைபெற்றபோது காவற்துறையினர் பார்த்துக் கொண்டிருந்தனர். காரணம் கட்டளை பிறப்பிப்பவர் அந்நேரம் இல்லாததேயாகும். ஆனால், பின்னர் அச்செயல்களில் ஈடுபட்டோரை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தினர். அந்த வகையில் ஜனாதிபதி கூறியது போல் **தெற்கில் இவ்வாறு சம்பவம் நடைபெற்றிருந்தால் நாட்டின் நிலை என்னவாகி இருக்கும். அந்த வகையில் யாழ். மக்கள் பொறுமைசாலிகள்** எனக்கூறியிருக்கின்றார்.

உயிரை எல்லோரும் மதிக்கும் நிலை இனம், மதம் கடந்து உருவாகின்ற காலம் இலங்கையை நல்ல நிலைக்கு வளம் பெற வைக்கும். இதுவே கடைசியான உயிர்களாக இருக்கட்டும்.






# பிரசன்னவுக்கு மீண்டும் ஒரு தடவை நீதிமன்றம் அமைதி...

பிரசன்ன விதானகே இலங்கையின் மிகச் சிறந்த திரைப்படத் தயாரிப்பாளர். இவரால் தயாரிக்கப்படும் திரைப்படங்கள் ஏழை மக்களின் பக்கம் நின்று அரச பொறி முறையையும், மேற்தட்டு மக்களையும் சாடி நிற்கிறது அல்லது நீதி கேட்கிறது.

ஆங்கில எழுத்தாளர்களின் இவ்வாறான சர்ச்சைக்குரிய எழுத்தாளர் D.H.லோறன்ஸ் அவரது Lady chatlers love என்ற நாவல் பிரசன்னவின் திரைப்படங்களை ஒத்ததாகும்.

ஒக்ரோபர் 02.2016 இல் சம உரிமை இயக்கத்தால் நடாத்தப்பட்ட இன ஐக்கியத்திற்கான ஒரு கலாசார நிகழ்வில் உசாவிய நிகண்டய் (நீதி மன்றம் அமைதி) என்ற திரைப்படம் மக்களின் பார்வைக்கு காட்சிப் படுத்தப்பட்டது. அதன் பின் எழுப்பப் பட்ட கேள்விகளுக்கு பிரசன்ன விதானகே பதிலளித்தார்.

**கேள்வி:** ஏன் இந்தத் திரைப்படத்தை அதுவும் நீதிமன்ற முறைகேடுகளை படமாக்கினீர்கள்?

**பதில்:** 1911 - 1912 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் ஆளுநராக இருந்த லேனாட் வுல்வ் (Lernald wolf) இவர் பின்னர் மாத்தளைக்கு ஆளுநராகச் சென்றிருந்தார். இவரால் எழுதப் பட்ட நூல்தான் Villege in the Jungle அக் கதையை லெஸ்ர ஜேம்ஸ் பீரிஸ் "பத்தேகம" என்ற பெயரில் சிங்களத்தில் படமாக்கியிருந்தார். அதில் சாதாரண கிராமத்து மக்களுக்கு விளங்காத ஆங்கில மொழியில் நீதிமன்றில் பேசி ஏழை மக்களுக்குப் பாதகமாக நீதி வழங்கப்பட்ட விடயம் வெளிக்கொணரப் பட்டிருந்தது.

**கேள்வி:** நீதிமன்றம் படத்தின் எழுத்துருவாக்கத்தை தணிக் கைக் குழுவுக்கு அனுப்பி அனுமதி எடுத்தீர்களா?

**ப :** இது மிகவும் வித்தியாசமான ஒன்று. ஒரு நீதிபதி வேறொரு வழக்கிற்குச் **சென்ற கிராமத்துப் பெண்ணை தனது அறைக்குள் விசாரிப்பதற்கு என எடுத்து அந்த அறைக்குள் வைத்து பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய விடயத்தை ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்ரர் ஆய்வன் பத்திரிகை மூலமாக வெளிக் கொணர்ந்தபோது அவருக்கு எதிராக நீதித்துறையே கிளர்ந்தெழுந்தது.**

**அவர் அதற்கு முகங் கொடுத்தார். எல்லாம் நிரூபிக்கப்பட்டு குறிப்பிட்ட நீதிபதி நீதித் துறையிலிருந்தே வெளியேற்றப் பட்டார்.**

இது ஏழை மக்களின் சார்பில் ஊடகங்கள் எவ்வாறு காத்திரமாகச் செயற்படமுடியும் என்பதையே காட்டுகிறது. விக்ரர் ஐவனை முதலில் பாராட்டித்தான் ஆகவேண்டும்.

இது வெறும் ஆவணாங்களாக அல்லாமல் அதற்கு ஒரு வடிவம் கொடுத்த விடயமே. நீதி வழங்கவேண்டிய நீதிமன்றம் ஏன் மௌனித்தது என்பதை சாதாரண மக்கள்புரிந்துகொள்ளவேண்டும்என்பதும் இந்த முறைகேடுகள் சாதாரண மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதுமே இந்த நோக்கம். ஒக்ரோபர் 06 - 2016 இல் கொழும்பு றீகல் திரையரங்கில் வெளியிடப் பட இருக்கிறது.

**கே:** இதற்கு தடை விதிக்கமாட்டார்கள் என்று நம்புகிறீர்களா? (05.10.2016 இல் கொழும்பு நீதிமன்றம் 19.10. 2016 வரை திரையிடுவதற்கு தடை விதித்தது. பின்னர் 21.10.2016 இல் இத்தடை நீக்கப்பட்டு திரையிட அனுமதிக்கப்பட்டது)

**ப:** எனது படங்களை வெளியிடுவதில் இலங்கைக்குள் எப்போதும் பிரச்சினை இருக்கும். ஒருபோதும் அது ஓர் இலகுவான காரியமாக இருக்கப் போவதில்லை. அதையும் எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

சந்திரிகா குமாரணதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் புறஹந்த களுவற (பூரண நிலவில் இருள்) என்ற திரைப்படம் பிரசன்னவால் தயாரிக்கப்பட்டது. அதில் இராணுவ வீரர்களின் சடலம் என்று அனுப்பப்படுகின்ற பிரேதப்பெட்டிகளை அவ் இராணுவ வீரரின் குடும்பத்தார் திறந்து பார்ப்பதற்கு இராணுவம் அனுமதிப்பதில்லை.

கண் தெரியாத ஒரு தந்தை தனது மகன் இராணுவத்திற்குச் சென்று இறந்துவிட்டதாக கொண்டு வரப்பட்ட பிணப்பெட்டியை புதைக் கப்பட்ட இடத்திற்கு ஒரு மண் வெட்டியுடன் சென்று சடலம் புதைக் கப்பட்ட இடத்தைத் தோண்டி, பெட்டியைத் திறந்து தனது பிள்ளையின் முகத்தைத் தடவியபோது அது ஒரு வாழைக்குட்டியின் அடிப்பாகம் என்பது தெரியவந்தது.


அப்படத்திற்கும் நீதிமன்றம் தடை விதித்தது. பின்னர் பிரதம நீதியரசராக இருந்த மார்க்கஸ் பெனாண்டோ " இது ஓர் உன்னதமான மனித ஆவணம்" என்று அவரது தீர்ப்பில் வலியுறுத்தியதன் பேரில் அத்திரைப் படம் திரையிட தாமதித்த ஒவ்வொரு நாளுக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டிய நிலை சந்திரிகா அரசுக்கு ஏற்பட்டது. இப்புதிய திரைப் படத்திற்காக நீதிமன்றம் எவ்வளவு காலம் தான் அமைதி காக்க முடியும்?



### தவறுக்கு வருந்துகிறோம்.

புதிய முகவரி ஆவணி 2016 பதிப்பில் 18 ஆம் பக்கத்தில்
இப்படிச் செய்த TO யார் என்ற குறிப்பில், இறுதிப்பந்தியில் தவறு ஏற்பட்டுள்ளது.

"...தான் அங்கு சென்றபோது தன்னுடன் TO எனக் கதைத்தவர் பேராசிரியர் துரைராஜா, துணை வேந்தர் என்ற பெயர்ப்பலகை போடப்பட்ட அறையில் இருந்ததைக் கண்டு தான் அதிர்ச்சி அடைந்ததாகவும், அவ்வாறான ஒரு பெருந் தன்மையுள்ள கல்விமானை இனிக் காணமுடியாது என்றும் நினைவு கூர்ந்தார்.




# INSULIN RESISTANCE

எனும் வைத்தியத்துறை சார்ந்த நூல் வெளியாகியுள்ளது. இந்த நூல் இன்சுலின் சார்ந்த பல விடயங்களை உள்ளடக்கி, நான்கு பாகங்களாக 109 பக்கங்களில் வெளிவந்துள்ளது. யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார் Ph.D அவர்களால் இந்த நூல் ஆங்கிலத்தில் எழுதி வெளியிடப்பட்டுள்ளது.

இந்நூல் நீரிழிவு நோயாளர்களை வழிப்படுத்தும் பல அறி வுரைகளை ஆய்வுகளின் முடிவாகக்கொண்டு வந்திருக்கிறது. மிக விரைவில் இந்நூல் தமிழ்மொழியிலும் வெளியாகவுள்ளது.


## யுனெஸ்கோவின் உலக பாரம்பரியம்

இந்த தலைப்பின் கீழ் இலங்கையில் மிகப் பழைய விடயங்கள் சில அடை யாளம் காணப்பட்டுள்ளன. அவையாவன:-

1. பொலநறுவையின் புராதன நகரம் (1982)
2. சிகிரியாவின் புராதன நகரம் (1982) - இது உலக அதிசயங்களில் எட்டாவது அதிசயமாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.
3. தம்புள்ள தங்கக்கோயில் (பௌத்த விகாரை - 1991)
4. காலியில் பழைய நகரம் மற்றும் காலிக்கோட்டை (1988)
5. அனுராதபுரம் புனித நகரம் (1982)
6. கண்டி புனித நகரம் (1988)
7. சிங்கராஜவனப் பகுதி (1988)
8. மத்திய மலைநாடு (2010)

இவ்வாறான புராதன அடையாளங்கள் எதுவும் வடகிழக்கில் அடையாளம் காணப்படவில்லை. ஏற்கனவே இருந்த பல அரிய ஆதாரங்களை தமி ழரே உடைத்தெறிந்துவிட்டு புதிதாக கோயில்களையும், கட்டங்களையும் கட்டியதன் விளைவாக தமிழ் மக்களுக்குரிய பூர்வீக அடையாளங்கள் யுனெஸ்கோ தெரிவில் இடம்பெறவில்லை.

# டெங்கு நுளம்பு




மனிதனுடைய ஆற்றல் சாதாரணமானதல்ல. பண்டைய நாகரீகங்கள் பலவற்றை உருவாக்கியவன். மனிதனால் உருவாக்கப்பட்டவையே இந்த உலகத்தையே நிரப்பியுள்ளன. கடலையும், ஆகாயத்தையும், பாலைவனத்தையும், பனிக்கட்டியையும், கொடிய விலங்குகளையும் வென்றவன் மனிதன்.

ஒரு மனிதனையும், யானையையும் . ஒப்பிடும்போதுதான் மனிதனின் திறமை புரியும். ஒரு சீனப்பெருஞ்சுவரையோ, அதியுயர் கட்டடங்களையோ, பைசா கோபுரத்தையோ பார்க்கும்போது "மனிதனின் சின்ன மூளையும், சின்னக்கையுமா இவற்றைச் செய்தன" என பிரமிக்க வைக்கிறது. எதுவும் மனிதனால் முடியும் என்ற நம்பிக்கை இதன்மூலம் எழுகிறது.

இந்தப் படைப்புக்களைக் காட்டித்தான் மாணவர்களை வழிப் படுத்துகிறோம். ஒவ்வொரு அறிஞர்களும் இப்படித்தான் கூறியிருக்கிறார்கள் என்கிறோம்.

ஆனால் இவ்வளவு அதீத ஆற்றல் படைத்த மனிதனை கண்ணுக்குப் புலப்படாத மிகச்சிறிய டெங்கு நுளம்பு கொன்றுவிடுகிறது. அது ஏன்? மனிதன் இயற்கைக்குச் செய்யும் துரோகமா? இயற்கைச் சூழலை மாசுபடுத்தக்கூடாது என்பதே அந்தப் படிப்பினை. முதலில் இந்தப் பிரபஞ்சத்தை வெற்றிகொள்வதை விடுத்து, டெங்கு நுளம்பை வெற்றிகொள்ள ஒவ்வொரு மனிதனும் முயற்சிக்க வேண்டும்.

# நீர் விரையம்



பல பெரிய அலுவலகங்களில் எப்போதும் தண்ணீர்ப்பிரச்சினை இருக் கும். ஆனால் பெரிய நீர்த்தொட்டி ஒன்றில் நிறைக்கப்படும் தண்ணீர் யாரும் குளித்தோ, குடித்தோ முடிப்பதில்லை. ஆனால் தண்ணீர் முடிந்தவுடன் நீர்ப் பம்பியை இயக்குபவரை எல்லோரும் பேசுவார்கள்.

அந்தத் தண்ணீருக்கு என்ன நடந்தது என்பது உயர் அதிகாரிக ளுக்குக்கூடத் தெரிவதில்லை. அதற்கான பிரதான காரணங்கள் :-

1. கொமோட் கழிவறையில் சிறிய பழுது ஏற்பட்டு அதனூடாக நீர் கழிப் பறைக்குள் தொடர்ச்சியாக போய்க்கொண்டிருப்பது.

2. சிலவேளை, அலுவலகங்களுக்கு வெளியில் உள்ள Tap அல்லது குழாய் வெடித்து நீர் வெளியேறிக்கொண்டே இருக்கும்.

வரட்சியின்போது ஒரு துளி நீரின் அருமை புரிகிறது. தண்ணீர் பவுசர்களில் மட்டும் "ஒவ்வொரு துளி நீரும் எமது சொத்து" என்று எழுதப் பட்டிருக்கும். ஆனால் நகைச்சுவை நடிகர் வடிவேல் சொல்வதுபோல பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், பால் போன்றவற்றை ஏற்றிச்செல்லும் பவுசர்கள் ஒழுகுவதில்லை. ஏன் தண்ணீர் பவுசர் மட்டும் ஒழுகுகிறது என்று. நீரின் முக்கியத்துவத்தை முதலில் படித்தவர்கள் என்று கூறுபவர்கள் உணர்ந்தால் மற்றவர்களுக்கு அது ஒரு முன்னுதாரணமாக இருக்கும் அல்லவா?

# சமபந்திப் போசனம் மட்டும் சாதியை ஒழிக்குமா?

ஒருவன் சமயம் மாறலாம். ஆனால் சாதி மாறமுடியாது. இந்தச் சாதிகள் எவ்வாறு உருவாகின. இவை தொழில் சார்ந்த சமூகமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் இத்தொழில் முறை "அடிமை" எனவும் ஆசிய நாடுகளில் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் "குடிமை" என அழைக்கப்பட்டது.

ஓர் ஐரோப்பிய அடிமை (பெரும்பாலும் கறுப்பினத்தவர் தன்னை வாங்கிய நிலச்சுவாந்தருக்கு (Land Lord) தோட்டவேலை, உடுப்புத் தோய்ப்பது, தச்சுவேலை, மேசன் வேலை, விவசாயம், மாடு வளர்ப்பு, சுத்திகரிப்பு வேலை என எல்லாவற்றையும் ஒருவனே செய்து வந்தான்.


ஆனால் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் நிலச் சுவாந்தர்களுக்கு ஒவ்வொரு வகையான வேலையைச் செய்வதற்கு தனித் தனியான மக்கள் இருந்தார்கள். காலகதியில் தொழில் ரீதியாக ஒரு சமூகமாக அவர்கள் அடையாளம் காணப்பட்டனர். இது "குடிமை" முறை என அழைக்கப்பட்டது. இதுவே பின்னர் சாதி என்று உருவானது.

குடிமை முறையின் எச்சங்களாக சலவைத் தொழில் பறையடித்தல், கோயிற் சேவகம், கள் இறக்குதல், தேங்காய் பிடுங்குதல் போன்ற ஒரு சில தொழில்களே தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இதில் மீன்பிடித் தொழில் புரிவோர் இந்தக் குடிமை முறைக்குள் அடங்கவில்லை. நிலத்தில் வேளாண்மை செய்து வாழ்ந்ததுபோல கடலில் உள்ள உற்பத்திகளை அறுவடை செய்தவர்களே அவர்கள். இவ்விரு தொழில்களும் பிரதான தொழில்களாக உள்ளன.**

சலவைத்தொழிலைப் பொறுத்தவரை நவீன மயப்படுத்தப்பட்டு வீடுகளில் போய் உடுப்புக்களை எடுத்துச்செல்லும் வழமை குறைந்து, கடைகளில் கொண்டுபோய் கொடுக்கின்ற நிலை மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

**சடங்குகளில் வெள்ளை கட்டுதல் ஒரு நடைமுறையாகவும், கலாசார விடயமாகவும் பேணப்பட்டாலும் தற்போது அழகிய பந் தல்கள் பூட்டப்பட்டு, அலங்கார விளக்குகள் பொருத்தப் படுவதால், பந்தல் போட்டு வெள்ளை கட்டும் நிகழ்வு மாறியுள்ளது. இது ஒரு குடிமை முறையின் கையிலிருந்து பறிக்கப்பட்டு, அதை ஒரு பொதுத்தொழிலாக பலரும் செய்யும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.**



பழைய வீடுகள் ஓலை வீடுகளாக இருந்தமையால், கூரையிலிருந்து எப்போதும் தூசுகள், பூச்சிகள் என்பன விழுந்துகொண்டிருக்கும். அவை உணவிலோ, நல்ல நிகழ்வு நடைபெறும்போதோ கொட்டக்கூடாது என்பதற்காகவே முன்னைய காலங்களில் வெள்ளைத் துணி கூரையின் கட்டப்பட்டது. ஆனால்தற்போது உள்வளத்தில் சீலிங் அடித்த வீடுளில் கூட பழைய பழக்க தோசத்தில் வெள்ளை கட்டுவதைக் காணமுடிகிறது.

குடிமை முறையில் குறிப்பிட்டதொழிலை அவர்கள் தொடர்ந்து செய்வதற்கு நிலச் சுவாந்தர்களின் நிலங்களில் குடியிருத்தப்பட்டிருப்பர். நெல்லு, தேங்காய் மற்றும் பொருட்கள் என்றே அவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன.

**தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக மாறுவதற்கு தடையாக உள்ள இந்தச் சாதி அமைப்பின் கட்டமைப்பை மாற்றுவதற்கு தமிழ் புத்திஜீவிகளோ, அரசியல்வாதிகளோ சிந்தனை ரீதியிலான எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்காது விட்டது துரதிஸ்டமே.**

ஆரம்ப காலங்களில் இவ்விடயத்தில் ஒரு சில முயற்சிகள் மு.தளையசிங்கம் போன்ற ஆத்மீகவாதிகளாலும், கொமினிஸ் கட்சியினாலும் முன்னெடுக்கப்பட்டு வந்தபோதிலும் அவை பின்நாட்களில் கைவிடப்பட்டன. இது விடுதலைப் புலிகளின் காலத்தில் ஒரு புதிய பரிமாணத்தை உருவாக்கி வந்தபோதிலும், 2009 ஆம் ஆண்டிற்குப் பின்பான காலகட்டத்தில் அவை வலுவிழந்து விட்டன.

**ஆயுதப் போராட்டத்தில் வேளாளர்களின் தொகை மிகக் குறைவானதே. ஆயுதப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டதன் பின் "ஜனநாயக அரசியல்" என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் அவர்களே தலைமைதாங்குகின்றனர். இவர்கள் சாதாரண தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய பிரச்சினைகளை ஒருபோதும் கண்டுகொள்ள மாட்டார்கள். எப்போதும் தமது தனிப்பட்ட நலன்களுக்கு மாறாக செல்லமாட்டார்கள். அது சிங்களத் தலைவர்களுக்கும் நன்கு தெரியும்.**

சாதி அமைப்பின் கொடூரத்திலிருந்து மாறுவதற்காக பலர் கிறிஸ்தவ மதத்தை தழுவினார்கள். அதன்மூலம் ஆங்கிலக்கல்வி, தொழில் வாய்ப்பு என்பனவற்றைப் பெற்று பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட இலங்கையில் வாழுபவர்களில் பலர் வடகிழக்கை விட்டு வெளியேறி வேறு மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழ் அரசியற் தலைவர்கள் "தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஆடப்பட்ட நாடகமே சமபந்திப் போசனம்" என்பதாகும். இது தேர்தலுக்கான ஒரு தற்காலிக ஏற்பாடாக இருந்ததே தவிர, அது சாதிய முறையில் மாற்றங்களைக் கொண்டுவரவில்லை.

கொமினிஷ்க் கட்சி இவர்களுக்கு ஒரு தலைமைத்துவத்தை வழங்கியது. இது பாட்டாளி வர்க்கத்தை ஓர் அமைப்பாக மாற்றியிருந்தது. அதன் மூலம் பல நன்மைகளை அடையக்கூடிய வாய்ப்பு இம்மக்களுக்கு இருந்தபோதிலும், **பின்நாட்களில் ஏற்பட்ட மொஸ்கோ, சீனப் பிரிவுகளும் சிங்களத் தலைவர்களிடம் வெளிப்பட்ட இனவாதச் சிந்தனைகளும் கொமினிஸ் கட்சிகள் வலுவிழந்து போக காரணமாயிற்று.**

கொமினிஸ்கட்சி " கடவுள் இல்லை என்று கூறும் கட்சி" என்று பயம் காட்டி வேளாள உயர்சாதியினர் அக்கட்சியில் சேரவில்லை. அவர்களில் பெரும்பாலானோரர் பாட்டாளிவர்க்கத்தில் அடங்கவும் இல்லை. எனவே கொமினிஸ் கட்சியின் வீழ்ச்சியில் மகிழ்ந்தவர்கள் வேளாள வர்க்கத்தினரே. சமூகப் புரட்சி ஒன்றின் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் சித்தாந்த ரீதியில் முன்னேறுவதை அவர்கள் ஒருபோதும் விரும்பியிருக்கவில்லை.

வேளாள வர்க்கம் தமது கோயில் திருவிழாக்களின்போது தாழ்த்தப்பட்ட மக்களைக் கொண்டு கூத்துப்போடுவித்து, வருடாவருடம் அவர்களைக் கடனாளியாக்கி, பொரு ளாதாரத்தில் அவர்களை எழும்பவிடாது தம்மில் தங்கிநிற்க வைத்தனர். பல சந்ததிகளைக் கண்ட அந்த மக்கள் முன்னேற முடியாது போனமைக்கு இது பிரதான காரணமாகும்.

**இந்து மதம் வர்ணாச்சிரம தர்மக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்வதால், சாதி பேணப்படுகிறது. ஆனால், சூத்திரர்கள் என்ற பிரிவுக்குள்தான் வேளாளர்களும் ஏனைய அனைத்து சாதிப்பிரிவினரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்பது பலருக்குத் தெரிந்திருப்பதில்லை.**

திருவிழாக்கள் என்ற பாணியில் தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் வேளாளர்களின் தலைமையில் பிரிந்து நின்றதால் அவர்களுக்குள் ஒற்று-மை ஏற்படாதபடி பார்த்துக்கொண்டனர். இவர்கள் வெறும் கூலிகளாகவே பார்க்கப்பட்டனர்.

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது அரசியல் உரிமைக்காக தமது சாதியின்


(தொடர்ச்சி 27 ஆம் பக்கம்)

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்:

## ஒபாமாவின் தலைமையும் வெள்ளையின பேரினவாதத்தின் எழுச்சியும்

சிவா மு. ஈஸ்வரமூர்த்தி

ஜனநாயகத்தின் அடையாளம் என்று தன்னைத்தானே பெயர் சூட்டியுள்ள அமெரிக்காவின் தலைவருக்கான தேர்தல் 4 வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறுவதுண்டு. இம்முறை நவம்பர் 8 ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக்கட்சி (Republican Party) வேட்பாளராக ரொனால்ட் றம்ஸ் (Donald Trump) ) உம். ஜனநாயக் கட்சியின் (Democratic Party) வேட்பாளராக இடதுசாரி செயற்பாடாளர் (Bernie Sanders) ஐ பின் தள்ளி ஹிலாரி கிளிங்ரன் (Hillary Clinton) ம். பசுமைக் கட்சியின் (Green Party) வேட்பாளராக ஜில் ஸ்ரென் (Jill Stein) உம் Libertarian கட்சி சார்பில் ஹரி ஜோன்சன் (Gary Johnson) உம் போட்டியிடுகின்றனர்.



பல்வேறு கட்சிகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டாலும் குடியரசுக் கட்சி (Republican Party) ஜனநாயகக் கட்சி (Democratic Party) என்ற இரு கட்சிகளுக்கிடையே தலைவர் தெரிவிற்கான நேரடிப் போட்டியே இந்தத் தேர்தலிலும் வழமை போல் நடைபெற இருக்கின்றது. தனிநபர் ஜனநாயகத்தின் அடையாளமாக தம்மைக் காட்டிக் கொண்டாலும் தனிநபர் எதேச்சாதிகாரத்தின் செயற்பாடாகவே அமெரிக்க ஜனநாயகம் பெரும்பாலும் செயற்படுவதுண்டு. எனவே அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுபவர் உலக ஒழுங்கை மாற்றியமைக்கும் வல்லமை படைத்தவர்களாக உலகம் பார்ப்பது வழமையாகிவிட்டது. **பிரதிநிதிகள் சபை, செனட் சபை சட்டங்களை இயற்றும் சபை என்று மூன்று சபைகளை தன்னகத்தே அமெரிக்க அரசாட்சி முறமை கொண்டிருந்தாலும் அமெரிக்க தலைவருக்கு (ஜனாதிபதி) இருக்கும் வீற்றோ பவரை ஒத்த அதிகாரம் தனிநபர் எதேச்கார அதிகார மையத்திற்கு அமெரிக்க ஆட்சியில் வாய்பளித்திருக்கின்றது.**

அமெரிக்காவில். குடியரசுக் கட்சி. ஜனநாயகக்கட்சி என்ற இரு கட்சிகளுக்கிடையே ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் போட்டியே பெரும்பாலும் நடைபெறுவதுண்டு. வெளித் தோற்றத்திற்கு குடியரசுக்கட்சி அமெரிக்க மக்களின் நலன்களை மட்டும் முன்நிறுத்தி பெரும்பான்மை வெள்ளையின மக்களின் தேசியத்தை மட்டும் தூக்குப்பிடிக்கும் இனவாதம் மேலோங்கிய கட்சியாகவும் இதற்காக உலகம் பூராகவும் அமெரிக்காவின் நலன்களை முதன்மைப் படுத்த போரை விரும்பும் கட்சியாகவும் தன்னைக்காட்டிக் கொள்கின்றது. இதன் மறுவழத்தில் ஜனநாயகக் கட்சி அமெரிக்காவில் வாழும் சகல இன மக்களையும் குறிப்பாக கறுப்பின மக்களையும் ஏனைய ஸ்பானிய மொழி பேசும் மக்கள். ஆசிய மக்களையும் அரவணைக்கும் போக்கையுடையவர் என்றும். தம்மை உலக நாடுகளிடையே சண்டையை தவிர்த்துச் சமானத்தை விரும்பவர்கள் என்ற பார்வையை உலக மக்களிடம் காட்சிப்படுத்துகின்றவர்கள். ஆனால் யதார்த்தத்தில் இவர்களில் (இருவரில்) யார் ஆட்சிக்கு வந்தாலும் அமெரிக்க ஆளும் வர்க்கத்தில் மாற்றம் ஏற்படாதிருப்பதினால் இரு ஆட்சிகாலங்களிலும் பாரிய வித்தியாசங்களை காண முடிவதில்லை. குறிப்பாக **உலகில் அமெரிக்கர்களின் நலன்களே முக்கியம். தாமே உலகின் முதன்மையான குடி. எல்லா வளங்களையும் அனுபவிக்க உருத்துடையவர்கள் உலகிற்கு ஜனநாயகத்தையும் நீதியையும் தான் செயற்படுத்தும் முறமைகளிலேயே உருவாக்க முடியும் என்று நம்புபவர்கள். தமக்கு சார்பாக மட்டும் உலகின் எல்லாநாடுகளும் இருக்க வேண்டும் அன்றேல் இவர்கள் தீண்டத்தகாதவர்கள் வேண்டாதவர்கள் என்ற வகையில் உலகின் பொலிஸ்காரன் போல் நடக்க முற்படுபவர்கள்.**

இந்தப் பொதுப் போக்கிலிருந்து யாராவது விலக முற்பட்டால் அவர்களுக்கு மாட்டின் லூதர் கிங்கிற்கு அல்லது ஆபிரகாம் லிங்கனுக்கு எற்பட்ட நிலமை அமெரிக்கர் ஒருவரால் நிகழ்த்தப்படும் என்ற வரலாற்றை கொண்டவர்கள். இந்த நிலமையிலேயே அமெரிக்காவின் முதல் கறுப்பின தலைவரான பராக் ஒபாமா அமெரிக்க மக்களால் தெரிவு செய்யப்பட்டார். ஒபாமாவின் தெரிவு அவரின் தெரிவு என்பதை விட ஜோர்ஜ் புஸ் போன்ற ஒருவரை தவிர்த்தல் என்பதன் வெளிப்பாடே ஆகும்.

2009 ஜனவரி 20ம் திகதி கறுப்பின தலைவர் பராக் ஒபமா அமெரிக்காவின் ஜனாதிபதியாக பதவியேற்ற போது முழு உலகமும் வியந்து நின்றது. அமெரிக்க மக்கள் நிற வேறுபாடுகளை மறந்து வெள்ளையில்லாத கறுப்பின. மாநிற மக்களையும் தமக்குச் சமமான ஒரு பிரஜைகளாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று அளவுக்கு அதிகமாக வியந்து நின்றனர் சர்வதேச மக்கள். அன்றைய கால கட்டத்தில் அமெரிக்காவிற்கு உடம்பு முறுக்கை காட்டாத சமாதான முகம் காட்டும் ஒரு தலைவர் தேவைப்பட்டார். புஷ் குடும்பத்தினரின் உலகத்தின் பல நாடுகள் மீதான ஆக்கிரமிப்பு சாதாரண அமெரிக்க பிரஜைகளை உகைம் முழுவதும் இறுமாப்புடன் உல்லாசமாக பயணம் செய்யும் சுதந்திரத்தை அமெரிக்காவின் கூற்றில் கூறுவதென்றால் பயங்கரவாதத்தினால் தடுத்திருந்தது. அமெரிக்கர் என்ற காரணத்திற்காக எவ்விடத்திலும் தமது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் அமெரிக்காவின் கூற்றான இஸ்லாமிய தீவிரவாதிகளினால் ஏற்படலாம் என்ற நிலமை இருப்பதாக உணர்ந்தனர்.

இந்தக் கையை நீள வீசித்திரியும் சுதந்திரத்தை தாம் மீண்டும் பெறுவதற்கு ஒரு சமாதான முகம் உள்ள ஒருவர் அமெரிக்க சாதாரண குடிமகனுக்கு தமது நாட்டின் · தலைவர் ஆக வரவேண்டியதன் தேவை இருந்தது. இதற்குஅன்று அமெரிக்க மக்கள் கண்டு பிடித்த முகம் .ஜனநாயகச் கட்சியின் தேர்தல் வேட்பாளர் பராக் ஒபாமா. இன்னும் சிறப்பாக சொல்வதாயின் அமெரிக்க ஆளும் வர்க்கம். ஊடகங்கள் உருவாக்கிய. கண்டு பிடித்த முகம் பராக் ஒபாமா அவ்வளவே.

ஒபாமாவின் வருகை அமெரிக்க ஆளும் வர்க்கத்தை ஒன்றும் மாற்றி அமைக்கப் போவதில்லை மாறாக அவர் அவ்வாறு செய்ய முயன்றால் அவருக்கும் மாட்டின் லூதர் கிங்கிற்கு நடந்தது போன்ற நிகழ்வை யாரோ ஒருவர் நிகழ்த்தி முடிப்பார் என்று எம்மைப் போன்ற பலர் தமது அரசியல் ஆய்வுக் கட்டுரைகளில் விபரித்திருந்தோம். அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் வருபங்களை ஒபமாவும் ஏனைய ஜனாதிபதிகள் போல் தனது முதலாவது தவணையில் நிரூபித்துக் காட்டினார். இதற்கான பிரதியுபகாரத்தை ஒபமாவை இரண்டாவது தவணைக்கான ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கடசியன் வேட்பாளராக அமெரிக்க ஆளும் வர்க்கமும் ஊடகங்களும் இணைந்தே நிறைவேற்றினர்.

(தொடர்ச்சி 08 ஆம் பக்கம்)

# அண்ணாச்சி பதில்கள்

ஸ்ரீரங்கன் - மல்லாகம்

**கேள்வி: பொதுவாக வேதக்கோயில்கள் கடற்கரையில் தான் உண்டு. மடுமாதா மட்டும் எவ்வாறு காட்டிற்குள் கட்டப்பட்டது?**

**பதில்:** சரியான அவதானிப்புத்தான். மடுமாதா கோயில் போர்த்துக்கேயரால் மாந்தை கடற்கரையில் தான் முதலிற் கட்டப்பட்டிருந்தது. ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றியபோது கத்தோலிக்கத் தேவாலயங்களை உடைத்தார்கள். அந்தக் கட்டத்தில் மாதாவின் திருச்சொரூபத்தை அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் கொண்டுசென்று ஒளித்துவைத்தார்கள். அதனாற்தான் மடுக்காட்டில், நடுக்காட்டில் மருதமடுமாதா கோவில் உள்ளது.

குமாரவேல்- மன்னார்

**கேள்வி:** செக்கனைன்ற் ஆக வாங்கினனான் என்று கூறுகிறார்களே. அது சரியா?

**பதில்:** இல்லை Second Hand என்பதே சரியானது. இந்த ஆங்கிலச் சொல்லை சரியாக உச்சரித்தால் அப்பிழை வராது. இதன் அர்த்தம் "இது புதியதல்ல. முதலில் யாரோ ஒருவர் பாவித்தது" என்பதாகும்.



இ.மார்க்கண்டு - வவுனியா

**கேள்வி: தற்போதுள்ள பயிர் விதைகளை ஹைபிறிட் என்கிறார்கள். அவை ஒருதடவை தான் முளைக்கும். முன்புபோல மீள முளைக்கும் வழி உண்டா?**



**பதில்:** இதுகூட ஒரு பண்பாட்டு அழிப்பின் அடையாளம் தான். மட்டுவில் கத்தரிக்காயும், பூநகரி மொட்டைக்கறுப்பன் நெல்லும் இன்னும் எவ்வளவு காலம் சென்றாலும் முளைக்கும்.

ஹைபிறிட் என்ற க லப்பு இனத்தை நம்பியிராது பாரம்பரிய விதைகளைப் பேணுவது நல்லதுதான். அது எமது மண்ணோடும், பண்பாட்டோடும், வாழ்வியலோடும், ஆரோக்கியத்தோடும் சம்பந்தப்பட்டது.

எம்.உவைஷ் - புத்தளம்

**கேள்வி: VIP என்று பொதுவாக கூறப்படுகிறதே அது என்ன?**

**பதில்:** நீங்கள் குறிப்பிட்ட VIP யை விடவும் மேலான ஒன்றுள்ளது. அது VVIP என்பதாகும். அதாவது Very Very Important Person போப்பாண்டவர் அல்லது ஒரு நாட்டின் தலைவர் போன்றவர்களுக்குக் கொடுக்கப்படும் அந்தஸ்தும், பாதுகாப்பும் இதற்குள் அடங்கும்.

தாங்கள் குறிப்பிடும் VIP என்பது Very Important Person மிக முக்கிய நபர் ஓர் அமைச்சர், இராணுவ உயரதிகாரிகள் போன்றோர் உள்ளடக்கப்படுவர். இவர்களுக்கும் அந்தஸ்து ரீதியாகவும், பாதுகாப்பு ரீதியாகவும் இவை வழங்கப்படும்.



சி.தாட்சாயினி - திருநெல்வேலி

**கேள்வி: அவுஸ்ரேலியாவின் பழங்குடிகள் யார்?**

**பதில்:** இவர்கள் அபோர்றியின்ஸ் (Aborigine) என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களே அவுஸ்ரேலியாவின் பழங்குடி மக்கள்.

இப்பழங்குடி மக்கள் தற்போது வேட்டையாடுதல், பாரம்பரிய வாழ்க்கை என்பவற்றிலிருந்து மாற்றப்பட்டு வருகின்றனர். இவர்கள் தமது பாரம்பரிய உணவையும், உடல் உழைப்பையும் கைவிட்டதால் நீரிழிவு நோய்க்கு உட்பட்டுள்ளனர். காலகதியில் இவ்வினம் அழிந்துவிடவே வாய்ப்புண்டு. பூமராங் என்ற கற்கால ஆயுதத்தைப் பயன்படுத்துவர். அந்த வளைந்த ஆயுதத்தை எறிந்தால் அது மீண்டும் அவர்களை நோக்கித் திரும்பிவரும்.



காவியா - மட்டக்குளி

**கேள்வி: சுமைதாங்கிக் கல் என்பதன் விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.**

**பதில்:** முன்னைய காலத்தில் கால்நடையாகவே மக்கள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வது வழக்கம். அப்போது பல பொருட்களை தலையில் சுமந்து செல்வர்.

இவ்வாறு சுமந்து செல்லும் சுமைகளை கீழே இறக்கி வைப்பது சிரமம். அவ்வாறு இறக்கி வைத்தால் மீண்டும் தலையில் வைப்பதற்கு வேறு யாராவது உதவவேண்டும். ஆனால், எல்லா நேரங்களிலும் மனிதர்கள் அங்கு இருக்கப்போவதில்லை. இதனால் உயரமான சுமைதாங்கிக் கற்களின் மீது அச்சுமைகளை வைத்துவிட்டு, மீண்டும் தலையில் எடுத்து வைப்பது சுலபம்.

கர்ப்பிணிப் பெண்கள் யாராவது இறந்தால் அவர்களின் நினைவாகவே சுமைதாங்கிக் கற்கள் கட்டப்பட்டன.

நியூட்டன் - இளவாலை


**கேள்வி: "சிங்களவனுக்கு பயப்படக்கூடாது" என்று தமிழ் அரசியல்வாதிகள் சிலர் கூறிவருகிறார்களே அது சரியா?**

**பதில்:** அவர்கள் வெள்ளை வேட்டிகட்டி மேடைகளில் இவ்வாறு பேசுவார்கள் "சிங்களவனுக்குப் பயப்படாதவர்கள் தான் ஆயுதம் ஏந்திப் போராடப் போனவர்கள். தற்போது அவர்களின் நிலை, அவர்களின் குடும்பங்களின் நிலை என்ன என்பது தெரிகிறதல்லவா? சிங்களவருக்குப் பயப்படாதவர்கள் கொழும்பிலும், வெளிநாடுகளிலும் எப்போதோ வாழப் பழகிக்கொண்டார்கள் .

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இரண்டாவது தவணைக்கான அமெரிக்க தேர்தலில் தனது வெற்றியை உறுதிப்படுத்திய ஒபாமா தனது முதலாம் ஆண்டு ஆட்சிக் காலத்தில் அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு முழுமையான விசுவாசியாக நின்று உலகம் முழு வதும் போர் புரிந்து முடித்தது போல் இரண்டாவது தவணையிலும் இதனைத் தொடர்ந்தார் ஒபாமா. சிறப்பாக ரஷ்யாவிற்கு எதிராக, தனக்கு சார்பு நிலையில் இல்லாத அரபு முஸ்லீம்களுக்கு எதிராக, தமக்குச் சார்பாக செயற்படாத மேற்கு ஆபிரிக்க நாடுகளுக்கு எதிராக செயற்படுத்தினார். கூடவே ஐ.எஸ்.ஐ.எஸ் என்ற அமைப்பை ஜோரஜ் புஸ்



ஆபிரகாம் இலிங்கன்

ஒருவாக்கிய அல்கைதா மாதிரி உருவாக்கி சிரியாவிற்கு எதிரான செயற்பாட்டில் களம் இறக்கினார் எப்போதும் போல் இஸ் ரேலின் அடாவடித்தனங்களுக்கு தனது வீற்றோ அதிகாரத்தின் மூலம் பாதுகாப்பை வழங்கியும் வந்தார். இதற்கு அமெரிக்கர்களின் நன்றிக்கடனாக இரண்டு தடவையும் தொடர் வெற்றியை கறுப்பின தலைவருக்குகாணிக்கையாகசெலுத்தினர்.

இதுதான் ஒபமாவின் ஜனாதிபதி ஆட்சிக்கால வரலாறு. அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் அமெரிக்கர்களின் தலைவனாகவும் உலக மக்களின் பொலிஸ்காரனாகவுமே இருக்க வேண்டும்... இருக்க முடியும். அன்றேல் அவர்கள் ஆபிரகாம் லிங்கனின் முடிவை எதிர் நோக்க வேண்டிவரும் என்ற வரலாற்றை ஒபாமாவும் புரிந்து கொண்டு செயற்பட்டார் இரண்டு தவணை ஆட்சியை முடித்து சமாதானத்திற்கான நோபல் பரிசையும் வென்றும் விட்டார் உலகத்தின் ஒரே ஒரு தலைமை நாடு தாம் தான் என்பதை அமெரிக்கர்களின் விருப்பத்தையும் இதுவரை நிரூபித்தும் விட்டார் வேறு என்ன வேண்டும் அமெரிக்க ஆளும் வர்க்கத்திற்கு.

ஒபாமா தனது 8 வருட ஆட்சிக்காலத்தில் ஜோர்ஜ் டபிள்யூ புஸ் விடவும் கூடிய காலம் போர்புரிந்த ஜனாதிபதியாகவும் மேலும் ஏனைய அமெரிக்காவின் தலைவர்களை விட கூடுதலான காலத்து யுத்தம் செய்த ஜனாதிபதியாகவும் இருந்திருக்கின்றார் என்று நியூயோர் ரைம்ஸ் Mark Landler என்பவர் தனது கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளார் மேலும் அவர் தனது கட்டுரையில் 2009 ஆம் ஆண்டு நோபல் பரிசை வென்ற ஒபமா இன்னமும் ஆப்கானிஸ்தான் ஈராக் சிரியா போன்ற நாடுகளில் தனது பதவிக்காலம் முடியும் வரை அமெரிக்க படைகளை வைத்திருக்கும் நிலமையில் உள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**{Foot Note: For Obama, an Unexpected Legacy of Two Full Terms at War (By MARK LANDLER- MAY 14, 2016 )**

President Obama accepting the Nobel Peace Prize in Oslo in 2009. Since then, he has tried to fulfill the promises he made as an antiwar candidate. Credit Doug Mills/The New York Times


WASHINGTON — President Obama came into office seven years ago pledging to end the wars of his predecessor, George W. Bush. On May 6, with eight months left before he vacates the White House, Mr. Obama passed a somber, little-noticed milestone: He has now been at war longer than Mr. Bush, or any other American president. If the United States remains in combat in Afghanistan, Iraq and Syria until the end of Mr. Obama's term — a near-certainty given the president's recent announcement that he will send 250 additional Special Operations forces to Syria — he will leave behind an improbable legacy as the only president in American history to serve two complete terms with the nation at war. Mr. Obama, who won the Nobel Peace Prize in 2009 and spent his years in the White House trying to fulfill the promises he made as an antiwar candidate, would have a longer tour of duty as a wartime president than Franklin D. Roosevelt, Lyndon B. Johnson, Richard M. Nixon or his hero Abraham Lincoln. Granted, Mr. Obama is leaving far fewer soldiers in harm's way — at least 4,087 in Iraq and 9,800 in Afghanistan — than the 200,000 troops he inherited from Mr. Bush in the two countries. But Mr. Obama has also approved strikes against terrorist groups in Libya, Pakistan, Somalia and Yemen, for a total of seven countries where his administration has taken military action.}

போருக்கு எதிரானவராக தன்னை அறிமுகப்படுத்தி அமெரிக்க தலவராக ஜனாபதித் தேர்தலில் நின்று வெற்றியடைந்த ஒபாமா தனது இரண்டு தவணைக் காலத்திலும் போருடன் இறுகப் பற்றிய படி அமெரிக்காவிற்கு ஜனதிபதியாக இருந்திருக்கினறார்.

ஒபாமாவிற்கு நோபல் பரிசு வழங்கியபோது கீழே உள்ளவாறு நோபல் பரிசை வழங்கியவரகள் குறிப்பிட்டிருந்தனர்.

'...2009 Nobel Peace Prize was awarded to United States President Barack Obama for his "extraordinary efforts to strengthen international diplomacy and cooperation between peoples".

இதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒருவருக்கு தகுதியுள்ளதா என்பதை முடிவு செய்யும் பொறுப்பை எனது கட்டுரையை வாசிக்கும் உங்களிடமே விட்டுவிடுகின்றேன் கியுபாவுடனான 'புதிய முறை உறவுகளும்", வியட்நாமிற்கு விஜயம் செய்த அமெரிக்க அதிபரை 'வரவேற்ற நிகழ்ளுகளும்" தடைகளால் நிறைவேற்ற முடியாததை தடைகளை அகற்றி உள்ளே புகுந்தாவது குழப்பங்களை விளை



மாட்டீன் லூதர் கிங்

விக்கலாம் என்று கபட நோக்கங்களுக்கானவையே. இதனை நாம் 1984 களில் லிபியாவுடன் கை கோர்த்து உள்ளே புகுந்து பின்பு கை கோர்த்த கடாபியை தெருவில் கூட ஓடி ஒழிய முடிய முடியாமல் ஆகாய மார்க தாக்குதலை தரை வழிக் கலகக் காரர்களுக்கு உதவி செய்ததன் மூலம் தெருவில் சுட்டு வீழ்த்தி இன்று வரை கலக நாடாக்கிய வரலாற்றில் காண முடியும்.

ஒபமா மற்றைய அமெரிக்க ஜனாதிபதிகளிடம் இருந்து வேறுபட்டு நின்றாரா..? என்றால் இல்லை என்பதே பதிலாக அவரின் ஜனாதிபதி ஆட்சிக்கால வரலாறு எழுதிநிற்கின்றது. கூடவே றொனால்ட் ட்றம்ஸ் போன்ற வெளிப்படையாகவே வெள்ளையின் இனவெறியை தேர்தல் பிரச்சாரமாக முன்னெடுக்கும் நிலமையையும், இதனை கை கொட்டி வரவேற்கும் வெட்கம் கெட்ட செயற்பாட்டை பகிரங்கமாக செய்யும் அமெரிகர்களையும் மேலும் உருவாக்கி விட்டிருக்கின்றது என்பதை வரலாறு எமக்கு காட்டி நிற்கின்றது. சகல அமெரிக்கர்களுக்கும் இலவச மருத்துவம் என்ற கனடிய நாட்டு நடப்புக்களை நிறைவேற்றுவதிலும் இவர் வெற்றி பெறவில்லை என்பது உள்நாட்டிலும் முதலாளிகளுக்கு எதிரான சமானிய மக்களின் நலன்களை விலை கொடுத்த நிகழ்வுகளாகவே அமைகின்றது.


## வெளிநாட்டவர் இப்படியும் உதவலாம்




புங்குடுதீவு மக்கள் விழிப்புணர்வு சபை - சுவிஸ்

## அனுபவப் பகிர்வு

சிறைக்குள் என்ற இந்நூல் 2002 ஆம் ஆண்டு மாஸ்ரர் என்பவரால் எழுதப்பட்டதாகும். இவர் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு 2 வருடங்கள் சிறைத்துன்பத்தை அனுபவித்தவர். போகம்பற, களுத் துறை, பூசா, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அனுராதபுர சிறைகளில் தனது சிறை வாழ்க்கையை அனுபவித்தவர். இக்கொடிய நாட்களின் தனது சிறை அனுபவங்களைக் குறிப்புக்களாக எழுதி, இன்னும் பல கைதிகளின் அனுபவங்களையும் தொகுத்து இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 2002 இல் எழுதப்பட்ட இந்நூல் எந்தவித மாற்றங்களும் செய்யாது அவ்வாறே வெளியிடப்படுகின்றது.
- ஆசிரியர்




(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**26.10.2000 அன்று சிறைக்குள் வழங் கப்பட்ட தினகரன், வீரகேசரி தமிழ்ப்பத்திரி கைகளிலும், லங்காதீப, சிலுமின ஆகிய சிங்கள பத்திரிகைகளிலும் பல துண்டுகள் தாறு மாறாக வெட்டப்பட்டு தணிக்கை செய்யப்பட்டி ருந்தது.** பொதுவாக சிறைச்சாலைக்குள் வழங் கப்படுகின்ற பத்திரிகைகளில் சிறைச்சாலை பற்றிய செய்திகள் தணிக்கை செய்யப்படும் என முன்பு குறிப்பிட்டிருக்கிறேன். அதற்கு பல காரணங்கள் உண்டு.

1. யாராவது தப்பியோடியிருந்தால் அவ னுடன் தொடர்புபட்ட ஏனைய வழக்காளிகள் வேறு சிறைகளில் இருப்பின் அவர்களும் தப்பியோடும் முயற்சிகளில் இறங்கக்கூடும் என்பது.


2. பொதுவாகவே தப்பியோடும் மனநிலையில் நீண்டகால கைதிகள் தப்பியோடிய புதிய யுக்தி களை அவர்கள் அறியாது இருக்கவேண்டும்.

3. 1983 இல் வெலிக்கடையில் நிகழ்ந்தது போல தமிழ் கைதிகள் படுகொலை, வேறு நடந்தால் அதைப் பின்பற்றி வேறு சிறைகளில் தவிர்ப்பது.

போகம்பர போன்ற பெரிய சிறைகளில் நீண்ட பல வருடங்களை தள்ளிக் கொண்டிருக்கும் கைதி களில் 'சிலர் சிறைச்சாலை ஊழியர்களைவிட சக்தி மிக்கவர்களாகவும், நினைத்ததைச் சாதிக்கக் கூடிய வல்லமையுடையவர்களாகவும் இருப்பதால் சிறைச்சாலை நிர்வாகத்தால் தணிக்கை செய்யப் பட்ட குறிப்பிட்ட செய்திகளை மட்டும் கொண்ட பக்கங்களை சிறைச்சாலை ஊழியர்களைக் கொண்டே உள்ளே எடுத்துவிடுகின்றனர்.

பூஸா, களுத்துறை சிறைச்சாலைகளில் இருந்து வழக்கிற்காக தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் வரையில் போகம்பரைக்கு கொண்டு வரப்பட்டனர். இந்நிலையில் தமிழ் அரசி யல் 'கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. நிர் வாகத்திற்கு சற்று பிரச்சினையாக இருக்கலாம். பிந்துனுவேவ என்ற இடத்தில் சிங்கள கைதி கள் **தமிழர்களால் கொல்லப்பட்டிருந்தால் அதன் உடனடி தாக்கத்தையும், குமுறல்களையும் நாம் சுமக்க வேண்டியிருந்திருக்கும். ஆனால் அங்கு தமிழ் கைதிகள் கொல்லப்பட்டதால் சிங்கள கைதிகளின் உணர்ச்சிகள் தூண்டப்படாமல் அல்லது கண்டு கொள்ளப்படாமல் விடுகின்ற ஒரு நிலை காணப்பட்டிருக்கலாம். அல்லது அவ்வாறான ஒரு வேலைத்திட்டத்தை ஒழுங்குபடுத்தி நடாத்தக்கூடிய ஐயா– மார் (சிங்களத்தில் சண்டியர்கள் என்று பொருள்படும்) இல்லாதிருக்கலாம்.**

26 ஆம் திகதி மாலை யில் பூட்டப்படுவதற்கான மணி அடித் தாயிற்று. நாம் எல்லோரும் எம்மை பூட்டிக்கொள்ள தயாராகிக் கொண் டோம். (சிறுநீர் கழிக்கும் வாளி, கை கழுவும் வாளி, குடிக்கத் தண்ணீர் எல்லாம் எடுத்து வைத்தோம்) திடீ ரென லொக்கேசனுக்கு பொறுப்பான



அதிகாரி வந்து அறைக்குள் இருந்த எல்லாப் பொருட்களையும் எடுத்துக் கொண்டு B பிரத்தியே பிரிவில் இருந்து வெளியே வரச் சான்னார். ஏன் எதற்கு என்று கேள்வி கேட்க முடியாது. எங்கள் பகுதியில் இருந்த ஏனைய சிங்கள கைதிகளும் நாம் வெளியேறுவதை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நாம் அனைவரும் ஏதோ இராணுவம் அத்துமீறி ஊருக்குள் புகும்போது கைக்கு எட்டிய பொருட்களுடன் இடம்பெயருவதைப் போல ஒரு கையில் சாப்பாடு, புடவைகள், பாய், சிறுநீர் கழிக்கும் வாளிகள் எல்லாவற்றுடனும் வெளிக்கதவுக்கருகில் வந்தபோது அதிவிசேட பாதுகாப்பிற்காக தனி யான சுற்றுமதிலுடன் அமைக்கப்பட்டிருந்த மக் சிமம் (Maximum) பகுதிக்குள் இருந்த கைதி களை அவசர அவசரமாக வெளியே எடுத்துக் கொண்டிருப்பதை அவதானித்தோம்.

ஏற்கனவே போகம்பரை சிறையில் பழக் கப்பட்ட எங்களில் ஒருவர் சொன்னார் **"எங்களை மக்சிமத்திற்குள் போடப்போறார்கள்"** என்று மக்சிமம் பகுதி என்பது போகம்பறைச் சிறைக்குள் உள்ள இன்னோர் சிறை.

அங்கு ஏறத்தாழ 20 அடி உயரமான மதில் சுவருக்கும் உள்ளே உள்ள கட்டத்திற்குமான இடைவெளி 8 அடிக்குள் தான் இருந்தது. அதற்குள் நின்று எதுவும் வெளியே பார்க்கமுடியாது. எனது அனுபவத்தில் வானத்தை நீள்சதுரத்தில் கண்டது அன்று தான். காற்றோட்டமில்லாத பகுதி. உள்ளே 10 அறைகளும் 4 அடி கொண்ட விறாந் தையும் பின்புறமாக கழிப்பறை களும், குளிக்கும் தொட்டி யும் இருந்தது.

கட்டடத்திற்கு ஒரு கதவு மட்டும்தான் இருந்தது. அதைத் திறந்து உள்ளே போனாலும் ஒரு சிறிய அறையுண்டு. அதில் கரம் விளையாடும் வச தியும், கறுப்பு வெள்ளை ரீவி ஒன்றும் இருந்தது. அதற்கு அன்ரனா இல்லாததால் எந்நேரமும் மழை பெய்வது போல புள்ளிவிழும். அதற்குள் இடைக்கிடையில் விழும் விம்பங்களை படம் என்று பார்ப்பதுண்டு.

இப்போ காற்றோட்டம் இல்லாத சூழல். ஒருவர் கதைத்தால் கூட சத்தம் வெளியில் போகாது. எதிரொலித்துக் கொண்டேயிருக்கும். யாராவது இரண்டு பேர் சேர்ந்து சிரித்தால் காவலுக்கு இருக்கும் சிறைச்சாலை ஊழியர் **"கேகாண்ட எப்பா"** (சத்தம் போடவேண்டாம்) **"சத்த வெடி"** (சத்தம் கூட) என்று சிங்களத்தில் கத்துவான். கூட்டுக்குள் அடைபட்டிருக்கும் எங்க ளிடம் அதிகாரம் செலுத்துவது அவனுக்கு இலகு வாக இருக்கும். அதைவிட நாம் தமி ழர் என்பதும், புலிச் சந்தேக நபர்கள் (சிறையில் சந்தேக நபர்கள் என்று ஏற் றுக்கொள்வதில்லை என்பதும் மற்று மொரு சிக்கலான விடயம்).

இங்கு கடமையில் இருக்கும் அதி– காரி உள்ளே வந்ததும் மதிலில் உள்ள கதவை வெளியில் பூட்டிவிடுவார்கள். ஒரு வர் மட்டும் காவலில் இருப்பதால் திறப்பை அவரிடம் விட்டு வைப்பது ஆபத்து என்ப தும் மக்சிமம் பகுதிக்குள் யாரைப் போட்டுப் பூட்டினாலும் அவர்கள் முக்கியமானவர்கள் அல்லது எதையும் செய்யத்துணிவார்கள் என்ற எதிர்பார்ப்பு சிறைச்சாலை நிர் வாகத்துக்கு இருந்தது.

காலையில் திறந்துவிட்டால் கட்டடத் திற்கும் மதிலுக்கும் இடையில் உள்ள நீள்சதுர முற்றத்தில் ஓடுவது. நடப்பது என ஒவ்வொருவரும் தனது உடல்நிலைக்கேற்ப உடற்பயிற்சி செய் வதுண்டு. **எனது மனநிலையில் ஓடக்கூடிய உறுதியாக இருக்கவில்லை. நானும் இன்னொரு ஆசிரியரும் பலதையும் கதைத்துக் கொண்டு நடந்து திரிவதுண்டு. எனது குடும்பத்தைப் பற்றிய கவலை விழிப்பாக இருக்கும் எல்லா நேரங்களிலும் கனமான நினைவுகளைக் கொடுக்கும். எனது உடற்பாகத்தை விட இரட்டிப்பு பாரம்கொண்ட மனசு கனக்கும்.**


எம்மை மக்சிமம் பகுதியில் பூட்டிய மறுநாள் 27.10.2000 காலையில் போகம்பரை சிறைச்சாலை அத்தி யட்சகர் (SPவந்து எங்கள் அனைவரையும் கூப் பிட்டு கதைத்தார். "பிந் துனுவெவ சம்பவத்தை ஒட்டி இங்கு ஏதாவது பிரச்சினைகள் சிங்கள கைதிகளால் வரக்கூடும் என்று எதிர்பார்த்துத் தான் இங்கு மாற்றியுள் ளேன்.




(அடுத்த இதழில் ....)

நன்றி

# ஒரு மாணவன் 13 வருடம் பாடசாலையில் கல்வி கற்கும் உரிமை உண்டு



க.பொ.த (சா) பரீட்சையில் சித்திய டையாவிட்டாலும் க.பொ.த (உயர்) வகுப்பில் கல்வி கற்க ஒரு மாணவனோ, மாணவியோ அனுமதிக்கப்படலாம் என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரிய வசம் அறிவித்துள்ளார். இவ்வாறு மாணவர்களை உயர் கல்வி கற்க அனுமதிப்பதன் உள்ளார்ந்த நோக்கம் என்ன? அது மாணவர்களுக்கு எந்தவகையில் சாதகமானது என்பது பற்றி பேராசிரியர் மா. சின்னத்தம்பி அவர்களுடன் புதிய முகவரி சார்பில் நேர்காணல் ஒன்றை மேற்கொண்டிருந்தோம். அதனை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறோம்.

– ஆசிரியர்

**கேள்வி:** முன்பெல்லாம் ஒரு மாணவன் 9 ஆம் வகுப்பு வரை கட்டாயமாகப் படிக்கவேண்டும் என்ற நிலை இருந்தது .தற்போது அது 13 வரை இருப்பது அவசியம் எனப்படுகிறது. இது தேவைதானா?

**பதில்:** ஆரம்பத்தில் பாடசாலை என்பது படிப்பித்தல், பரீட்சை முடிவுகளைப் பார்த்து தொடர்ந்து படிக்கலாம் அல்லது படிக்க முடியாது என்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பின்னர் வகுப்பேற்றப் பரீட்சை என்பதற்கு அப்பால் சென்று எல்லோரும் அடுத்த வகுப்பிற்குச் செல்வது அவசியம் என முடிவெடுக்கப்பட்டது. (Automatic Promotion)

**கே:** பாடசாலையில் கல்விக்குத்தானே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதனால்தான் இலவச கல்வி என்ற விடயம் அமுல்படுத்தப்படுகிறதே.

**ப:** பாடசாலையில் இரண்டு விடயங்கள் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

1. பரீட்சை எழுதுவதற்காகப் படிப்பித்தல்

2. மாணவர்களுக்கான நலன்புரி நிலையமாக (welfare Center) செயற்பட்டு வருவது. 2014 டிசம்பர் மாதம் வெளியிடப்பட்ட கல்விசார் சுற்றுநிருபம் ஒன்றில் குறிப்பிடப்பட்ட பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான 08 விடயங்களில் "நலன்புரி அம்சங்களைப் பேணவது" என்பதும் ஒன்று.

**கே:** இந்த விடயங்களுக்காக அரசு நிதி ஒதுக்கீடு ஏதையாவது விசேடமாகச் செய்கிறதா?

**ப:** ஆம். வருடாவருடம் இதற்காக 23000 கோடி ரூபாவினை அரசு ஒதுக்கி வருகிறது. இதன் மூலம் இளைஞர்களுக்கான ஒரு கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. இதன்மூலம் பிள்ளைகளுக்காக விசேட தேவைகளை பூர்த்தி செய்வதே அதன் நோக்கமாகும். திறமையான மாணவர்களை மட்டும் வளர்த்துவிடுதல் என்பதற்கு அப்பால் 1990 இன் பின் எல்லோருக்கும் சமத்துவத்தையும் வழங்கவேண்டும் என்ற நிலை உருவாக்கப்பட்டது. வளங்களையும் உயர்வதற்கான வாய்ப்புக்களையும் சமமாக வழங்குதல் என்பதே சமத்துவம்.

**கே:** மாணவர் நலன்புரி என்ற கருத்து எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்படுகிறது.

**ப:** நியாயத்தன்மை, வாய்ப்புக்களை வழங்குதல், மதிய உணவு வழங்குதல், சுத்தம் பேணுதல், சுகாதாரமான சூழலை வழங்குதல், கட்டணமின்றி பரீட்சையில் தோற்றுதல் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்படும்.

**கே:** இவ்வாறான வசதிகளை மாணவர்களுக்கு தொடர்ந்து வழங்கமுடியுமா?

**ப:** ஒரு மாணவனோ, மாணவியோ 13 வருடங்கள் பாடசாலையில் இருப்பதற்கான வாய்ப்பு இதன் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வாறான நலன்சார் சேவைகளை வழங்குகின்ற ஒரு நிறுவனமாக பாடசாலை இதுவரைகாலமும் இது உரியவாறு பயன்படுத்தவில்லை.

**கே:** அவ்வாறெனில் நலன்புரி விடயங்களால் கல்வி பாதிக்கப்பட வாய்ப்பு இருக்குமா?

**ப:** பரீட்சையில் சித்தியடையாத மாணவருக்கு நலன்புரிச் சலுகைகளை இல்லை என்ற கூறிவிட முடியாது. மனித வளத்தை மேம்படுத்தவே பரீட்சையின் அடைவு உதவும். ஒரு மாணவன் பரீட்சையில் சித்தியடையாததற்கு பல காரணங்கள் இருக்கமுடியும்.

**கே:** ஒரு மாணவன் வேறெந்த வகையில் பாடசாலைகளில் நன்மையடைய முடியும்.

**ப:** ஆரோக்கியம், சுத்தம், சுகாதாரம், ஊட்டம், கற்றல் வசதிகள் என சகல வழிகளிலும் ஊக்கத்தைக் கொடுத்தல். உள ரீதியான வளர்ச்சியை மேம்படுத்துவது என்பதே இதன் சாரம்சமாகும்.

**கே:** இதன் மூலம் எதைச்சாதிக்க முடியும்?

**ப:** மாணவர்களிடம் உள்ள "புதைநிலை ஆற்றலை" வெளிக்கொணர உதவும்.

உதாரணம்: தேசிய மட்டத்தில் கோலூன்றிப் பாய்தல் நிகழ்ச்சியில் (42 ஆவது தேசிய விளையாட்டு விழாவில்) முதலிடம் பெற்ற யாழ். மகாஜனாக் கல்லூரியின் மாணவியான செல்வி.ஜெ. அனித்தாவைக் குறிப்பிடலாம். அவரிடம் புதைந்திருந்த ஆற்றலை வெளிக்கொணர்ந்த சம்பவமே அது. யுத்தப் பாதிப்பிற்குள் அதிகம் உட்பட்ட அந்தப் பாடசாலையிலும், மைதானத்திலும் பயிற்சிபெற்று முதலிடம் பெற்றது மிகப்பெரும் சாதனையாகும். அம்மாணவி மேலும் பல வழிகளில் வளரவேண்டிய தேவை உள்ளது.

**கே:** அனித்தா என்ற மாணவிக்கு நலன்புரி விடயங்களில் உதவ முடியுமா?

**ப:** ஆம். தற்போது அவரை அந்த நிலைக்கு பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளருக்கு நன்றி கூறவேண்டும். இனிமேல் அந்த மாணவி கோலூன்றிப்பாயும் விளையாட்டிலேயே தன்னை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

அம்மாணவிக்கு அமெரிக்கன் ஆங்கில மொழியில் பயிற்சி அளிக்கவேண்டும். கோலூன்றி பாய்தல் விளையாட்டைப் பற்றியும், அவற்றின் சட்டதிட்டங்கள் பற்றியும் அந்த விளையாட்டில் சாதித்தவர்கள் பற்றியும் அனித்தா நிறைய அறியவேண்டியிருக்கும். ஆனால் அதற்கான பண வசதியோ, ஏனைய வசதிகளோ அவரிடம் இருக்காது. அவற்றை மேம் படுத்தினால் உலகப்போட்டிகளில் கலந்துகொள்ளவும், ஊடகங்களில் தனது விடயத்தை திராணியுடன் எடுத்துக்கூறவும் ஏதுவாக அமையும். தனிப்பட்டவர்கள்கூட இந்த மாணவியின் விடயத்தில் கவனம் செலுத்துவது நல்லது.

**கே:** இவ்வாறான படிப்புத் தவிர்ந்த வேறுபட்ட திறமையுள்ள மாணவர்களை எவ்வாறு அடையாளம் காணுவது?

**ப:** பூவின் மொட்டு ஒன்றை யாரும் விரித்துவிடுவதில்லை. அது தானாகவே விரியும். அதே போல ஒரு புளியங்கொட்டைக்குள் பெருவிருட்சமான புளியமரம் உறங்கிக்கொண்டிருப்பதை யாரும் கண்டுகொள்வதில்லை. அதேபோன்று மாணவர்களின் ஆற்றல் இயல்பாக வெளிவரும்போது அவற்றை இனங்கண்டு ஊக்குவிப்பது ஆசிரியர்களின் தலையாய கடப்பாடாகும்.

**கே:** 13 வருடம் மாணவர்கள் பாடசாலையில் படித்துத்தான் ஆகவேண்டும் என்பதில் வேறு எதை எதிர்பார்க்கலாம்? (தொடர்ச்சி 11 ஆம் பக்கம்...)

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**ப:** இது மாணவர்களுக்குரிய உரிமையாகும். மக்களின் வரிப்பணத்திலிருந்தே மாணவர்களுக்கான நலன்புரி நிதி பெறப்படுவதால் அவர்கள் அவற்றை அனுபவிக்க உரித்துடையவர்கள். இதனை 03 வகையில் வகைப்படுத்தலாம்.

1. பரீட்சையில் அடைவை மேம்படுத்துவது

2. அடைவு மட்டுமே ஆற்றல் என்றில்லாது மாணவர்களிடம் வேறு விடயங்களும் உண்டென்பதை அங்கீகரிப்பது.

3. சமூகத் தீமைகளுக்குள் இருந்து அவர்களைக் காப்பாற்றுவது. - **க.பொ.த (சா) பரீட்சையுடன் பாட-சாலையை விட்டு வெளியேறும் மாணவர்களுக்கு உடன-டியான சமூகப் பாதுகாப்பு, உடனடி தொழில் வாய்ப்பு என எதுவும் இல்லாதிருப்பதால் பிழையானவர்களால் இலகுவாக கையாளப்படக்கூடிய வாய்ப்பு உண்டு.**

கட்டிளம் பருவத்தினரான இவர்களது வயதுப்பிரிவில் அதிகம் பிரச்சினைகளுடன் இருப்பார்கள். குழப்பமான மனநிலை இருக்கும். இவ்வாறான மாணவர்கள் பாட-சாலைச் சூழலில் இருக்கும்போது மரியாதையைப் பெறுவர். இவர்களிடம் இருக்கும் பழிவாங்கும் உணர்வு கூட மட்டுப்படுத்தப்படும். பல்வேறு பாதிப்புக்களிலிருந்து அவர்களை காப்பாற்ற முடியும்.

**கே:** க.பொ.த(சா) பரீட்சையில் சித்தியடையாதவர்கள் அப்பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த (உயர்) படிப்பை மேற்கொள்ளும் மாணவர்களை குழப்பமாட்டார்களா?

**ப:** ஆரம்பத்தில் ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும் ஒன்றாக ஒரே பாடசாலையில் படிப்பிக்க முடியாது என்றார்கள். ஆனால், தனியார் கல்வி நிறுவனங்கள் இக்கருத்தை உடைத்துவிட்டன. முன்பு பெண் பிள்ளைகள், பாடசாலை, கோயில்கள், திருமணவைபவம் என செல்லுகின்ற நிலை மாறி, தாமாக தனியார் வகுப்புகளுக்குச் சென்று வரும் நிலைமாற்றம் ஏற்படவில்லையா? பெற்றோர்கள் அதற்கு அனுமதிக்கவில்லையா? பாடசாலைகளில் மட்டும் ஏன் இவ்வாறு நுணுக்கம் பிடிக்கவேண்டும்.

தனியார் கல்வி நிலையங்கள் பெண் பிள்ளைகளைக்கூட தனியாகத் தீர்மானம் எடுக்கும் வல்லமையை உருவாக்கி இருக்கின்றன என்றால் மறுப்பதற்கில்லை.

தனியார் ரியூசன் நிலையங்களில் முதல் முறை தோற்றியவர் இரண்டாம் முறை தோற்றியவர், மூன்றாம் முறை தோற்றியவர் என பலரும் இருந்து கற்கின்றனர். இதை ஏற்றுக்கொள்கின்ற நீங்கள் பாடசாலைகளுக்கு மாத்திரம் புதிய அணுகுமுறையை பிரயோகிப்பது எனக்கு கோபத்தை உண்டுபண்ணுகிறது.

**கே:** விசேட தேவையுடைய மாணவர்களை புறம்பாக வைத்து கல்வி புகட்டுவது சரியா?

**ப:** இல்லை. அப்படி ஒரு நிலை தற்போது இல்லை. அவ்வாறான மாணவர்களும் சமூகமயப் படுத்தப்பட்டுள்ளனர். ஓர் ஆசிரியரின் பணி என்ன? **"கற்றலில் இடர்படுபவனுக்கு ஆலோசனை வழங்குவது"** இந்தச் சூழல் எல்லாவற்றையும் உள்ளடக் வகுப்புக்களே (Inclusive class Room) தற்போது உள்ளன.

**கே:** தற்போதைய கல்வி முறையில் படிப்பு மட்டும் அல்லாது வேறு பல விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதில் எவற்றை விசேடமாக குறிப்பிட முடியும்.

**ப:** சமூக நீதிக்காக அரசின் நிதியைப் பயன்படுத்தி மாணவர்களை மேம்படுத்துதல் என்பதாகும்.

1. பிள்ளைகளுக்கு படிப்பைத் தவிர வேறு ஆற்றல்களும் உண்டு என்பதாகும்.

2. பாடசாலைக்கு உள்ளேயே 13 வருடங்கள் இருப்பதால் நிறைய வாய்ப்புக்கள் அவர்களுக்கு உண்டு.

3. பாதுகாப்பு, சமத்துவத்தையும் உறுதிப்படுத்துதல்

இவற்றின் மூலம் புதிய கல்வி வழிகாட்டிகளை உருவாக்கமுடியும். அல்லது ஏற்கனவே உள்ளவற்றை மாற்றியமைக்க முடியும்.

# யாழ்ப்பாணத்தில் அப்துல் கலாமின் பிறந்தநாளில்...

பழமையின் பொக்கிசமாம் பாரதத்தின் பெருமைந்தா இராம காதையின்
இராமேஸ்வரத்தின் பெற்றெடுத்த தவ மைந்தா நீயே
இந்தியாவின் அறிவியலின் பொக்கிசமே ஆண்டுகள் காலங்கள் சென்றாலும்
கனிவோடு பேசும் உன் வரலாறு.



உன் அக்கினியின் சிறகுகள் நாங்கள் புரட்டிய போது
ஆத்ம திருப்திதனைக் கண்டு கொண்டோம்.
கனவைக் காணச் சொன்னவனே நனவுலகில் அதை
வாழ்ந்து காட்டியவனே

இளைஞர்களின் உந்து சக்தியே - நீ
உத்தம திருப்தியின் இருப்பிடமே
கண்டாய் சொன்னாய் கருத்தியல்கள்
காலத்தின் மாற்றத்தால் கனதியாய் பதிந்ததுவே மாணவர் இதயங்களிலே.

சொன்னாய் என்று பெயரையும் உருவத்தையும் தவிர
மானிட வாழ்வில் எஞ்சி நிற்பது எதுவென்றால்
வாழ்வின் தத்துவங்கள் சொன்ன (உன் வரிகள் ஐயா அவை)

சொன்னவரிகளைச் சிற்பமாய் செதுக்கி காட்டினாய்
ரோகினிகள் ஏவினாய் இந்தியாவின் சரித்திரங்கள் மாற்றினாய்
இந்தியாவின் புகழினிலே உன் சரித்திரம் (நித்தமுமாய் இடம் பெற்றலாயிற்று)
நித்தமும் நித்திலமாய் நிலை பெற்றதுவே.

பாரதத்தின் உயர் விருதுகள் அத்தனையும் பெற்றாய்
அரசியலிலே அத்தனை மக்களின் ஆசையுடன் ஜனாதிபதியாய் மிளிர்ந்தாய்
கடைசிவரை மாணாக்கரோடு இருந்ததாலே- யாரோ
சொன்னாரையா உன்தினமும் மாணவர்தினமாய் மலர்ந்திடும் என்று

இந்துவிலே பாதம் பதித்தாய் – யாழ் இந்துவின் பாதம் பணிந்தாய்
பணிந்ததால் இந்து அன்னை பெற்றது பெரும் பெருமை
நீயும் பெற்றாய் அகிம்சையின் மூர்த்தியின் பின் ஒரு பெருமை
நீயும் பெற்றாய் அறிவியலின் மூர்த்தியில் ஒரு பெரும் பெருமை

சுற்றிச்சுழன்று கொண்டிருக்கும் இந்துவிலும்
ஒரு கருத்தியல் பதித்தாய் 123 ஆம் தடவை சுற்றுகிறது
சூரியனைச் சுற்றி இந்துக்கல்லூரி என்றாய் என்ன கருத்து
உந்தன் சிந்தனையிலே உதித்ததை யாங்கள் கண்டு வியந்தோம்.

உன் இறுதியும் மாணாக்கரோடு முடிந்ததுவோ
நீ முடிந்தாலும் உன் சரித்திரங்கள் முடிவதில்லை
யாரோ சொன்னாரையா வாழ்பவர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்
மனிதர்களின் மனங்களிலே நீ மாமனிதனாய் எழுந்தாய்.

இந்த வாழ்வியல் சொல்லும் வாழ்க்கை வரை
விஞ்ஞானியாய் நல்லதோர் ஆசானாய்
காலங்கள் மாறினாலும் கருவிகள் மாறினாலும்
கருத்தாவாய் உதித்தவன் நீ கடவுளாய் மாறியவன் நீ

சொத்தே பாரத தேசம் என்றாய்
விட்டுச்சென்ற சொத்துக்களின் உயில்கள் எவ்வளவு
என்று கேட்கையிலே உன் பூர்வீக வீடு என்றார்கள்
அந்த அறிஞர்கள் உந்தன் மனதைக் கண்டு பலரும் வியந்தார்கள்

பிறப்பது ஒரு வரமென்றால் இறப்பது ஒரு சரித்திரமாய்
இருக்கட்டும் என்று சொன்ன அறிஞன்
வாக்கினிலே உதித்த பெருமகனே உன் வாழ்வும்
சரித்திரமாய் மாறியதுவோ புத்தகங்கள் எங்கும்

உன் சரித்திரங்கள் இடம் பெற்று சரித்திர நாயகனாய்
மிளிர்ந்தவனே உன் புகழ் பாரெங்கும் பரவட்டும்
பரவும் வகை செய்த இந்துவின் மாணாக்கராய்
இந்துவின் உறவுகளாய் விடை பெறுகிறோம்.

விக்கினேஸ்வரன் சாரங்கன்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
2016 (A/L)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் எல்லாம் சட்டப்படி...



இலங்கையில் சுத்தம், நிர்வாக நடைமுறை போன்ற பல விடயங்களில் முதன்மை இடத்தில் இருந்து வருவது அம்பாறை வைத்தியசாலையாகும். நிழல் மரங்கள், கழிவுகள் போடும் வாளிகள், அழகிய பூமரங்கள் என அதன் அழகே தனி. அந்த இடத்தை யாழ். போதனா வைத்தியசாலைக்கு வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி வந்ததன் பின் யாழ். போதனா வைத்தியசாலை பிடித்துவிட வாய்ப்புண்டு.

> **இது யாழ். போதனா வைத்தியசாலையில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள வாசகங்கள்....**
>
> 1. நோயாளர்கள், பணியாளர்களுடன் மெதுவான குரலிலும் பண்பான முறையிலும் பேசவேண்டும். உரத்த குரலிலோ சண்டைப்பாணியிலோ பேசுதல் தவிர்க்கப்படவேண்டும்.
> 2.பணியாளர்கள், நோயாளர்களுக்கு ஆவன அனைத்தும் செய்வார்கள்.
> 3.நோயாளர்கள் மற்றும் வருகையாளருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்படுமிடத்து சம்பந்தப்பட்ட மேலாளர்கள் (அதிகாரிகள்) ளிடம் நேரடியாகவோ, கடிதம் மூலமோ முறைப்பாடு செய்யலாம்.

எந்தவொரு பகுதியிலும் நோயாளர்கள் இருக்கக்கூடிய வகையில் இருக்கைகள் போடப்பட்டுள்ளது. "நாம் இந்த இடத்திற்குப் போகவேண்டும்" என்று வைத்தியசாலையில் பணிபுரியும் யாரைக்கேட்டாலும் முன்புபோல சீறி விழாமல் திசை காட்டுகிறார்கள் சிற்றூழியர்கள் கூட. அதே நபர்கள் எப்படி இந்தப் பண்புமாற்றத்திற்கு உள்ளானார்கள்?

குறிப்பிட்ட இடத்தில் பணிபுரியும் தாதிகளும் கனிவாகப் பேசி, அலுவல்களை உடனே முடித்துத்தருகிறார்கள். ஏதாவது முறைகேடுகள் ஏற்பட்டால் வைத்தியர் சத்தியமூர்த்தியிடம் நேரில் சந்தித்து முறையிட முடியும் அல்லது எழுத்துமூலம் முறையிட முடியும். ஒரு நிறுவனம் சட்டபூர்வமான ஒழுங்கமைக்கப்பட்டுவிட்டால் மிக இலகுவாக பணியாற்ற முடியும் என்பதற்கு அண்மைக்கால உதாரணம் யாழ்.போதனா வைத்தியசாலைதான்.

இவ்வைத்தியசாலையில் சுமார் 1100 நோயாளர்கள் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகின்றனர்.

- 850 பேர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுகின்றனர்.
- 2700 பேர் தினமும் கிளினிக்கில் சிகிச்சை பெறுகின்றனர்.

இச்சேவை ஆற்றுவதில் 76 வைத்திய நிபுணர்கள், 242 வைத்தியர்கள், 423 தாதியர்கள் உள்ளடங்கலாக 1543 பேர் சேவையாற்றுகின்றனர்.

கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன. அவை முடிந்தபின் வைத்தியசாலையை மேலும் அழகுபடுத்த முடியும். நோயாளர்கள் மற்றும் அவர்களைப் பார்வையிடச் செல்வோர் வைத்தியசாலைச் சூழலுக்குப் பாதிப்பில்லாத வகையில் நடந்துகொள்ளவேண்டியிருக்கும்.

நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு முன்பிருந்த பாஸ் நடைமுறை வைத்தியர் சத்தியமூர்த்தி அவர்களால் நிறுத்தப்பட்டுள்ளது என்பதற்காக ஒரு நோயாளியைப் பலர் சென்று பார்ப்பதைத் தவிர்த்து ஒரே நேரத்திற்கு ஒருவர் அல்லது ஆகக்கூடியது இருவர் என சென்று பார்ப்பது பொதுமக்களின் கடப்பாடாகும். வைத்தியசாலை நிர்வாகத்திற்கு இடையூறின்றி மக்கள்தான் தம்மை மாற்றிக்கொள்ளவேண்டும்.

"2009 ஆம் ஆண்டு இறுதி யுத்த காலத்தில் கடுமையான எறிகணைவீச்சு நடந்துகொண்டிருந்தபோது நான் குப்புறப்படுத்துக்கிடந்தேன். மக்கள் எல்லோரும் ஏதோ ஓரிடத்தில் பதுங்கிக் கிடந்தார்கள். வைத்தியர் சத்தியமூர்த்தி சிறிய மோட்டார் சைக்கிளில் பிரதான வீதியால் போய்க் கொண்டிருந்தார். உந்த மனுசன் செத்தால் காயப்பட்டவர்களின் நிலை என்ன வாகும்? கடவுளே அவருக்கு ஒன்றும் நடந்துவிடக்கூடாது எனப் பிரார்த்தித்தேன்" என்று பரந்தனைச் சேர்ந்த பவன் என்கின்ற ஒரு பொது மகன் கூறினான்.

வைத்தியர் சத்தியமூர்த்தி இறுதி யுத்தத்தின்போது மக்களின் அவலத்திற்குள் நின்று மக்களுக்குப் பணியாற்றியவர் என்பதற்கு மேற் கூறப்பட்ட செய்தி போதுமானதாகும் அதனுடன் ஒப்பிடும்போது யாழ். போதனா வைத்தியசாலை மிகச்சாதாரண ஒழுங்குபடுத்தலாகவே அவருக்கு இருக்கமுடியும்.

**–ஜெ.சாம்சன்**

## பெரும் குடி மகனே




நன்றி சிரித்திரன் மார்ச் 1981

## இது என்ன இழவு

ஒருவர் இறந்துவிட்டால் இழவு சொல்லுவது என்பது தமிழர் பண்பாட்டில் உள்ள ஒரு முக்கியமான விடயமாகும். முன்பு பறைமேளம் அடித்து, அந்த ஊரைச்சுற்றி இழவு சொல்லுவார்கள். "இன்னார் இறந்துவிட்டார், நல்லடக்கம் நாளை இத்தினை மணிக்கு" என்று சொல்லிச் செல்வது வழமை.

அதேவேளை, நேரடியாக ஒருவர் சென்று உறவுக்காரருக்கு அறிவிப்பதும் உண்டு. தற்போது முகநூல், பத்திரிகை, வானொலி என்பனவற்றின் மூலம் அறிவிப்பதற்கு மேலதிகமாக முச்சக்கரவண்டியில் ஒலிபெருக்கிகள் கட்டி, இரவு 11.00 மணிக்கு மேல் மரண அறிவித்தல் என அறிவிக்கின்றனர். ஒரு சோக இசையுடனேயே ஆரம்பிக்கின்றனர். சிலர் இந்த அறிவித்தலை செய்யும்போது மதுபோதையில் அழுவதையும், அம்மா இறந்திருந்தால் அப்பா என மாறி அறிவிப்பதையும் காணலாம்.

இரவு நேரத்தில் மக்கள் நித்திரைக்குச் சென்றபின் இந்த மரண அறிவித்தல்கள் மேற்கொள்ளப்படுவதால் பல வயதானவர்கள் அந்த இரவை நித்திரையின்றியும், நிம்மதியின்றியும் வேதனையுடனும், குழப்பத்துடனும் கழிப்பதை அவர்களின் வீட்டில் உள்ளவர்கள் அறிவர். இறந்தவரை இந்தக் குழம்புபவர்கள் திட்டுகின்றனர். அவ்வாறு இறந்தவர்களுக்கு திட்டு வாங்கிக்கொடுக்கும் அளவிற்கு நம்மவரின் நடவடிக்கைகள் உள்ளன. இதையும் தமிழர்பண்பாடு என்று கூறமுடியுமா?

## நாய்க்குத் தேங்காய் மாலையா...?



# சிவசேனா

1987 இல் வெளியான மிகவும் பிரபல்யமான ஒரு திரைப்படம் தான் நாயகன். இத் திரைப்படத்தின் கதாநாயகனான வேலுநாயக்கரின் கதை ஓர் உண்மைக் கதையா-கும். வரதராஜ முதலியார் என்ற ஒருவர் மற்றாசிலிருந்து (சென்னை) பப்பாய் சென்று அங்கு பாதாள உலகக் குழு ஒன்றின் தலை-வராக இருந்த கதையே இப்படத்தில் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

மணிரத்தினத்தின் தயாரிப்-பில் கமலஹாசனின் நடிப்பில் உருவான இத்திரைப்படம், தமிழில் வெளிவந்த மிகச்சிறந்த திரைப்படம் என்றால் அது புகழ்ச்சி அல்ல.

வரதராஜ முதலியார் போல் பப்பாயில் தாதாக்களாக அல்லது நகரத்தை ஆளுகைப்படுத்திய மற்றாஸ்காரரை சிவசேனா என்ற அமைப்பு வீரசிவாஜியின் வழித் தோன்றல்களாக உருவாக்கி, மராட்டிய இனத்தை முதன்மைப்படுத்தியது.

அரசியல் கேலிச்சித்திரக்காரரான பால்தாக்ரே என்பவரால் யூன் 19.1966 இல் உருவாக்கப்பட்டதே சிவசேனா அமைப்பு. இவ்வமைப்பு ஆரம்பத்தில் மகாராஸ்டிரா பகுதியில் தோன்றினாலும் பின்னர் முழு இந்தியாவிற்கும் பரவியது.

1947 இல் இந்தியா சுதந்திர மடைந்ததன்பின்னர்மொழிவாரியாக மாநிலங்களின் அரசியல் கட்டமைப்புக்கள் உருவாக்கப்பட்ட போதிலும், 1960 காலப்பகுதியில் மராட்டிய மக்கள் மத்தியில் குழப்பமான ஒரு சூழல் காணப்பட்டது.

இந்த அரசியல்ஒழுங்கமைப் பிற்குள் குஜராத், மகாராஸ்ரா ஆகிய இரு பகுதிகள் இணைக்கப்பட்டன. ஹைதராபாத் மகாராஷ்ராவுடன் இணைந்தது. இந்நிலையில் பம்பாய் (மும்பாய்) மகாராஷ்ராவின் அரச தலைநக ரமானது.

இதன்போது


1. பம்பாயைச் சொந்த இடமாகக்கொண்ட குஜராத் இனத்தவர் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் ஆகியவற்றில் செல்வாக்குப் பெற்றி ருந்தனர்.


2. தென்னிந்தியர்களான மற்றாஸ்காரர் அரச ஊழியர்களாக அதிகம் பேர் செல்வாக்குப்பெற்றிருந்தனர்.

இதனால் அந்த நிலத்திற்குச் சொந்தமான மராட்டியர்கள் தமது சொந்த நிலத்திலேயே புறக்கணிக் கப்பட்டனர். இந்த நிலையில் 1960 ஆம் ஆண்டு அரசியல் கேலிச்சித்திரக்காரரான பால்தாக்ரே தனது கேலிச்சித்திரத்தின் மூலம் இந்த மனநிலையை வெளியில் கொண்டுவந்தார்.

இது பம்பாயின் குடியேற்ற வாசிகளுக்கு எதிரான சிந்தனையை மராட்டிய மக்கள் மத்தியில் தோற்றுவித்தது. இதுவே பின்னர் சிவசேனா ஓர் அரசியற் கட்சியாக எழுச்சி பெறுவதற்கான வாய்ப்பைக் கொடுத்தது.

சிவசேனா இயக்கம் தென்னிந்திய இளைஞர்களைத் தாக்கத் தொடங்கியது. பால்தாக்ரேயின் குடியேறிகளுக்கு எதிரான பேச்சால் மகாராஸ்டிர மக்கள் கிளர்ந் தெழுந்தார்கள். உணவகங்களிலோ, விடுதிகளிலோ தென்னிந்தியர்களை





எல். கே. அத்வானி

பால்தாக்ரே

வேலைக்கு அமர்த்தக்கூடாது என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இந்தச் சூழலில் சிவ-சேன கட்சி மகாராஷ்டிர மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் கட்சி என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது. 1989 இல் இக்கட்சியின் பத்திரிகையான சாம்னா (Saamna) தொடங்கப்பட்டது.

ஆரம்பத்தில் மகாராஸ்டிர மக்களின் உரிமைகளுக்காகப் போராடத்தொடங்கிய சிவசேன அமைப்பு பின்னர் இந்துமத அடிப்படைவாதக் கட்சியாக மாற்றப்பட்டது. இதன் பின் விஸ்வஹிந்துபரிஸத், பாரதீய ஜனதாக்கட்சி ஆகியவற்றுடன் இணைந்து பெருமெடுப்பில் ஊர்வலம் நடாத்தி, 06.12.1992 இல் அயோத்தியில் கட்டப்பட்டிருந்த 16 ஆம் நூற்றாண்டு பாபர் மசூதி அமைந்துள்ள இடம் தான் இராமர் பிறந்த இடம் என்று அந்த மசூதியைத் தகர்த்தெறிந்தார்கள்.

இம் மசூதி உடைப்பிற்கு பாரதீஜ ஜனதாக்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானி தலைமையில் ராம்ரத்யாத்திரா (Ram Rath Yathra) என்ற இந்து தொண்டர்களின் ஊர்வலம் வழிவகுத்தது.

பாபர் மசூதி உடைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1992 டிசம்பர் மாதம் மற்றும் 1993 ஜனவரி மாதத்தில் பம்பாயில் நடைபெற்ற இனக்கலவரங்களுக்கு சிவசேனாக் கட்சியும் பால்தாக்ரேயும் தான் காரணம் என்று கூறப்படுகிறது.

அதேபோல் 1970, 1984 களில் நடந்த பீவாண்டி கலவரங்களுக்கும் பால்தாக்ரேயே காரணம் என்று கூறப்படுகிறது. இன்றைய சூழலில் சிவசேனா ஓர் இந்துத்துவ கட்சியாக அரசியலில் கால்பதித்திருந்தபோதிலும் தமிழ் நாட்டில் அதன் செல்வாக்கை நிலைநாட்ட முடியவில்லை.

இந்தக் கட்சியை சென்னை மக்கள் ஏற்றுக்கொள்வதில் தயங்குவார்கள். ஏனெனில், அவர்களுக்கு எதிராகவே சிவசேனாக் கட்சி தமது வன்முறைகளை ஆரம்பித்தது.

வரதராஜ முதலியார் (நாயகன் படத்தில் வேலுநாயக்கர்) போன்றவர்களால் மிகவும் உறுதியாக நிறுவப்பட்ட பம்பாய் வாழ்க்கையை அழித்தவர் பால்தாக்ரே என்ற படிமம் எப்பொழுதும் அவர்களின் வம்சத்தில் வந்தவர்களுக்கு இருக்கவே செய்யும்.

-இ. மதன்



# யார் இந்த யாழ்ப்பாணத்தான்.



உலகத்தில் என்னென்ன விதமான தொழில்கள் உண்டோ அதைத் தெரிந்த ஒருவராவது யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் இருப்பார். அந்த வகையில் 1929 இல் இத்தாலியில் தயாரிக்கப்பட்ட காரொன்றை ஒரு பண்ணையாளரான பொன்னையா இராசேந்திரன் என்பவர் வாங்கி பண்ணையைச் சுற்றிப்பார்க்கப் பயன்படுத்தியிருக்கிறார்.

அதேவேளை, இன்னோர் செய்தியும் இக்காரினூடாக அறியமுடிகிறது. தினகரன் விழாவின்போது யாழ்ப்பாணத்தில் கார் ஓட்டப்பந்தயம் நடந்ததாகவும் அதில் இந்தக் கார் பலதடவை முதலிடத்தைப் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

தற்போது இந்தக் கார் Happy Tex ரவி என்பவரிடம் உள்ளதாகவும், அதனை அவர் முன்னையவரிடமிருந்து 1994 இல் இரண்டரை இலட்சம் ரூபாவிற்கு வாங்கியதாகவும், அக்காரைத் தற்போது 45 இலட்சம் ரூபாவிற்கு கேட்டபோதிலும் அவர் அதனை விற்காது வைத்திருக்கிறார். அந்தக் காரை வைத்திருப்பதை ஒரு பெருமையாகக் கருதுகிறார்.

முதலாமவர் 1931 ஆம் ஆண்டு அந்தக்காரை 3300 ரூபாவுக்கு வாங்கியதால் அந்த இலக்கத்தையே இலக்கத் தகடாகப் பதிவு செய்துள்ளார். இக்காரின் இலக்கம் யு3300 என்பதே ஆகும்.

இடி அமீன் முழு உலகத்தவராலும் சர்வாதிகாரி என்று கூறப்பட்டபோதிலும் ஒரு யாழ்ப்பாணத்தான் தனக்குப் படிப்பதற்கு உதவுமாறு கடிதம் எழுதியபோது இடி அமீன் படிப்பதற்கு காசும், ஒரு மவுண்டைன் துவிச்சக்கரவண்டியும் அனுப்பி வைத்திருந்தார். இது 1970 களில் யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு சம்பவம். பலருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

## எட்கா (ETCA) உடன்படிக்கை

Economic and Technology Cooperative Agreement

இவ்வுடன்படிக்கை இந்தியாவும், இலங்கையும் பொருளாதார ரீதியிலும், வர்த்தக ரீதியிலும் மேற்கொள்ள இருக்கும் ஓர் உடன்படிக்கையாகும்.

இது விடயத்தில் சிங்கள மக்கள் அதிகம் பிரச்சினையை ஏற்படுத்துகின்றனர். இதில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்றதல்ல என்கின்றனர்.

- இது ஓர் இந்திய ஆக்கிரமிப்பு
- நாட்டில் வேலையற்றோர் அதிகம் இருக்கும்போது இந்தியத் தொழிலாளரைக் கொண்டுவர இருக்கின்றனர். (இலங்கையில் பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர்கள் தொழில்நுட்ப விடயங்களை கற்றுக்கொள்வதற்குப் பின்னிற்கின்றனர். அதேவேளை, முச்சக்கரவண்டி ஒன்றை வாங்கி அதன் மூலம் ஒரு தொழில்வாய்ப்பை ஏற்படுத்தவே விரும்புகின்றனர்)
- நாட்டின் பொருளாதாரத்தினை இந்தியாவிற்கு பலிகொடுப்பது

போன்ற விமர்சனங்கள் வெளிவந்தவண்ணம் உள்ளது. இது விடயமாக இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் இலங்கைக்கு வந்து சென்றது குறிப்பிடத்தக்கது. அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இவ் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவிருக்கிறது.

# முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி



போக்குவரத்துப் பொலிசாரும், வைத்தியர்களும் இணைந்து முதலுதவிப் பயிற்சி ஒன்றினை முச்சக்கர வண்டிச்சாரதிகளுக்கு வழங்கி வருகின்றனர்.

முச்சக்கரவண்டிச் சாரதிகள் அனேகமாக எல்லா ஊர்களுக்கும் செல்பவர்கள். விபத்துக்குள்ளாகியவர்களை உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லும் வாய்ப்பு இவர்களுக்கே அதிகம் உண்டு. தற்போதும் முச்சக்கரவண்டிச் சாரதிகளே அதிக மக்களின் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள்.

ஒருவர் விபத்துக்குள்ளாகிவிட்டால் உடனேயே தூக்கி ஏற்றுவதில் காட்டுகின்ற அக்கறை விபத்துக்குள்ளாகியவர்களுக்கான முதலுதவி அளிப்பதில் யாரும் கவனிப்பதில்லை. இதனால் பலர் அநியாயமாக இறந்துபோன சம்பவங்களும் உள்ளன. இவற்றைத் தவிர்ப்பதற்காகவே முச்சக்கரவண்டிச் சாரதிகளுக்கு முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டு, பச்சை நிற ஸ்ரிக்கர் ஒன்றும் முன்புறத்தில் ஒட்டப்படுகிறது.

விபத்துக்குள்ளாகிய ஒருவரை விரைவாக வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்வதற்கான உத்தரவு பெற்றவர் அந்த முச்சக்கரவண்டிச் சாரதி என்பதை உறுதிப்படுத்துவதாகவே அந்த ஸ்ரிக்கர்கள் பயன்படுத்தப்படுகிறது.

இனி முச்சக்கரவண்டிச் சாரதிகள் அனைவருக்கும் வேண்டப்பட்டவர்களாக மாறிவிட்டனர்.

–தவம்



# Key Birthday

இந்தப் பிறந்தநாள் நம்மவர் மத்தியில் அதிகம் பிரபல்யம் அடைந்துவிட்டது. பிறந்தநாளைக் கேக் வெட்டிக்கொண்டாடும் மரபு இந்துக்களிடம் இல்லை. இந்த விடயத்தில் மட்டும் இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மாறுகின்றனர்.

இதிலிருந்து இந்துக்களிடம் எப்படி பிறந்தநாளைக் கொண்டாடுவது என்ற மரபு இல்லை என்பது தெளிவாகிறது. சில இடங்களில் பொங்கல் வைத்து, மோதகம் கொழுக்கட்டை அவித்துக் கொண்டாடுகின்றனர்.

Key Birthday என்பது எமது கலாசாரத்துடன் ஒட்டியதல்ல. அதாவது மேலைத்தேய நாடுகளின் கட்டிளம் பருவம் 18 வயதுடன் முடிவதாகவும், வேறு சில நாடுகளில் 21 வயதில் தான் பக்குவமடைந்த ஒரு மனிதனாக ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுகிறான்.


21 ஆவது பிறந்தநாளில்


- வாக்குரிமை இருக்கும்.
- மதுபானச்சாலைகளில் சட்டபூர்வமான மதுபானம் வாங்கமுடியும்.
- தான் விரும்பும் பெண்ணையோ, ஆணையோ திருமணம் செய்ய முடியும்
- ஒரு முழு மனிதனாக அங்கீகாரம் பெறும் தருணம் அது.

21 ஆவது பிறந்தநாளில் தமது வீட்டுத்திறப்பை பிறந்தநாள் கொண்டாடுபவரிடம் அடையாளமாகக் கொடுத்து, அவன் அல்லது அவள் ஒரு குடும்பத்தை நடாத்தக்கூடிய தகுதி பெற்றவர் என்ற அங்கீகாரம் இங்கிலாந்தில் கொடுக்கப்படுகிறது.

பாடசாலை வாழ்க்கை முடிந்து உயர்கல்விக்குச் செல்லும் ஒரு காலகட்டமாகவும் இது உள்ளது. சுருக்கமாக தமிழில் கூறினால் 21 வயது என்பது வயதுக்கு வந்தவர் என்று அர்த்தப்படும். அவர்கள் தாம் விரும்பியவாறு எதையும் செய்யலாம் என்பதே அதன் அர்த்தமாகும்.

# 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாக்கள்




**பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் கூற்றின் எதிரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.**

1. தமிழ்மொழியின் 247 எழுத்துக்கள் உண்டு.
2. பூமி தட்டை வடிவானது.
3. அல்லும் பகலும் என்பது இரட்டைமொழியாகும்.
4. 50 என்பதை உரோம எண்ணில் L எழுதலாம்.
5. ஒவ்வொரு கூற்று வாக்கியத்தின் முடிவிலும் வினாவிசைக்குறி இடப்படும்.
6. இந்திய விடுதலைக்காக பாடுபடாத பெரியார் மகாத்மாகாந்தி
7. உணவு, உடை, உறைவிடம் என்பன மனிதனின் அடிப்படைத் தேவையானது.
8. நாம் தொலைக்காட்சியில் நல்ல மாணவர் நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும்.
9. காந்தம் எப்போதும் வடக்கு நோக்கியே இருக்கும்.
10. மனிதனின் சாதாரண உடல்வெப்பநிலை $37^{0}$ C ஆகும்.

# 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாக்கள்

**பின்வரும் விவரணத்தை வாசித்துக் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக.**

மழைக்காலத்தில் வானங்கள் தண்மை மிக்கனவாகக் காட்சியளிக்கும். அக்காலத்தில் மரங்கள் எல்லாம் பச்சைக் கம்பளம் போர்த்ததுபோலக் காணப்படும். திறந்த வெளிகளில் புற்கள் உயர்ந்து வளர்ந்திருக்கும். குழிகளில் எல்லாம் நீர் நிறைந்திருக்கும். நதிகளிலோ குளங்களிலோ மிருகங்கள் தண்ணீர் குடிக்கப் பதுங்கிச் செல்லும் நிலையை நாம் காணமுடியாது. நன்றாக விளைந்த கிழங்குகள், வேர்கள், இலைகள் என்பவற்றைச் சுவைத்து உண்டு பருத்த பன்றிகளோடு மான்களும் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. களிறுக் கூட்டம் நதிக்கரைகளில் நின்று ஆரவாரம் செய்யாது காட்டினுள்ளெ ஆடி அசைந்து செல்வதையும் காணலாம்.

1. வனாங்கள் என்பதன் ஒத்த கருத்துச் சொல் ஒன்று தருக?

.................................................................................................

2. பருத்து என்பதன் எதிர்க்கருத்துச் சொல் ஒன்று தருக?

.................................................................................................

3. களிறு என்பதற்குரிய பெண்பாற் சொல்லை எழுதுக?

.................................................................................................

4. அஃறிணை பன்மை நிகழ்கால வினைச்சொல் ஒன்று எழுதுக?

.................................................................................................

5.இங்கு இடம்பெற்றுள்ள இணைமொழி ஒன்று தருக?

.................................................................................................

6.தன்மைப் பன்மைப் பெயர்ச்சொல் ஒன்று எழுதுக?

.................................................................................................

7. ஆடி அசைந்து என்பதாற் கருதப்படுவது யாது?

.................................................................................................

8. நதிகளிலோ குளங்களிலோ விலங்குகளுக்கு நீர் குடிக்க வேண்டிய தேவை ஏன் ஏற்படுவதில்லை?

.................................................................................................

9. ஆரவாரம் என்பதாற் கருதப்படுவது யாது?

.................................................................................................

10. வெற்றிடத்திற்குப் மிகப் பொருத்தமான விடையை எழுதுக.

"மழைகாலத்தில் வனாங்கள் தண்மைமிக்கனவான இருந்தால் வரட்சிக்காலத்தில் வனங்கள் ........................................ மிக்கனவாக இருக்கும்."

---

பின்வரும் சொற்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ்ப்பதங்களைத் தருக

| | |
|---|---|
| மழை : ......................... | பச்சை நிறம் :......................... |
| நீளமான நதி : ......................... | வைத்தியர் :......................... |
| Animals : ......................... | Festivals:......................... |
| Rabbit: ......................... | Balloon:......................... |

**பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் உண்மையானவை என எடுத்துக்கொண்டால் அவற்றை எடுத்துத்தரப்படும் மூன்று கூற்றுக்களில் ஒன்று உண்மையாக இருக்கும் அதன் கீழ் கோடிடுக.**

அறிவாளிகள் அதிகம் பேசுவதில்லை ஆகவே

1. பேசுபவர்கள் எல்லோரும் அறிவு வந்தவர்கள்

2. அறிவாளிகள் மிக அருமையாகவே பேசுவர்

3. பேசாதவர்கள் எல்லோரும் அறிவாளிகள்

சிறு பிள்ளைகள் மூத்தோர் சொற் கேட்க வேண்டும் இதற்குக் காரணம் யாது?

1. சிறுபிள்ளைகள் நல்லவை தீயவையானவை என்று அறிந்திராமை

2. மூத்தோர் சிறு பிள்ளைகளிலும் வயது கூடியவர்களாக இருக்கின்றனர்.

3. மூத்தோர் எல்லோரும் அறிவாளிகளாக இருக்கின்றனர்.

நாட்டிலுள்ள மரங்கள் யாவற்றையும் வெட்டி அழித்தால் ஏற்படக்கூடிய மிகப் பிரதானமான பாதிப்பு

1. வீடுகள் கட்டப்படுவது தடை பெறும்

2. மழை இல்லாமல் போய் வரட்சி உண்டாகும்.

3. பறவைகள் கூடுகட்ட இடமில்லாது போகும்

---

**சரியான விடையின்கீழ் கீறிடுக.**

1. நுளம்புகளால் பரவும் நோய்களில் ஒன்று
(நெருப்புக் காய்ச்சல் / வயிற்றுளைவு / டெங்கு)
2. நீர்ப்பரப்பை அண்டி வாழ்பவை
(தேரைகள் / எறும்புகள் / கறையான்கள்)
3. குட்டியீனும் பிராணி
(வாத்து / குரங்கு / தேனீ)
4. பறவைகள் பறப்பதற்கு உதவுவன
(சிறகுகள் / கால்கள் / அலகுகள்)
5. நீரினுள் வாழும் பிராணி
(வெளவால் / திமிங்கிலம் / தவளை)
6. கூடுகட்டத் தெரியாதது
(காகம் / கிளி / குயில்)
7. பூக்காத தவரம் எது?
(பூவரசு / முருங்கை / நாகதாளி)
8. முள்ளந்தண்டில்லாதவை
(தவளை / திருக்கை / சிப்பி)
9. இலவசக்கல்வியின் தந்தை
(என்.எம்.பெரேரா / இரா.சம்பந்தன் / சி.டபிள்யு.டபிள்யு கன்னங்கரா)
10. அக்கினிக் குஞ்சுகள் எனும் நூலை எழுதியவர்
(ராமானுஜர் / அப்துல் கலாம் / மோடி)

# மொழிகளின் மூலம் தமிழ்மொழியே



விஸ்வப்பிரம்மஸ்ரீ இரத்தினம்
அச்சுதபாகன் ஆச்சாரியார் B.A
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

ஐன்ஸ்ரீன் மற்றும் அவர் அடியொற்றிய விஞ்ஞானிகளின் காலவெளி (Time of space) என்பவற்றை ஒத்திருப்பதை காண்க. எம் அமிழ்தினுமினிய தாய்மொழியும் உலக முதன் மொழியும் ஆன தமிழும் அதன் வழிப்பட்ட கலைகளும் பிரபஞ்ச விஞ்ஞான நெறிப்பட்டு அறிவியல் ரீதியாக அமைக்கப்பட்டதை எண்ணி இறும்பூதெய்தலாம்.

குமரிக்கண்ட நாகரிகத்தின் தோற்றத்தின் பின் ஏற்பட்ட முதற் கடற்கோளின்பின் அக்கண்ட மக்களில் சிலர் புலம்பெயர்ந்து பலபாகங்களிலும் குடியேறியதால் பழம்பெரும் மற்ற நாகரிகங்கள் தோன்றின. அவற்றில் சிந்துவெளிநாகரிகம், சுமேரிய நாகரிகம், நீலநதிநாகரிகம் (எகிப்து) அமெரிக்கமயன் நாகரிகம் (People of Maya) என்பன முக்கியமானவையாகும்.

மயன் அல்லது மாயன் நாகரிகத்தின் பிதாமகர்கள் இத்தென்னக மயனும் அவரது சீடரான மாயனும் தான் என்று ஆய்வர்கள் உரைக்கின்றனர்.

இவற்றை ஒப்பிட்டு ஆராய 1996 யூன்மாதம் மாமல்லபுரம் சிற்பக் கலைக் கல்லூரி அதிபர் Dr.வை.கணபதிஸ்தபதி தென் அமெரிக்க நாடுகளுக்குச் சென்றிருந்தார். அவர் அங்கு சென்று ஆய்ந்தறிந்து சொன்ன விடயங்களும் அவற்றிற்கு மேல் நாட்டினர் வழங்கிய அங்கீகாரத்தையும் அவர் கூற்றாகக் காண்போம்.

"இந்தக் குமரி மாநில மக்களின் ஒருவனாக அச்சங்க காலத்தில் நான் ஏற்கனவே குறிப்பிட்ட மயன் என்ற பெருந்தச்சன் வாழ்ந்து வந்தான். அவனைத்தான் சங்ககாலச் சிற்பச் சித்தன் மாமுனி மயன் என்று நான் அறிமுகப்படுத்தி வருகின்றேன். இவனே தென்னமெரிக்கு மாயர்களின் தலைவனாகவிருந்து வானவியல் விந்தைகளைக் கண்டுபிடித்து, மனித இனத்தின் வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டியவன் என்ற செய்தியறிந்து, நான் மாயர்நாட்டிற்குச் சென்று அவர் தம் தலைநகராம் மெக்சிக்கோவிலும் சுற்றுப்புற நாடுகளிலும் 15 நாட்கள் தங்கி, மாயர்கள் வளர்த்த கட்டடக்கலையை உற்றுநோக்கி, அவன் தொன் மையையும், அக்கட்டிடக் கலையின் வேர்களை யும் கண்டறிந்தேன். அச்செய்திகள் அமெரிக்க பத்திரிகைகளில் அப்போது (1996) யூன் வெளி வந்தன.

குமரிக்கண்டத்தில் தோன்றிய மயனும், மெக்சிக்கோ மாயர்களும் ஒரே இனத்தைச் சேர்ந்தோர் என்றும் ஒரே கலை மரபை ஒழுகியோர் என்றும் மாயர்கால வாழ்க்கை வழிமுறைகள் அதேகால குமரிநாட்டின் வாழ்க்கை நெறிமுறைகளுக்கு ஒத்திருப்பதைக் கண்டு அறிஞர்களிடையே உரையாடிப் பரப்பினேன். எனது கருத்துப் பற்றி ஓர் ஆய்வர் கீழ்க்கண்டவாறு எனக்கு எழுதினார்.

"Your discoveries are quit Incredibke In the 20 Years I have been Studying South America, You are the first to offer proof of the conection between India and South and Central America'

- Mr. Lt.Lawerence Frego

(உங்களுடைய கண்டுபிடிப்புகள் மிகவும் அற்புதமானவை. நான் தென் அமெரிக்காவை ஆய்வு செய்யும் 20 வருடங்களில் நீங்கள் முதன்முதல் இந்தியாவுக்கும் தென், மத்திய அமெரிக்காவுக்கும் இடையில் உள்ள தொடர்பை சிறப்பாக நிருபித்துள்ளீர்கள்.

- திரு.Lt.லோவ்றென்ஸ் ஃறிக்கோ

இக்கால இந்தியச் சிற்பிகளை மயன் மரபு வழிவந்த இந்திய மாயர்கள் என்று சொன்னால் தவறில்லை என்பேன். என்று அவர் கூறிச் செல்கிறார். (வைசம்பாயனம், சங்க காலச்சிற்ப சித்தன் மாமுனி மயன் வரலாறு பக்கம் 21)

**பிற்குறிப்பு :** இங்கு ஸ்தபதி அவர்கள் குறிப்பிட்ட இந்திய மாயர்கள் ஐஞ்சக்தி எனப்படும் இரும்பு - மனுசிற்பி, மரம் - மயசிற்பி, உலோகம் - துவட்ட சிற்பி, கல் - சிற்பி, பொன் - விஸ்வெக்ஞ சிற்பி எனப்படும் ஐந்தொழில் வேள்வியையும், ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்டுவித்தல் ஆகிய அறுவகை ஒழுக்கத்தையும் பேணும் விஸ்வகர்ம அந்தண மரபினரையே.

"நித்திய கர்மாஸ்டகயுதம் - கர்ம சோடச நிஷ்டிதம் மனுர் மயஸ் ததா த்துவஷ்டா - சில்பி விஸ்வக்ஞயித்யபி"

(ஸ்காந்தபுராணம் - நாகரகாண்டம் 18 )

### மாயர்நாட்டிலும் சங்கபலகையை ஒத்த பதப்பலகை

இவர் இவ் ஆய்வின்போது விந்தை மிகு மரப்பலகை ஒன்றை மெக்சிக்கோ நாட்டில் கண்டுள்ளார். அதைப்பற்றி ஓர் கருத்தரங்கில் பேசினார். அதில் அவர் அழகிய வேலைப்பாடுகள் அமைந்த ஓர் பலகையை "L" வடிவத்தில் நாற்காலியைப் போன்று கண்டதாகவும், அது தவளை மாநெறியாகிய (மண்டுகபதம்) எட்டெட்டெனும் 64 பதங்களைக் கொண்டு அமையப்பெற்றிருந்தது என்றும் கூறியுள்ளார். மேலும் சங்கப்பலகைக்கு மயன் அமைத்த பலகையும் இதையொத்துத்தான் இருந்திருக்க வேண்டும் என்று தாம் எண்ணுவதாகவும் டாக்டர் ஸ்தபதி குறிப்பிட்டுள்ளார். இப்பலகையில்தான் சீரும் சிறப்பும் எய்திய பற்பல நூல்கள் சான்றோர்களால் வாழ்த்தப்பெற்று அரங்கேற்றப்பட்டனவாம். (வைசம் பாயனம் திருமதி பொன்னி செல்வநாதான் - பக்கம் 96)

கடற்கோளுக்கு பின் கபாடபுரம் என்ற இரண்டாம் மதுரை நகரை அமைத்ததும் இந்த மயன்தான். அங்கே செந்தமிழ் கூடம் அமைத்து "செந்தமிழ் இயக்கம் கண்டேன்" என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறார். தென்மதுரையில் இறுதிக் காலத்திலும் கபாடபுரத்திலும் சங்கப்பலகையை அமைத்தவர் மயன். நிலத்தரு பாண்டியன் கடற்கோளுக்கு முன்னும் பின்னும் குமரி மண்தலத்திலுள்ள கன்னிநாட்டை (பாண்டியநாட்டை) ஆண்ட மாமன்னன். தமிழ்க் கலைகளையும் அதன் தாய்க்கலையான சிற்பக்கலையையும் வளர்த்தவன். இதனை வைசம்பாயனம்,



**"பாண்டியன் போற்றும் சிற்பி**

**பாண்டியன் வாழ்த்தும் சிற்பி**

**பாண்டியன் ஆட்சிக்காலம் பொற்பமை**

**சிற்பமூலம் பாண்டியன் மாட்சிக்கேற்ற**

**பெருங்கலைக்கூடம் கண்டான்**

**பாண்டியன் தமிழ் வளர்த்தான் சிற்பமும்**

**செழித்தே ஓங்க"**

(வை 662) என உரைப்பதைக் காண்க.

மனுநக்கனின் (பாண்டியன்) மடியில் வளர்ந்த மயநாகனான (சேரன்) தமிழ்க்கலை முதல்வன், பாண்டிய மன்னர்பிரானை பன்னிரு நூற் சாரத்தில் போற்றுவதைக் காண்க.

**"பாண்டிய மன்னன் கண்டான் வேண்டிய**

**பரிசிலீந்தான்**

**தூண்டிய பரியுமீந்தான்**

**துதிக்கைமேல் உலாவுங் கொண்டேன்**

**பாண்டிய மன்னனாலே பற்பல**

**கலைவளர்த்தேன்**

**பாண்டிய மன்னனாலே பன்னிருநூலும்**

**கண்டேன்**

(ப.நூ.229)

(தொடரும்....)

# சட்டம் நம்மை ஆளட்டும்

எங்கு பார்த்தாலும் திருட்டு அல்லது களவு போய்விட்டதாக ஊரெல்லாம் பேச்சு எனவே இந்த இதழில் திருட்டு (THEFT) என்றால் என்னவென்று ஆராய்வோம்.

முதலில் திருட்டு. களவு என்பதற்கு தண்டனை சட்டக்கோவையில் (Penal Code) என்ன வரைவிலக்கனம் வழங்கப் படுகிறது. என பார்ப்போம் அதன்படி தண்டனை சட்டக்கோவையின் 366 ஆம் பிரிவானது பின்வருமாறு கூறுகின்றது

**"ஏதேனும் அசைவுள்ள ஆதனத்தை எவரேனும் ஆளின் உடமையிலிருந்து அவ்வாளின் சம்மதமின்றி நேர்மையீனமாக எடுத்துக்கொள்ளும் கருத்துடன் அவ்விதம் எடுத்துக் கொள்வதற்கான அவ்வாதனத்தை அசைக்கும் எவரும் திருடுவதாக கூறலாம்"** எனவே மேலே கூறப்பட்ட வரைவிலக்கணத்தை இரண்டு வழியாக பிரித்து நோக்கலாம்.

a) ஒரு ஆளின் உடமையிலிருக்கின்ற அசைக்கக்கூடிய பொருளை அவருடையஅனுமதியின்றி எடுப்பதற்கான நோக்கம்.

b) அவ்வாறு எடுப்பதற்காக அப்பொருளை அசைத்தல்.

முதலாவதாக கூறப்பட்ட விடயம் இக் குற்றச்செயலுடன் தொடர்புடைய மனம் சார்ந்த (நோக்கம்) விடயத்தையும் இரண்டாவதாக குறிப்பிடப்படும் விடயம் அவருடைய செயலையும் குறிப்பிடுகின்றது எனவே களவு ஒன்றை நிரூபிப்பதற்கு மேலே குறிப்பிட்ட இரண்டு விடயங்களும் முக்கியமானவை .அதாவது மனம் சார்ந்த செயலும் பௌதிக செயலும் முக்கியமானவை. திருட்டுஎன்னும்குற்றச்செயலைநிருபிப்பதற்கு05 அடிப்படையான விடயங்கள் முக்கியமானவை.

I. நேர்மையீனமான நோக்கம்
- (Dishonest)

II. அசைக்கக்கூடிய ஆதனம்
- (Movable Property)

III. உடமை - ( Possession)

IV. சம்மதமின்மை
- (Absence of Consent)


V. அசைத்தல் - (Moving)

**நேர்மையீனமான நோக்கம்** என்பது எமக்கு மிகவும் எளிதாக புலப்படும் விடயமா-கும். தண்டனைக் சட்டக்கோவையில் எவை நேர்மையீனமான நோக்கங்களாக வரக்கூடியவை என்பதற்கு வரைவிலக்கணம் வழங்கப் படவுள்ளது. எனினும் சாதாரண வாழ்க்கையில் மனச்சாட்சிக்கும் இறைவனுடைய சாட்சிக்கும் எவை முரணானவையோ அவைகள் நேர்மையற்ற நோக்கங்கள் எனக்கூறலாம்.

**அசையக்கூடிய ஆதனம்** என்பது நிலத்தோடு பிணைக்கப்பட்டுள்ள அல்லது நிலத்தோடு பிணைக்கப்பட்ட எதனுடனும் நிரந்தரமாக பிணைக்கப்பட்ட பொருட்கள் தவிர்ந்த வேறு பொருட்கள் என வரையறுக்கப்படுகின்றன

பொருள் அசைவுள்ள ஆதனமாயில்லாமல் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருக்கும் வரை திருடத்தகுந்தது அல்ல. ஆனால், நிலத்திலிருந்து பிரிக்கப்பட்டதும் திருடுவதற்கு தகுந்த பொருளாக மாற்றமடைகின்றது. உதாரணமாக நிலத்தில் இருக்கும் வரை மரம் திருடத்தகுந்த பொருளல்ல எனினும் நிலத்திலிருந்து அகற்றப்பட்டதும் அது திருடுவதற்குரிய பொருளாக மாற்றமடைகின்றது.


நீதிமன்றங்கள் சர்ச்சைக்குரிய களவு தொடர்பான வழக்குகள் வரும்போது மேற்



குறிப்பிட்ட விடயங்களை ஆழமாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்குன்றன. பல சுவாரசியமான வழக்குகளில் நீதிமன்றங்கள் வேறுபட்ட தீர்ப்புக்களை வழங்கியுள்ளன. அவை தொடர்பாக தற்போது ஆராய்வோம்.

இராமலிங்கம் எதிர் நாயர் என்ற வழக்கு மிகவும் ஆர்வத்தை தூண்டுகின்ற வழக்கு. இது 1940 களில் இடம்பெற்ற நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டது.

அக்காலப்பகுதி சாதிப்பிரிவினைகள் தலை



விரித்தாடிய காலப் பகுதி. அக்காலப்பகுதியில் குறித்த ஒரு சமூகப்பிரிவினர் இன்னொரு சமூகப்பிரிவினரின் வயல்களுக்குச் சென்று வேலை செய்வதில்லையென தீர்மானித்திருந்தனர். அதனை தடுத்து நிறுத்துதற்கும். கண்காணிப்பதற்கும். "மக்கள் சபை" ஒன்றையும் அவர்கள் நியமித்திருந்தனர். இவ் வழக்கின் முறைப்பாட்டாளர். இக்குழுவிரின் சமூகப் பிரிவினரின் வயலில் வேலை செய்வதற்கு சென்றுவிட்டார். அதனை கேள்விப்பட்ட குறித்த "மக்கள் சபை" உறுப்பினர்கள் அவருடைய வீட்டிற்குச் சென்று அபராதமாக ரூபா 25 செலுத்துமாறு கோரினர் அதற்கு வழக்காளி மறுத்த போது இப் வழக்கின் எதிரி வழக்காளியின் வீட்டிற்குள் சென்று ஒரு பெட்டிலிருந்த இருபத்தை ரூபாவினை எடுத்துச் சென்றார். வழக்காளியின் முறைப்பாட்டையடுத்து. கீழ் நீதிமன்றினால் எதிரி குற்றவாளியாக காணப்பட்டார். எனினும் அவர் அதற்கு எதிரி பணத்தை கையகப்படுத்த வேண்டுமென எண்ணத்தை கொண்டிக்கவில்லையென எண்ணிக் கொண்டாலும் வழக்காளியை மக்கள் சபைக்கு விளங்குவதற்காக கொண்டு செல்வதற்காக பணத்தை எடுத்தமையானது நேர்மையற்ற நோக்கம் என கூறினார் அதன் அடிப்படைலில் களவு குற்றச்சாட்டுக்கு எதிரி குற்றவாளியாக காணப்பட்டார்.

இதேபோன்று மற்றொரு வழக்கு இலங்கை சுதந்திரம் அடைவதற்கு நீண்ட காலத்திற்கு முன்னர் இடம் பெற்ற வழக்கு. அரசன் எதிர் லியோன் என்ற வழக்கு இவ் வழக்கில் வேறொரு இடத்துக்கு பயணம் போவதற்காக மாட்டு வண்டியில் பூட்டுவதற்காக முறைப்பாட்டுக்காரருடைய மாடொன்றை எடுத்துச்சென்றார் எதிரி பயணம் போய்வந்த பின்னர் மாட்டை ஒப்படைப்பது அவருடைய எண்ணமாக இருந்தபோதும். தண்டைனை சட்டக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளிகன் பிரகாரம் அவர் நேர்மையீனமாக நடந்து கொண்டதாக நீதிமன்றம் முடிவு எடுத்தது. சிறிது நேரம் பாவித்த பின்னர் அதனை ஒப்படைப்பது எதிரியின் நோக்கமாக இருந்தாலும் அதனை நேர்மையற்ற முறையில் செய்தமையானது களவு குற்றச்சாட்டை நிருபிப்பதற்கு போதுமானதாக இருந்ததாக நீதிமன்றம் தீர்மானித்தது.

எங்களில் சிலபேர் செத்தவனை கூட சுடலையில் நிம்மதியாக போக விடமாட்டார்கள்.

அவ்வாறான தொரு வழக்குத்தான் அடுத்து வரும் வழக்கு காதர் மீதினிடம் கடன் வாங்கிய பெண்ணொருவர் சடுதியாக இறைவனடி சேர்ந்துவிட்டார். இதனை எப்படியோ கேள்விப்பட்ட காதர் மீதின் கடைசியில் பெண்ணின் சடலம் வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்து விட்டார். வந்தவர் வந்து இறுதி அஞ்சலி செலுததி விட்டு சும்மா போனாரா? இல்லை பெண்ணின் உடலத்திலிருந்த நகைகளை ஊரவர் முன்னிலையில் காரணத்தை சொல்லி கழட்டி சென்றுவிட்டார். இது தொடர்பான வழக்கு நீதிமன்றுக் வந்த போது நீதிமன்றானது அவருடைய செயல் நேர்மையீனமான நோக்கம் அல்ல எனவும் தன்னுடைய கடனுக்கு பதிலாகவே பொறுப்பாக அவர் ஊரவர்களின் முன்னிலையில் நகைகளை கழற்றி எடுத்தார் என தீர்மானித்து எனவே அவருடைய செயலானது களவு குற்றமாக கொள்ளப்பட முடியாவு என தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் அசைக்க கூடிய பொருளே களவின் விடயப்பொருளாக வரும் என பார்த்தோம். எனவே களவு என்பதை உறுதிப்படுத்துவதற்கு பொருளானது வைக்கப்பட்டிருந்தலும் முக்கியமானது. வேறொரு வருக்குரிய வெட்டப்படாமல் நிலத்தில் இருக்கின்ற மரத்தை விற்பனை செய்வது களவு ஆகாது. எனினும் புயலினால் அது விழுந்த

**மதுமிதன்**

பின்னர் அதனை அகற்றுவது களவாகும்.

வீடு ஒரு அசையாத பொருள் அது களவின் விடயப்பொருளாக வரமுடியாது எனினும் வீட்டிலிருக்கின்ற பொருட்கள் அகற்றப்படும் போது அவை களவுக்குரிய விடயப்பொருளாக வருகின்றன எனவே அசையாத பொருளொன்றை திருட முடியாது அதனடிப்படையில் சினிமாப்படமொன்றில் வடிவேலு கூறியது போல கிணற்றையும் திருட முடியாது.

(தொடரும்.....)




எந்தக் கதை சொல்ல?
எந்தக் கதை சொல்ல, நான்
எந்தக் கதை சொல்ல?
தங்கை உன்னைத் தூங்க வைக்க
எந்தக் கதை சொல்ல? (எந்தக் கதை)

பாட்டி வடை சுட்ட கதை
பக்கம் இருந்து சொல்லவா?
காட்டில் முயல் சிங்கம் ஒன்றைக்
கொன்ற கதை சொல்லவா? (எந்தக் கதை)

உருத்திராட்ச மாலை அணிந்த
பூனைக் கதை சொல்லவா
திருட்டு அப்பம் குரங்கு பகிர்ந்த
சிறிய கதை சொல்லவா (எந்தக் கதை)

கண்ணகியார் மதுரை மாநகர்
எரித்த கதை சொல்லவா
வெண்ணை திருடிக் குட்டிக் கண்ணன்
தின்ற கதை சொல்லவா (எந்தக் கதை)

எந்தக் கதையும் சொல்லு முன்னே
தங்கை தூங்கி விட்டாள்
உன் அருகே பாய் விரித்து
உறங்குகிறேன் சிரித்து (எந்தக் கதை)

*** பாட்டுப்பாடுவோம்" என்ற சிறுவர் பாடல் நூல் மிகச்சிறப்பாக எழுதப்பட்டுள்ளது. இதில் வரும் மாமர மாமா, மரங்களை வெட்டாதே, மாலை விளையாட்டு, இயேசு, நெஞ்சில் வைப்போம் போன்ற பாடல்கள் மிகவும் அருமையாக உள்ளன.**

**சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ள இந்நூலில் பாடல்களுக்கு ஏற்றவாறு கிராமிய சூழலைப் பிரதிபலிக்கும் புகைப்படங்கள் போடப்பட்டிருந்தால் இதன் சிறப்பு மேலும் ஒரு படி உயர்வாக இருந்திருக்கும்.**

**கலாபூசணம் செல்லையா குமார சாமி அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது. இது ஓர் ஈழத்து இலக்கிய படைப்பு என்பதால், இந்நூலுக்கு தனிச்சிறப்புண்டு.**

- முகவரி

# FCID - நிதிக்குற்றப் புலனாய்வுப் பிரிவு

2015 ஆம் ஆண்டு தை மாதத்தின் பின் FCID என்னும் நான்கு ஆங்கில எழுத்துக்களும் இலங்கையில் மிகவும் பிரபல்யம் அடைந்தன. **மிக மிக முக்கிய புள்ளிகளை விசாரிப்பது, கைது செய்வது, சிறையில் அடைப்பது, சொத்துக்களைப் பறிமுதல் செய்வது எனப் பல்வேறு விடயங்கள் பற்றிய கடந்தகால குற்றவியல் ஆய்வுகளே இவ் எழுத்துக்களின் பெயருள்ள அலுவலகத்தில் நடாத்தப்படுகின்றன.**

2015 தை 08 ஆம் திகதி ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ பதவி நீக்கம் செய்யப்பட்டு, புதிய ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்றதைத் தொடர்ந்து FCID (Financial Crime Investigation Division) 26.02.215 இல் அமைக்கப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நேரடி நெறிப்படுத்தலில் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டு 19 ஆவது அரசியற் சீர்திருத்தத்தின் பிரகாரம் "சுதந்திர ஆணைக்குழுக்கள்" இயங்குவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.



இலங்கைக்குள் காணப்படுகின்ற நிதி மோசடிகளை விசாரித்து சட்ட நடவடிக்கை எடுப்பதே இதன் பிரதான நோக்கமாகும். இது பொலிஸ் திணைக்களத்தின் ஓர் உபபிரிவாகும்.

இப்பிரிவு பொதுமக்கள் கட்டளை மற்றும் கிறிஸ்தவ விவகார அமைச்சின் கீழ். அதன் அமைச்சர் ஜோண் அமரதுங்கவின் கீழ் இயங்கி வருகிறது. இதன் தலைவராக D.I.G.ரவி வைத்தியலங்கார நியமிக்கப்பட்டார்.

இவ்வமைப்பினூடாக

- மிகநுட்பமாக மேற்கொள்ளப்பட்ட நிதிக் குற்றங்கள்
- நிதி மோசடிகள்
- யாருமே தேவையென்று கேட்டிராத பாரிய வேலைத்திட்டங்கள் (Mega Project)
- பொதுச்சொத்துக்கள் விடயத்தில் மேற் கொள்ளப்பட்ட நிதி மோசடிகள்
- மக்களுக்குத் தெரியாது வெளிநாடுகளிலிருந்து சட்டபூர்வமற்ற வகையில் பெறப்பட்ட பணம்
- பயங்கரவாத நிதி, நிதிப்பரிமாற்றங்கள்
- சட்டபூர்வமற்ற வகையில் பணக்காரர்கள் ஆனவர்கள் அல்லது சொத்துச் சேர்த்தோர்
- தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான நிதியைக் கையாண்டவர்

இந்த FCID அமைப்புக்கு இருக்கும் அதிகாரம் என்பது வரையறை அற்றது. இலங்கையில் எந்தத் தரத்திலுள்ள நபரையும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதியின்றியே கைது செய்து விசாரிக்க முடியும்.

சந்தேக நபரை மாவட்ட நீதிபதியின் பரிந்துரைக்கு ஏற்ப தடுத்து வைக்க முடியும். இதன் பிரகாரமே முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ மற்றும் பல அமைச்சர்களைச் சிறையில் அடைத்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உறவுக்காரர்களையே சிறையில் அடைக்கும் அளவிற்கு வல்லமை படைத்த ஓர் அமைப்பாக இது விளங்கியது.

இந்த வரையறை அற்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் 03 இராணுவத் தளபதிகளை நீதிமன்றத்திற்கு எடுத்தது பிழையென்ற பொருள்பட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து FCID அமைப்பிற்குப் பொறுப்பாக இருந்த திருமதி டில்ருக்சி டயஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

நல்லாட்சி அரசுக்கே நிதிக்குற்றவியல் பிரிவும் அதன் விசாரணைகளும் பாரிய சவாலாக அமைந்துவிட்டது. இது நல்லாட்சி அரசியலுக்கான ஒத்துழையாமையையும், தாமும் எதிர்காலத்தில் பழிவாங்கப்படுவோம் என்ற பயமும் பல உயரதிகாரிகள் ஒதுங்கிச் செல்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

- நித்தி



# தொழில் வாய்ப்பில் கண்டுகொள்ளப்படாத வன்னி மாணவர்கள்

2004, 2005, 2006, 2007, 2008, 2009 ஆகிய காலப்பகுதிகளில் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை எழுதிய புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசித்த மாணவர்கள் சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு-களைப் பெற்றபோதிலும் அவர்களால் உயர்தரக் கல்வியினைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டது.

புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்புக் காரண-மாக தமது உயிரைப் பிடித்துக்கொண்டு எங்கோ நிலத்துக்கடியில் ஒழித்திருந்தார்கள்.

இக்காலப்பகுதியில் க.பொ.த உயர் தரப் பரீட்சை எழுதியவர்கள் கூட நிம்மதி யாகப் படிக்கவோ, பரீட்சை எழுதவோ வாய்ப் பிருக்கவில்லை. நாட்டின் நிலை சாதகம் இல் லாது இருந்தபோதிலும் மின்சாரம் இன்மை, தொடர் யுத்தம், தொடர் இடப்பெயர்வு, இழப்புக் கள், காயமடைதல் போன்ற பல்வேறு காரணி கள் காரணமாக சிறந்த சித்தியை அம்மாண வர்களால் அடையமுடியவில்லை.

இவர்களில் பலர் அவசரத் திருமணம் செய்து பலர் யுத்தத்தில் கணவனையோ அல்லது மனைவியையே இழந்து பிள்ளைக ளுடன் வருமானம் இன்றி மிகவும் சிரமமான வாழ்க்கைக்கு உட்பட்டுள்ளனர்.

புதிதாக வேலை வாய்ப்புக்களுக்கு விண் ணப்பம் கோரும்போது அதற்கு கேட்கப்படும் கல்வித் தகைமைகள் இப்பிரிவினருக்கு இருப்ப தில்லை. 2010 ஆம் ஆண்டின் பின் மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் கூட வேலை வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர். ஆனால் 2009 இற்கு முன்பான காலத்தில் மிகவும் சிரமப்பட்ட அந்த வயதுப் பிரிவினருக்கு உதவவேண்டும் என்ற நோக்கம் அரசியல்வாதிகளுக்கோ, ஏனை யவர்களுக்கோ இல்லை.

க.பொ.த. சாதாரண தரத்துடன் வழங் கக்கூடிய பதவிகளை வன்னிப்பகுதியில் வழங் கும்போது இவர்களுக்கு முன்னுரிமை வழங் கப்படவேண்டும் என்றோ, அல்லது குறிப்பிட்ட காலகட்ட மாணவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றியோ கருத்திற்கொள்ளப்படவில்லை.

2004 -2009 காலப்பகுதியில் வன்னிப் பகுதியில் வாழ்ந்த மாணவர்கள் சிறப்பாக கவ னத்திற்கொள்ளப்படவேண்டியவர்கள். குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மன்னார் மாவட்டத்தின் ஒரு பகுதியினர், வடமராட்சி கிழக்கு இந்த வரையறைக்குள் வகைப்படுத்தமுடியும்.

இக்காலகட்டத்தில் வன்னியில் வாழ்ந்த பலர் தற்போது வெளிமாவட்டங்களில் இடம் பெயர்ந்து வாழுகின்றனர். அவர்கள் நலன் புரி முகாம்களில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. எனவே அவற்றைப் அடிப்படையாக வைத்து வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

இவர்களில் பலர் கொடிய இடப்பெயர் வின்போது தமது கல்விச் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்களையும் இழந்துவிட்டனர். இவர் கள் கல்வி கற்ற பாடசாலைகளின் ஆவணங் களும் அழிந்துவிட்டன. ஆனால், அவர்கள் எத்தனையாம் ஆண்டு எந்தப் பாடசாலையில் பரீட்சை எழுதினார்கள் என்பதை வைத்து அவர்களின் கல்விச் சான்றிதழ்களைப் பெற்றுப் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். மேற்படி விடயங்களைக்கூட செய்ய முடியாத வடமாகாண கல்வி அமைச்சில் உள்ளவர்கள் வேறு எதைத்தான் செய்யப்போகிறார்கள்.

முதலில் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாண வர்களை ஓரிடத்தில் பதிவுசெய்து அவர்களின் விபரங்களைப்பெற்று ஆவணசெய்தல்வேண்டும்.

பொதுவாக தமிழ் அரசியல் வாதிக-ளிடமும், அதிகாரிகளிடமும் குறிப்பிட்ட விட யங்கள் தொடர்பில் தரவுகள் இல்லாதி ருப்பதே மிகப்பெரிய குறைபாடாகும்.

இவ்வாறு உண்மையாகவே பாதிக் கப்பட்டவர்கள் பலர் இருக்கும்போது எந்தவித பாதிப்பிற்கும் உள்ளாகாத வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பலர் இன்று கிளிநொச்சி, முல் லைத்தீவுப் பகுதிகளில் பணியாற்றி வருகின்ற மையை அவதானிக்கலாம்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களிற் சில ருக்கு தொண்டர் ஆசிரியர்களாகவும், சமுர்த்தி அலுவலர்களாகவும் வேலை வழங்கப்பட்டுள்ள தையும் மறுத்துவிட முடியாது. வேலை தேடி யவர்களை விட வேலை எதுவும் பெற்றுக் கொள்ளாதவர் தொகை அதிகமாகவே உள்ளது.

இவ்விடயத்தில் இவர் தான் செய்ய வேண்டும் அவர்தான் செய்யவேண்டுமென நொண்டிச்சாட்டுக் கூறாமல் உரியவர்கள் தமது கடமையைச் செய்வதே சாலச்சிறந்தது, நியாய மானதுமாகும்.

- **நந்தன்**



# யாழ்ப்பாணத்தில் 70 இற்கு மேற்பட்ட மதுபானக்கடைகள்

" போரைவிட போதைவஸ்துப் பாவனையே வடக்கை அழித்துள்ளது" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். யாழ். நகரை அண்டிய பிரதேசங்களில் 70 இற்கும் மேற்பட்ட மதுபானக் கடைகள் உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மதுக்கடைகளை திறந்ததில் அரசியல்வாதிகளுக்கே அதிகம் பங்குண்டு. வெளிநாட்டிலிருந்து பெறப்படும் பணத்தில் கல்விசார், உழைப்பு சார்ந்த நடவடிக்கையில் ஈடுபடாதிருப்பதற்கு இம் மதுக்கடைகள் அதிகம் பங்கு வகிக்கின்றன.

இந்தத் திட்டமிட்ட மதுக்கடைகளை மூடுவதற்கு ஜனாதிபதி கடும் நடவ டிக்கை ஒன்றை எடுத்தால் யார்தான் மறுக்கப்போகிறார்கள். அவர் யாழ்ப்பாணத் திற்கு விஜயம் செய்த அன்று 70 மதுக்கடைகளில் அரைவாசியை அடுத்த வாரமே மூடிவிட நடவடிக்கை எடுப்பேன் எனக் கூறவில்லையே..!

# எனினும் நாம் பறப்போம் – கலாசார விழா



மேற்படி கலாசார விழா சமவு ரிமை இயக்கத்தின் அனுசரணையுடன் செப்ரெம்பர் 30, ஒக்ரோபர் 01, 02 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் நடைபெற்றது.

இலங்கைத்தீவில் சுதந்திரத்திற்குப் பின்பான காலத்தில் பல்வேறுபட்ட இன முரண்பாட்டுச் சூழல் ஏற்பட்டுவிட்ட நிலையி யல் தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையாக வாழமுடியுமா என்ற கேள்வி பலரிடமும் இருக்கும் நிலையில், எனினும் நாம் பறப்போம் அதில் பின்னிற்கக்கூடாது என்பதே இந்தத் தலைப்பின் விளக்க மாகும்.

இந்த மூன்று நாள் நிகழ்விலும் தர்மசேன பத்திராஜவின் பொன்மணி திரைப்படம், அசோக ஹந்தகம வின் "இனி அவன்" திரைப்படம் கேச வராஜனின் "அம்மா நலமா?", கிங் ரத்தினத்தின் "மலையகத்தின் எதிரொ-லி", பிரசன்னவிதானகேயின் "உசாவிய நிகண்டாய்" (நீதிமன்றம் அமைதி) ஆகிய திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன.

ஆங்கில உப தலைப்புக்களுடன் இத்திரைப்படங்கள் காண்பிக்கப்பட்டன. பிரசன்ன விதானகேயின் நீதிமன்றம் அமைதி என்ற திரைப்படம் ஓர் ஆவணப்படமாகவும், இலங்கையின் நீதித்துறையின் குறைபாடுகளை வெளிக் கொணர்ந்த படமாகவும் காணப்பட்டது.


இதைவிட பல குறுந்திரைப்படங்கள், கலந்துரையாடல்கள், இசைமாலை, கார்ட்டூன், புகைப்படக் கண்காட்சி, சம-வுரிமை இயக்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான காட்சிப்படுத்தல்களும் இடம்பெற்றன.

சிங்கள - தமிழ் மக்கள் இவற் றைக் கண்டு பயன்பெற முடிந்தது. இன ஐக்கியத்துக்கான அடிப்படைகள் பல இவற்றில் காணப்பட்டாலும், இவற்றை விட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளில் சமவுரிமை இயக்கம் வலுவான பங்களிப்பை வழங்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் தமிழ் மக்களிடம் அதிகமாகவே உள்ளது.

பெரும்பான்மை சிங்கள மக்களிடம் தமிழ் மக்களின் (பாதிக்கப்பட்ட மக்களின்) உண்மையான பிரச்சினைகளை எடுத்துச் சொல்வதில் காத்திரமான பங்களிப்பினைச் செய்யமுடியும். அது குறைந்தபட்சம் 05 சிறைக் கைதிகளையாவது விடுவிப்பதாய் இருத்தல் வேண்டும். தமிழ் மக்களுக்கு இந்நாட்டில் இருக்கக்கூடிய அச்சமும், நிம்மதியின்மையும் இல்லாது செய்யக்கூடியதொரு யதார்த்தப் போக்கினை சமவுரிமை இயக்கம் கொண்டு வருவது நல்லது.

முதல் முயற்சி என்ற அடிப்படையில் பார்த்தால் இலங்கை வேந்தன் கலைக்கல்லூ ரியின் தெரிவும், ஒழுங்கமைக்கப்பட்ட முறை யும் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன.

# 2017 இல் உலக வெசாக் தினம்



ஐ.நா. வின் அங்கீகாரத்துடன் "உலக வெசாக் தினம்" 2017 மே 13 இல் இலங்கையில் நடாத்தப்படவுள்ளது. இது இலங்கைக்குக் கிடைக்கவிருக்கும் மற்றுமோர் சர்வதேச அங்கீகார மாகும். இதன் மூலம் உலக பௌத்த நாடுகளுட னான உறவை வலுப்படுத்தும் வாய்ப்பு இலங் கைக்குக் கிடைத்துள்ளது.

இவ்வுலக வெசாத் தினம் பற்றி ஜனாதி-பதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் ஊட கங்களுக்கு அறிவித்திருந்தார்.

# உலக பௌத்த மாநாடு 2018 இல்

2018 ஆம் ஆண்டு தேரவாத பிரி வின் உலக பௌத்த மாநாடு இலங் கையில் நடைபெற இருப்பதாக பிரதம ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார்.

2017 இல் உலக வெசாக் தினம் ஐ.நா. சபையின் அங்கீகாரத்துடன் நடைபெறவிருப்பது இவ் உலக பௌத்த மாநாட்டின் ஆரம்ப ஏற்பாடு எனலாம்.

# தொலைபேசியில் மிரட்டி பணம் பறித்தல்

மேற்படி மிரட்டல் தொலை பேசி அழைப்புக்கள் பெரும்பாலும் சிறைச்சாலைக ளுக்குள்ளிருந்தே மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகிறது. இம் மிரட்டல்களுக்கு தொலைபேசியில் அகப்படும் நபர்கள் மசிந்துவிட்டால், சிறைக்குள் இருப்பவர்கள் குறிப்பிட்ட நபரின் தொலை பேசி இலக்கத்தை வெளியில் உள்ள தமது நண்பர்களுக்கு அனுப்பி, அவர்கள் ஊடாக மேற்படி பண விவகாரத்தைக் கையாளுக்கின்றனர்.

"உங்களுக்கு இப்படி ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. அதிலிருந்து உங்களை காப்பாற்றுவதற்கு இவ்வளவு பணம் இந்த வங்கி இலக்கத்திற்கு வைப்பிலிட்டால் நீங்கள் காப்பாற்றப்படுவீர்கள்" என்று மிரட்டியே பெரும் பணம் பெறப்படுகிறது.


குறிப்பாகத் தமிழ் மக்களைப் புலிகளுடன் சம்மந்தப்படுத்தி இவ் ஏமாற்று நடைபெறுகி றது. அதேவேளை, தொலைபேசி நிறுவனங்கள் தங்களுக்குப் பரிசு கிடைத்துள்ளது. அதனைப் பெறுவதற்கு இவ்வளவு பணம் முதலில் வைப்பிலிடுங்கள் என்று கூறி, பலரை ஏமாற்றி யிருக்கிறார்கள்.

அண்மையில் ஏயார் ரெல் நிறுவனம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை அறி முகம் செய்திருக்கிறது. அதாவது வாடிக்கை யாளர்களுக்கு ஏதாவது பரிசு கிடைத்தால் குறிப்பிட்ட இலக்கத்தினூடாகவே தங்களுக்கு அறிவிப்போம்.

**(0755555555 / 0759557000)**

என குறுந்தகவல் மூலம் வாடிக்கையாளர்க ளுக்கு அறியத்தந்துள்ளனர்.

# அழகுக் குறிப்புக்கள்



**பொதுவானவை**

பெண்கள் தமது முகத்துக்கு Make up கையும் உடைகளையும் அழ காக ஆக்கிவிட்டு கால்களை அசுத்தமாக வைத்திருக்கின்றனர். இதற்கான காரணம் காலணி அணியாமல் வெறும் தரைகளில் நடப்பதாகும்.

அவ்வாறு நடக்கும்பொழுது கால்களில் அழுக்குப் படியும். அது மட்டுமன்றி பித்தவெடிப்புக்கள் காரணமாக மண்ணில் உள்ள தொற்றுக்கள் உட்புகும். இதனால் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. இதனை தவிர்ப்பதன் மூலம் கால்களை பாதங்களைபாதுகாத்துக் கொள்வதோடு அழகாகவும் வைத்துக்கொள்ளலாம்.

பெரும்பாலான பெண்கள் இரவு நித்திரைக்குச் செல்லும் பொழுது கால்களை கழுவிவிட்டு கால் விரல் இடைகளைத்துடைப்பதோ அல்லது உலர வைப்பதோ இல்லை. இதனால் கால்களில் தோல் உரிவும் துர் நாற்றமும் வீச வாய்ப்பு ஏற்படும்.

இதனைத் தவிர்ப்பதற்கு இரவுவேளை இளம் சுடுநீரில் சிறி தளவு உப்பும் சேர்த்து கால்களை அந்நீரால் கழுவி பின் சுத்தமான துணியால் துடைப்பதன் மூலம் இப் பிரச்சினையைத் தீர்க்க முடியும். பெண்கள் பொதுவாக முகத்தை அழகுபடுத்திக்கொள்ள அழகு நிலையங்களை நாடுகின்றனர். அவ்வாறு இல்லாமல் வீட்டிலுள்ள சில பொருட்களை வைத்தும், நாம் சமையலறைக் கழிவாக அகற்றும் பொருள்களையும் வைத்தும் முகத்தைப் பொலிவுபெறச் செய்ய முடியும்.

**எலுமிச்சம்பழத்தோல் :** இதை முகத்தில் கருமையுள்ள இடங் களில் பூசிவர முகம் பொலிவு பெற்று கருமை நீங்கும். தக்காளிப்பழம், பப்பாளிப்பழம் இவற்றில் ஏதேனும் ஒன்றை இரண்டு நாட்களுக்கு ஒருதரம் முகத்தில் நன்றாக தேய்த்து அரைமணி நேரம் கழித்து முகத்தைக் கழுவிய தும் முகம் பளபளப்பாகும்.

# பொய் அதிகம்



தற்போதுள்ள எமது சந்ததி யினர் அதிகம் பொய் சொல்கிறார்கள் என்பதை அளவிடும் ஒரு கருவி யாக கைத்தொலைபேசிகள்காணப் படுகின்றன.

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் ஒருவர் வேறு எங்கேயோ துரத் தில் நிற்பதாகவும், ஒரூரில் நின்று கொண்டு இன்னோர் இடத்தில் நிற்பதாகவும் மற்றும் சகல நட வடிக்கைகளிலும் பொய் கூறுவது என்று பார்த்தால் சாதாரணமாக ஓர் இளைஞன் 1000 - 100000 இற்கும் மேற்பட்ட பொய்களை தினமும் கூறுவதை அவதானிக்க முடியும்.

இவ்வாறு பொய்கூறும்ஒரு வன் எவ்வாறு நேர்மையாக, உண்மையான மனிதனாகஇருக்க முடியும். அவனது பொய் என்பது அவன் சார்ந்த நண்பர்கள், அவன் செய்யும் தொழில், அவனது குடும்பம், அவனது சமூகம் என எல்லா மட்டங்களிலும் பிழையான நடத்தைகளையே உருவாக்கி விடு கிறது. பொய் கூறுவதைக்கை விட் டாலே தமிழ்ச் சமூகம் எங்கோ மேம்பட்டு நிற்கும்..

# ஏமாற்றுக்காரன்

ஒரு கிராமத்தில் வசதிபடைத்த குடும்பம் ஒன்று இருந்தது. அவர்களுக்கு ஒரு பெண் பிள்ளை மட்டும் இருந்தாள். திடீரென அவளுக்கு ஏற்பட்ட நோய் காரணமாக சற்றும் எதிர்பாராத வகையில அவள் இறந்துவிட்டாள். பெற்றோர் பெரும் சோகத்தில் வாழ்ந்தனர்.

இதை அவதானித்து வந்த ஒருவன் தகப்பன் வீட்டில் இல்லாத வேளை பார்த்து அந்த வீட்டிற்குள் சென்று தாயாரிடம்" நான் மேலோகத்திலிருந்து வருகிறேன். உங்களின் மகளை அங்கு சந்தித்தேன். இங்கு மிகவும் வசதியாக இருந்த அவள் அங்கு மிகவும் கஷ்டப்படுகிறாள். ஆனால், உங்களிடம் கூறவேண்டாம் என்றும், உதவி எதுவும் கேட்கவேண்டாம் என்றும் கூறினாள்" என்றாராம்.

தனது மகளின் துன்பத்தைக் கேட்ட தாய் தன்னிடமிருந்த நகை கள், பணம் என்பவற்றை ஒரு துணியில் சுற்றி, அவனிடம் கொடுத்து இதை மகளிடம் கொடு, என்றாராம். அவன் சென்று சிறிது நேரத்தில் அங்கு வந்த தந்தை மனைவி கூறியதைக் கேட்டு விடயத்தை ஊகித்தபின் தனது குதிரையை எடுத்துக் கொண்டு அவனைத் துரத்திச் சென்றிருக்கிறார்.

ஏமாற்றுக்காரன் வீட்டுக்காரர் குதிரையில் வருவதைக் கண்டு ஒரு மரத்தில் பாய்ந்து ஏறிவிட்டார். அவர் குதிரையை மரத்தின் கீழ் விட்டுவிட்டு மரததில் ஏறத்தொடங்கினார். ஏமாற் றுக்காரன் குதிரையில் குதித்து ஓடத்தொடங்கினான்.

அதைப் பார்த்த வீட்டுக்காரர் உரத்த குரலில் "தம்பி இங்க வா நான் சொல்றதைக் கேட்டுக்கொண்டு போ!" என்றாராம் ஏமாற்றுக்காரன் மரத்தின் கீழே வந்தபோது வீட்டுக்காரர் இவ்வாறு கூறினாராம் "மகளிடம் சொல்லு நகை, காசு அம்மா தந்தது. குதிரை அப்பா தந்தது" என்று

# இப்படியுமா? ஒரு கண்டுபிடிப்பு...



# ரீட்டா நாடியாவின் நாடிப்பிடிப்பு

- தொல்காப்பியன்

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுபான்மையினர் அலுவல்கள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் இலங்கைக்கு 10 நாள்கள் விஜய மொன்றினை மேற்கொண்டு சிறு பான்மை கட்சியினரின் பிரதிநிதி களைசந்தித்துஅவர்களுடையவருத் தங்களை நாடி பிடித்து அறிந்து பொருத்தமான சிகிச்சைகளை வழங்க இலங்கை அரசுக்கு சிபார்சு செய்துள்ளார். இவ்விடயம் தொடர் பாக அறிவுரைகளை வழங்க வேண் டிய சூழலை ஏற்படுத்திக் கொடுத் தது என்றால் அது அரசையே சேரும். அவரை இவ்விடம் அழைத் தது அரசாங்கமே ஆகும். அவர் கூறிய அறிவுரைகள்

1. **இராணுவக் குறைப்பு**
2. **கைதிகள் விடுவிப்பு**
3. **நில மீளளிப்பு**

இவற்றை உடனடியாகச் செய்ய வேண்டிய விடயம் என்றும் அரசியல் தீர்வுக்கு அப்பால் கொழும்பு ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயம் என்றும் கூறியுள்ளார். நல்லிணக்கம் என் பது உதட்டளவில் இல்லாமல் செயற் பாட்டில் காட்டுவதாக இருந்தால் பெரும்பான்மை இனத்தை மிக அதிகமாகக் கொண்ட இராணுவ பிரசன்னம் ஆக்கிரமிப்பு என்ற உணர்வையே ஏற்படுத்துகின்றது என ரீட்டா தெளிவாகச் சுட்டி காட்டியுள்ளார். ஐ.நா நிபுணரான ரீட்டா ஐசக் நாடியா இந்தக் கருத்தை தனியே தமிழர் தரப்புடனான சந் திப்புக்கள் கலந்துரையாடலின் பின் னர் வெளியிட்டிருக்கவில்லை. யாழ்ப் பாண படைகளின் கட்டளைத் தலைமையகத்திற்குச் சென்று அதன் தளபதியான மேஜர் ஜெனரல் மகேஸ் சேன நாயக்காவுடன் சந்தித்து பாதுகாப்பு நிலைவரங்களை மற்றும் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கேட்டறிந்தார். எனவே அவர் ஒரு பக்க கருத்துக்களை மட்டும் கேட்டுவிட்டு படைக்குறைப்பு பற்றிய கோரிக்கைகளை முன்வைத் திருக்கவில்லை. இரு தரப்பு கருத் துக்களை கேட்டறிந்தே அவர் கூறி யிருந்தார். அதிகளவு இராணுவ இருப்பு தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களுக்கு செல்ல முடியாமை மற்றும் தொழில் வாய்ப்பும் பெறமுடி யாதுள்ளதும் ஓர் காரணம் என கூறியிருந்தார்.




நல்லாட்சி அரசாங்கத்திற்கு தமிழ் தலைவர்கள் அடிக்கடி முன் வைக்கும் பிரச்சினைகள் இவைகளாகத்தான் இருந்து வந் திருக்கின்றன. அந்த வகையில் மிகக் கரிசனையுடன் ஒரே இரவில் இவ்விடயத்தை செய்ய முடியாதது என்பதை ஏன் இவ்வளவு காலம் செய்ய முடியாமல் போனது என்பதே அர்த்தப்பட வைத்துள்ளது.

ரீட்டாவின் ஆதங்கம் தமிழ் மக்களுக்கு ஓர் ஆறுதல் தரும் விடயமே இருப்பினும் கொழும்பின் காதில் ஏறுமா?

## நான் மட்டும் நல்லாட்சி நடத்தமுடியாது?



முன்பிருந்த ஊழல் சூழலை மாற்றி நல்லாட்சி ஒன்றை ஏற்படுத்துவதற்கு அதிகம் சிரமப்பட்டபோதிலும், அதன் அடை வில் உரிய வெற்றியைப் பெறமுடியாது உள்ளது. அதற்கு அனைத்துத் துறையினரும் என்னுடன் சேர்ந்து பாடுபடவேண்டும்.

வாகனம் பாவித்தது. ரீ சேட் வாங்கியது போன்ற மிகச்சிறிய விடயங்களை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்வதால் நல்லாட்சியை உறுதிப்படுத்த முடியாது.

வெளிநாடுகள் எமக்கு ஆலோசனைகளை வழங்குவது போது குறைகூறும் நிலையும் காணப்படுகிறது. அவற்றிலிருந்து தப்பும் வகையில் எமது அரசை வெற்றிகரமாக நடத்திச் செல்லும்போதுதான் நல்லாட்சியை ஏற்படுத்த முடியும்.

## புலிக்கொடியா? நான் வரவில்லை




புலிக்கொடியைப் பிடிக்குமாறு அடம்பிடித்தால் நான் பேச வரமாட்டேன் என்று இங்கிலாந்தில் வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கூறி விட்டார். அவரது கருத்து இப்படி இருக்கும்போது எழுக தமிழ் நிகழ்வை வைத்து விக்னேஸ்வரன் பிரபாகரன் ஆகப்பார்க்கிறார் என்று குமுறிய சிங்களத் தலைவர்கள் இதன் பின் என்ன சொல்லப்போகிறார்கள்..?

## பகிரங்க மடல்

# கறுப்புச்சட்டைக் கலாசாரம்

தமிழ் அரசியல்வாதிகள் போகத்துக்கு அரசியல் நடாத்திப் பழக்கப்பட்டவர்கள். வெள்ளைச்சட்டை, வெள்ளை வேட்டி ஒரு சந்தர்ப்பத்திலும், கறுப்புச் சட்டை வெள்ளை வேட்டி சோகம் தாங்க முடியாத நேரத்திலும் அணிவார்கள்.

இது மக்களுக்குக் காட்டப் போடப்படுகின்ற ஒரு விநோத உடையாகும். அவர்களைப் பொறுத்தவரை மக்களின் உணர்ச்சிக்குக் கட்டுப்படமாட்டார்கள். ஓட்டையும், பொன்னையும் அந்த விடயத்தில் ஒப்ப மதிப்பவர்கள். தமிழன் செத்தாலும் அரசியல், வாழ்ந்தாலும் அரசியல்.

தங்கள் குடும்பத்திற்கு பாதிப்பு ஏற்படாதவரை அவர்கள் முடி.

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் 21.10.2016 அளவில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் கொக்குவில் பகுதியில் வைத்துக் கொல்லப்பட்டனர். அவர்களின் இறுதி ஊர்வலங்களின்போது பிரதானமாக ஓர் அரசியல் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது. அரசியல் தலைவர்கள் பலர் தமக்குச் சனியன்பிடித்து விட்டது என்பதைக் காட்ட கறுப்புச்சட்டையுடன் போய், எவ்வாறு இரங்கல் உரையை உணர்ச்சிவசமாக நிகழ்த்தலாம் என்று தீர்மானித்திருக்க,

"பொத்திக்கொண்டு மாறுங்கோ" என்றுபல்கலைக் கழக மாணவர் அதற்கான தலைமைத் துவத்தை எடுத்துக்கொண்டார்கள்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புகொண்டுவந்தநல்லாட்சிஅரசும்சுடுமோ? என்ற கேள்வியை எல்லோரும் கேட்கும் நிலையில் கூட்டமைப்புத் தலைவர்கள் "நல்லாட்சி அல்ல, அராஜக ஆட்சி" என்று குமுறியிருப்பார்கள் ஆனால், மேடை வாய்க்கவில்லை. "செத்த நாயிலிருந்து உண்ணி கழன்றதுபோல"" என்று ஆகக்கேவலமாக ஊடகங்கள் இவ்விடயத்தைக் காறித்துப்பியிருந்தன.

சூரன் பல தலைகளை மாற்றுவதுபோல வெள்ளை ஆடை யில் மக்கள் தம்மைத் தொட்டுவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக் கும் தூய்மைவாதிகள் - செத்தவீட்டில் பறிகொடுத்தவரை விட தமக் குத் துக்கம் அதிகம் என்று நாண்டுகொண்டு நிற்கிறார்கள்.

பாவம் மக்கள்! இரு நிலைகளிலும் ஊத்தைச் சாரத்துடன் அல்லது ஊத்தை நீட்டுக் காற்சட்டையுடன்தான் நிற்கிறார்கள்.

பல்கலைக்கழக மாணவர்களின் இந்த நடைமுறையை சாதா ரண பொதுமக்களும் எதிர்காலத்தில் பின்பற்றப் பழகவேண்டும். நடிப் பில்லா அரசியல் மட்டுமே எமக்குவேண்டும்.

தமிழ் அரசியல் தலைவர்களை பல்கலைக்கழக மாணவர்கள் இரங்கல் உரை நிகழ்த்த அனுமதிக்காததன் விளைவை தெளிவாக உணர முடிகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 01.11.2016 இல் யாழ். வந்தபோது "இது விடயத்தில் வடக்கு மக்கள் அமைதி காத்தமைக்கு நன்றி" என்று கூறுமளவிற்கு தமிழ் அரசியற் தலைவர்களே குழப்பக்காரர்கள் என்பதை நாசூக்காக எடுத்துக்கூறியிருக்கிறார்.

கறுப்புச்சட்டைக்கலாசாரம்என்பதுதமதுபிள்ளைகளைஉள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பத்திரமாக வைத்துக்கொண்டு ஏழைப்பிள்ளைகளின் பிணத்தை வைத்து நடாத்தப்படுகின்ற அரசியல் பிழைப்பாகும். இதற்கு மாவீரர் தினமும், முள்ளிவாய்க்காய் படுகொலையும் விதிவிலக்கானதல்ல.

# சிதறுதேங்காய் சிவாஜிலிங்கம்




ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் பிறந்துவிட்டால் வடமா- காண உறுப்பினர் சிவாஜிலிங்கம் " வீரசிவாஜி" ஆகி. புலிகளாகி. களத்தில் குதிப்பது வழக்கம்.

இவ்வருட ஆரம்பத்தில் புதுவிதமான "காப்புச்செய்யுள்" ஒன்றுடன் ஆரம்பித்திருக்கிறார்.

அமெரிக்கத் தேர்தலில் கிளாரி கிளின்டன் அம்மையார் வெற்றிபெற வேண்டுமென 1008 தேங்காய்களை நல்லூர்க் கந்தனின் காலில் சரித்திருக்கிறார்.

## இதற்கான செலவை இப்படி மாற்றியிருக்கலாம்

- 1008 தேங்காய்களையும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒரு விதவைத் தாய்க்கு கொடுத்து "கிளாரி தேங்காய்க்கடை" ஒன்றை ஆரம்பித்து. அவர்களுக்கு உதவியிருக்கலாம்.

- 1008 தேங்காய்களிலும் கிளாரியின் ஸ்ரிக்கர் ஒன்றை ஒட்டி எழைகளின் கையில் ஒவ்வொன்று கொடுத்திருக்கலாம்.

- அந்தக் காசில் 02 ஏழைப் பெண் பிள்ளைகளுக்கு சைக்கிள் வாங்கிக் கொடுத்திருக்கலாம்.

- கிளாரியின் பெரிய படமொன்றை தூக்குக் காவடி ரைக்டரில் வைத்து சிவாஜிலிங்கம் வேல் குத்தி தூக்குக் காவடி எடுத்திருக்கலாம்.

- ஏதாவது சிறிய பாடசாலைக்கு கிளாரியின் பெயரால் குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்திருக்கலாம்.

- 1008 தேங்காய்களையும் அநாதைக் குழந்தைகள் வாழும் இல்லங்களுக்கு கொடுத்திருக்கலாம்.

- ஜெய்பூர் செயற்கை அவயங்கள் பொருத்தும் அலுவலகத்திற்கு ஏதாவது வாங்கிக் கொடுத்திருக்கலாம்.

- இப்படி நிறைய அலுவலல்கள் இருக்கும்போது நல்லூரில் சிதறுதேங்காய் அடித்ததையும். "கந்தபுராணக் கலாசாரம்" என்று நியாயப்படுத்த முடியுமா?

நல்லவேளை சிவாஜிலிங்கத்தின் பேச்சைக்கேட்டு தமிழ் மக்கள் தேங்காய் உடைக்கப்போகவில்லை என்பது சற்று ஆறுத லைத் தருகிறது. எனினும். நல்லூர்க்கந்தன் தனது தீர்ப்பை மாற்றி எழுதி விட்டாரோ? கடைசியில் கிளாரி வெல்லவும் இல்லை. சிவாஜிலிங்கத்திற்கு **சிதறுதேங்காய் சிவாஜிலிங்கம்** என்ற பட்டம் கிடைத்தது தான் மிச்சம்.

**- குசும்பன்**

அதை உருவாக்க முடியாது என்பது சாதாரண கணித அறிவு இல்லாத ஒருவருக்கே தெளிவாகப் புரிந்துவிடும்.

எங்கட துன்பங்களை அங்க கொண்டுபோறம். இங்ககொண்டுபோறம் எனச் சொல்லி ஐ.நா. கட்டடத் தொகு தியில் ஓர் அறையை வாடகைக்கு எடுத்து, அதில் சுற்றியிருந்து கதைத்துவிட்டு, ஐ.நா. சின்னத்திற்கு முன்







> தமிழ் அரசியற்தலைவர்கள் பலரின் குடும்பங்கள்
> வெளிநாடுகளில் பத்திரமாக வாழ்கின்றன. அவர்
> களது பிள்ளைகளும் அங்கேயே படிக்கின்றனர்.
> தொழில் புரிகின்றனர். தமது சொந்த ஊரைப் பற்றிக்
> கதைத்தால் அதுவும் ஓர் ஊரோ? அதுகளும் ஒரு
> சனங்களோ? என்று ஒதுக்குகின்றனர். தற்செய லாக
> செத்தவீட்டிற்கு வந்தாலும் தட்டுத்தடுமாறி தமிழ் தெரி
> யாது தவிக்கின்றனர். நிலைமை இவ்வாறு இருக்
> கும்போது தமிழ்த்தேசியம், தமிழ்ப் பண்பாடு என்று
> பேசி இங்குள்ள தமிழ் மக்களுக்குத் தலைமை
> தாங்குவது தமது பணி என்று நினைப்பது
> சரியா? தப்பா?
> என்பதே இன்றைய விவாதமாகும். – ஆசிரியர்

# சரியா? தப்பா? எதிரும் புதிரும்

**சரி:** அரசியற்தலைவர்கள் அவர்களது குடும்பங்கள் இந்த நாட்டில் வாழமுடியாத சூழல் இருந்தபோதுதான் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றார்கள். ஆனால், தலைவர்களோ மக்களின் துன்பத்தில் பங்கெடுப்பதற்காகவே இங்கு இருக்கிறார்கள்.

தமிழ் மக்களுக்கு கடந்த காலத்தில் எத்தகைய பிரச்சினைகள் ஏற்பட்டன என்பது அவர்களுக்குத்தான் தெளிவாகத் தெரியும். தமிழர் விடயத்தில் பாராளுமன்றத்தில் கூட அடித்துப்பேசும் வல்லமை கொண்டவர்கள் அவர்களே.

அவர்களது தலைமைத்துவம் தமிழருக்குத் தேவை என்பதாலேயே மக்கள் வாக்களித்து அவர்களைப் பாராளுமன்றம் அனுப்பினார்கள். சிலரை மக்களே தேவையில்லை என்று தோற்கடித்தார்கள்.

எனவே, குடும்பங்களை வெளிநாடுகளில் வைத்திருக்கிறார்கள் என்பதால் அவர்கள் மக்களுக்குத் தலைமைதாங்குவது பிழை அல்ல. மக்களுக்காகவே மரணிக்கவும் தயாராக இருப்பவர்களை வேண்டாமெனப் புறமொதுக்குவது நல்லதல்ல.

அவ்வாறானவர்கள் தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்பு தமது குடும்பத்தை இங்கு கூப்பிட வாய்ப்பிருக்கும்.

**தப்பு:**

ஒரு தலைவர் என்பவர் மக்களுடன் மக்களாக கலந்து இருக்கவேண்டியவர். அவர்களின் குடும்பங்களும் மக்களுடன் வாழவேண்டும் என்பது முதன் நிபந்தனையாக இருக்கவேண்டும்.

இவ்வாறான தலைவர்கள் தமிழ்ச்சனத்துக்கு "மூக்கைப்பொத்தினால் வாயை ஆவெண்டத் தெரியாமல் மூச்சுத்திணறி செத்துப்போகுங்கள்" என்று ஒரு விலங்குபோல எம்மைப் பார்க்கத் தேவையில்லை.

இந்த மக்களின் துன்பத்தை முதலீடாக வைத்தே பாராளுமன்றம் போனார்கள். அதை வைத்தே பணம் சம்பாதித்தார்கள். அவர்களிடமுள்ள சொத்துக்களை மதிப்பிட்டால் அவர்களுக்கு கிடைக்கும் சம்பளத்தில் உதைவிடப் பெரிய விடயங்களை ஏழை மக்களுக்கு பல வீடுகளைக்கூட தமது சொந்தப் பணத்தில் கட்டிக்கொடுத்த தனிநபர்கள் எம்மத்தியில் இருக்கிறார்கள். அவர்களின் படம் கூட பத்திரிகைகளில் வருவதில்லை.

தலைவர்கள் விடயத்தில் மக்கள் ஏமாறக்கூடாது. ஒவ்வொருவரும் தமது காசில் எதையாவது மக்களுக்குக் கொடுக்கிறார்களா? அல்லது மக்களின் காசை எடுக்கிறார்களா? என்பதை தெளிவாக அறிந்தால் அவர்களை எப்போதோ தங்களின் குடும்பங்களுடன் வெளிநாட்டில் வாழ விட்டிருக்கலாம்.

தேர்தல் காலத்தில் உள்ளூர் தலைவர்களே மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்களிடம் மக்கள் கேள்வி கேட்டாலே மாற்றம் ஏற்படும். எனவே, குடும்பம் இந்த மண்ணில் இருந்தால் மட்டுமே அவர் இங்குள்ள மக்களுக்கு தலைமை தாங்கும் "மண்ணின் மைந்தன்" என்ற கௌரவத்தைப் பெறமு-டியும். எம்மைப் பொறுத்தவரை கொழும்பும் வெளிநாடுதான்.

சொந்த ஊரில் குடும்பத்தை வைத்திருப்பவன்தான் மக்கள் தலைவனாக இருக்கமுடியும் என்பதே சரியானது. இதில் மக்கள் தான் தெளிவாக இருக்கவேண்டும்.

நின்று போட்டோ பிடித்து (சிலருக்கு ஆங்கிலம் கூடத் தெரியாது) சனத்தை ஏமாற்றியது போதும்.

அரசாங்கத்தின் ஒதுக்கீட்டில் பிளாஸ்ரிக் கதி ரையும், கோழிக்குஞ்சும், போட்டோ கொப்பி இயந்திரமும் வாங்கித் தருவதற்காகவா வாக்குப்போட்டனர் மக்கள்?

# பெரும்பான்மைக்கே முதன்மை இடம்

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு பொது நிகழ்வில் ஆரம்பத்தில் இறை வணக்கம் என்று கூறி, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மத மாணவிகள் மூன்று பேர் ஒழுங்குசெய்யப்பட்டிருந்தார்கள். அந்த நிகழ்வில் மிகக்குறைந்த தொகையின் முஸ்லிம்கள் இருந்தார்கள். பெரும்பான்மையோர் இந்துக்கள்.

பெரும்பான்மை என்ற சொல் தமிழர்களைப் பொறுத்தவரையில் சிங்களவரையே சுட்டுவதாக உள்ளது. ஆனால், இந்த நிகழ்வில் பெரும்பான்மை தமிழ் இந்துக்கள். இதில் பெரும்பான்மை இந்து மாணவிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டது. இரண்டாவதாக கிறிஸ்தவத்திற்கும், மூன்றாவதாக இஸ்லாத்திற்கும் சந்தர்ப்பம் கொடுத்தார்கள்.

இந்நிகழ்வில் பெரும்பான்மையினராக தமிழ் இந்துக்கள் மிகச் சிறிய இனமான முஸ்லிம் மாணவிக்கு முதல் அந்தஸ்தும், கிறிஸ்தவ மாணவிக்கு இரண்டாவது அந்தஸ்தும் மூன்றாவதாக இந்து மாணவிக்கு சந்தர்ப்பம் வழங்கியிருந்தால் பெரும்பான்மையினர் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டதாக இருந்திருக்கும்.

எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது அவற்றைச் செய்யாத விடுத்து, பெரும்பான்மையினரே எல்லாவற்றையும் எடுத்துக்கொள்கிறார்கள் என்று குறைப்படுவதில் அர்த்தமில்லை. அல்லது மதப்பிரார்த்தனைக்காக ஒரு நிமிடத்தைப் பொதுவாக மௌனப் பிரார்த்தனையாக ஒதுக்கி, அவரவர் தாம் சார்ந்த மதங்களை பிரார்த்தித்து நிகழ்ச்சிகளை ஆரம்பிக்கலாம்.

# கொமினிஸ் கட்சிக்கு என்ன நடந்தது?

சூசை மார்க். வயது -81 யாழ்ப்பாணம் நாவாந்துறையைச் சேர்ந்தவர். தற்போது கனடாவில் வசித்து வருபவர். இவர் கொமினிஸ் கட்சியின் மூத்த உறுப்பினரும். செயற்பாட்டாளருமாவார். தமது செயற்பாடுகள். தலைவர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடுகள். சாதித்தவை. சாதிக்க முடியாமல் போனவை என பல்வேறு விடயங்களை புதிய முகவரி வாகசர்களுடன் பகிர்ந்துகொள்கிறார். இவரது செய்திகள் உண்மையான ஓர் ஒப்புதல் வாக்குமூலம் எனலாம்.

- ஆசிரியர்






சண்முகதாசன்

சீன சார்பு கொமினிஷ்கட்சியில் தோழர் சண்முகதாசன். எம்.சி.மெண்டிஸ் ஆகியோர் முக்கிய இடம் வகித்தனர். இவர்களது கட்சி விடயத்தில் இரு விடயங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன.

1. சமாதான சகவாழ்வு
2. பாட்டாளி வர்க்க அரசு

எனினும். இந்நோக்கம் நிறைவேறவில்லை. 1965 இன் பின் அக்கட்சிக்குள்ளும் முரண்பாடுகள் எழுந்தன. இது 1965 இன் பின்பான காலப்பகுதி ஆகும்.

வடக்கில் கொமினிஷ்கட்சியின் பிரதேச அமைப்பொன்று உருவாக்கப்பட்டது. இத்தகைய அமைப்புகள் பின்னர் இலங்கை முழுவதிலும் ஏற்படுத்தப்பட்டன.

குருசேவ் கொள்கைக்கு எதிராக தோழர் சண் சீனசார்பு நடவடிக்கைகளில் இறங்கினார். இதனால் கொமினிஷ் கட்சியில் தத்துவார்த்தப் பிரச்சினை எழுந்தது. இப்பிரச்சினையே கொமினிஷ்கட்சி இரண்டாகப் பிரிவதற்கு வழிவகுத்தது.

இவ்வாறான பிளவு ஏற்பட்டிருந்தபோதிலும் எனக்கு இரு பிரிவினர் மத்தியிலும் தொடர்புகள் இருந்தன. எனினும். பீற்றகெனமன், சண்முகதாசன். கார்த்திகேசு மாஸ்ரர் ஆகியோரின் பக்கம் இணைந்து செயற்பட்டேன்.

வாலிபர் சங்கம் சண்முகதாசனின் பக்கம் சாயத்தொடங்கியது. இலங்கை முழுவதும் இந்த நிலை ஏற்பட்டது. இந்தக் காலகட்டத்திற்தான் வி.பொன்னம்பலம் செந்தமிழர் இயக்கத்தை ஆரம்பித்தார்.

செந்தில்வேல், எம்.ஏ.சி.இக்பால் எல்லோரும் வாலிபர் சங்கத்திற்குள் இணைந்துகொண்டார்கள். இந்தக் கட்டத்தில் இலங்கை முழுவதும்கொமினிஷ்கட்சிஇரண்டாகப் பிரிந்து இரு துருவங்களாக செயற்பட ஆரம்பித்தன.

சண்முகதாசன், பிறேமலால் குமாரசிறி. வாட்சன் பெனாண்டோ. ஹிக்கொட தர்மசேன ஆகியோர் ஓரணியில் நின்றனர்.

1939 இல் இருந்து தமிழரசுக்கட்சிக்கு எதிராக இருந்த இக்கட்சிகள் பிரதேச சுயாட்சி என்பதை வலியுறுத்தி இருந்தன. உதாரணம் : எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க இலங்கையை 03 பிரிவுகளாக பிரிக்கவேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தார்.

1.கரையோரப்பகுதி - சிங்களவர்
2. மலைநாட்டுச் சிங்களவர்
3.வரண்ட பிரதேசம் - வடகிழக்குப் பகுதி

வாலிபர் காங்கிரஸ் இதை ஏற்றுக்கொண்டு செயலாற்றியது. ஹண்டி பேரின்பநாயகம் ஒரேற்றர் சுப்பிரமணியம். செனட்டர் நாகலிங்கம் போன்றோர் இதில் இணைந்து செயற்பட்டார்கள்.

பண்டாரநாயக்கவின் இத்திட்ஸடத்தை சேர்பொன் இராமநாதன் விரும்பவில்லை. "தமிழரில் உத்தியோகம் பார்ப்பவர்களே அதிகம். இவ்வாறு 03 வலங்களாகப் பிரித்தால் இலங்கை முழுவதும் சென்று தமிழர்கள் சேவையாற்ற முடியாது" என்றகருத்தைவலியுறுத்தியிருந்தார்.

பிரித்தானியாவில் தொழிற்கட்சி பதவிக்கு வந்த காலத்தில் அங்கு கல்வி கற்கச்சென்ற இலங்கையரும் மாக்சிசசிந்தனையால்கவரப்பட்டனர். அவ்வாறு கவரப்பட்ட இளம் சட்டத்தரணியாக பண்டாரநாயக்க இருந்ததால் இத்தகைய திட்டங்களை முன்வைத்தார்.

அதன் பின் பாராளுமன்றம் சென்று ஐக்கிய தேசியகட்சி. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி என்பன வர்க்க அரசியலுக்குள் புகுந்தபின்னர் இலங்கையை மூன்றாகப் பிரிக்கும் அவர்களது முன்னைய திட்டத்தை அவர்களே கைவிட்டனர்.

அதன்பின் சிங்கள மகா சபை என்ற அமைப்பை உருவாக்கினர். சேர்பொன் இராமநாதனுக்கும். சேர் பொன் அருணாசலத்திற்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது. இராமநாதன் படித்தவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்.

கொமினிஷ் கட்சியைப் பொறுத்தவரை வசதி படைத்த தலைவர்களோ. தொண்டர்களோ அக்கட்சியில் சேர்ந்ததாகக் கூறமுடியாது. சமூக அர்ப்பணிப்பு உள்ளவர்கள். சமூகம் பற்றிய சிந்தனை உள்ளவர்கள் மட்டுமே இதற்குள் இணைந்தார்கள்.

கொமினிஷ்கட்சிக்குள் எழுந்த முரண்பாடு காரணமாக சீன சார்பு அணியினர் மிகவும் தீவிரமாக செயற்பட்டனர். மக்களுக்கு அவ்வப்போது ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தட்டிக்கேட்பது. ஊர்வலங்களை நடத்துவது. எதிர்ப்புத் தெரிவிப்பது என எல்லாவற்றையும் செய்தோம்.

ஆனால். இவற்றை மக்களிடம் வாக்குப்பெற்று பாராளுமன்றம் சென்ற தமிழரசுக்கட்சியினர் செய்வதில்லை. தேர்தலுக்குப் பின்னர் அவர்கள் மக்களைச் சந்திப்பதுமில்லை.

இவ்வாறு முன்னணி நிலைக்கு வந்த சீன சார்புக்கட்சி உறுப்பினர்களும் தமக்குள் முரண்படத் தொடங்கினர். அதுவும் வடபிரதேசத்துக் கிளையில் இப்போட்டி முனைப்படைந்தது.

இப்போட்டிக்கான காரணம் சித்தாந்தமல்ல. தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட தனிப்பட்ட முரண்பாடுகள் தான். வீ.ஏ.கந்தசாமி. கார்த்திகேசு மாஸ்டர் ஆகியோர் ஒருமுகமாகச் செயற்பட்டனர்.

மறுமுனையில் கே.எஸ். சுப்பிரமணியம். செந்தில்வேல் ஆகியோர் முனைப்பாகச் செயற்பட்டனர். இதனால் வடபாகத்துக் கிளையில் பிரதான பிளவு ஏற்பட்டது. செந்தில்வேல் பின்னாளில் புதிய ஜனநாயகக் கட்சியை ஆரம்பித்தார்.

வீ.ஏ.கந்தசாமிவிஸ்வானந்த தேவருடன் இணைந்து செயற்பட்டார்.

நானும் இக்பால். சலீம் ஆகியோர் தனியாகச் செயற்பட்டோம். எம்மால் கட்சியில் இணைக்கப்பட்டவர்கள் எம்மை நோக்கி கேள்விகள் கேட்க ஆரம்பித்தார்கள். கட்சியின் தலைமைப்பீடத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளால் அவர்களது கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாத சூழல் எமக்கிருந்தது.

இந்தச் சூழலில் விடுதலைப் போராட்ட இயக்கங்கள். இராணுவத்தினர் என இரு பக்கங்களிலிருந்தும் எமக்குச் சிக்கல்கள் எழுந்தன.

1990 இல்முஸ்லிம்கள்யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேற்றப்பட்டவுடன் பிரச்சினை மேலும் இறுக்கமடைந்தது. புளொட் அமைப்பைச் சேர்ந்த ஜான் மாஸ்டர் எம்மை தங்களுடன் இணைந்து பணியாற்றும்படிகேட்டுக்கொண்டார். நான் அவரிடம் கூறினேன்

1. தமிழீழக்கோரிக்கையை கைவிட வேண்டும்
2. சிங்கள மக்களுடன் உறவைப் பேணுதல்
3.பிரதேச சுயாட்சி

ஆகிய 03 விடயங்களுக்கும் சம்மதம் என்றால் இணைந்து வேலை செய்யலாம் என்றேன். ஜான் இதைக்கேட்டுவிட்டு இவ்வாறு கூறினார் "தமிழீழத்தில் நம்பிக்கை இல்லை. ஆனால் அதைக் கைவிட்டால் மக்கள் மத்தியில் வேலை செய்ய முடியாது" என்று.

1983 இனக்கலவரம் என்பது இரு பகுதியிலும் இருந்த இனவாதிகளால் ஏற்படுத்தப்பட்டதாகும். எமது கொள்கை

(தொடர்ச்சி 27 ஆம் பக்கம்)

கொமினிஸ் கட்சிக்கு .....
(27 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் இனத்தின், மதத்தின், சாதியத்தின் பிரதிநிதிகள் அல்ல என்பதாகும். அதையும் கடந்த ஒரு சிந்தனையே எம்மிடம் இருந்தது.

தொழிலாளி பத்திரிகை தொடர்ந்தும் வெளியிடக்கூடிய பணப்பலமோ,சூழலோ இல்லாதிருந்ததால் அதனைக் கைவிட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இயக்கங்களைப் பொறுத்தவரை நாம் அவர்களுடன் இணையாவிட்டாலும் எதிரிகள் அல்ல என்ற நிலையைப் பேணியிருந்தோம்.

மாணிக்கதாசன் மானிப்பாயில்ஒரு சராசரிக் குடும்பத்தில் பிறந்தவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் படித்தவர். தொழிலாளருக்கான நீதி விடயத்தில் தொழிலாளர் பக்கம் நின்று வாதிடுபவர். சொத்துக்கள் என்று எதுவும் அவரிடம் இருக்கவில்லை.

கொமினிஷ்கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுகளுக்கு ரஷ்யாவிலிருந்து அனுப்பப்பட்ட ஒருவரே காரணமாக இருக்கலாம் என்ற ஓர் ஊகமும் எல்லோர் மத்தியிலும் இருந்தது.

கட்சியின் கொள்கையாக

1.தொழிலாளருக்காக வாதாடி அவர்களுக்கு சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பது.

2.சம்பளத்திற்காக போராடாது சித்தாந்தத்திற்கூடாக வளர்த்தெடுப்பது அதாவது மக்களின் அரசை உருவாக்குவது.

மே தினம் கொண்டாடக்கூடாது என ஜே.ஆர்.ஜெயவர்த்தன தடையுத்தரவு போட்டபோது அதனையும் தாண்டி ஊர்வலம் நடத்தினோம். அதற்கு அடித்தார்கள். ஏ.சுப்பிரமணியம் கடுமையான காயமடைந்தார். அதில் இக்பாலும் காயமடைந்தார். கட்சிச் செயற்பாடுகளில் பெண்களின் பங்கு மிகக் குறைவாகவே காணப்பட்டது.

சண்முகதாசனை ஒரு புரட்சிகர ஆசிரியர் என்று பார்க்கலாம். அவர் புரட்சிக்கு தலைமை தாங்கக்கூடியவராக இருக்கவில்லை. கட்சியில் இருந்தவர்களில் 80% மானவர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாது இருந்தார்கள். இந்த விடயத்திலும் சமூகம் எம்மை ஏற்றுக்கொள்வதில் தடையிருந்தது.

கொமினிஷ சிந்தனை என்றால் 'கடவுள் இல்லை" என்ற விடயம் மட்டுமே மக்கள் மத்தியில் இருந்தது. அவர்களிடம் முதலாளித்துவ சிந்தனையே மேலோங்கியிருந்தது.

கட்சித்தோழர்களுக்கு இருந்த சிறப்பியல்புகளில் ஒன்று அனேகமானோர் சீதனம் வாங்காது திருமணம் செய்தார்கள். இது ஒரு முன்னுதாரணமான சமூகச் செயற்பாடாகும்.

கொழும்பு நூலகத்தில் சண்முகதாசனின் 31 ஆவது ஞாபகார்த்த கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதில் உரையாற்றிய ஒரு பௌத்த பிக்கு சண்முகதாசனைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டார் " இவர் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக பாடுபட்ட ஒரு தலைவர். அவர் தமிழரோ, சிங்களவரோ அல்ல. அவர் ஒரு தேசியவாதி" என்றார்.

# சீமைக்கிளுவை நடுவோம்



சீமைக்கிளுவை அல்லது கிளிசீரியா என்ற தாவரம் வேலிகளில் நடப்படுகிறது. இதனை சிங்களத்தில் "வெட்ட கிளிசீரியா" (வெட்ட என்பது வேலி என்று அர்த்தம்) எனவும் அழைக்கின்றனர். மேற்படி தாவரம் ஒல்லாந்தர் காலத்தில் கப்பலில் கொண்டுவரப்பட்ட தடி என்பதால் சீமைக்கிளுவை என தமிழில் அழைக்கின்றனர்.

அண்மையில் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றும்போது வெட்ட கிளிசீரியாவினை அனைவரும் நாட்டவேண்டுமென அதன் கிளை ஒன்றைக்காட்டி மக்களுக்கு உரையாற்றியிருந்தார்.

இக்கிளிசீரியா அல்லது சீமைக்கிளுவை முன்பு வேலிகளில் அதிகம் வளர்க்கப்பட்டன. அதற்கான பிரதான காரணம் - ஆடுகளுக்கான போசணை மிக்க உணவாக இதன் குழைகள் கொடுக்கப்படுவதுண்டு. நிலத்திற்கு அதிகம் நைதரசனை வழங்கும் ஒரு தாவரமாகவும் கிளிசீரியா காணப்படுகின்றது. கிளிசீரியா நிழலில் நடப்படுகின்ற கத்தரி, மிளகாய் கன்றுகள் கூட அதிகம் காய்ப்பதுடன் அதிக காலம் நின்று காய்க்கும் தன்மையும் உண்டு.

இதைவிட மின்சாரம் தயாரிப்பதற்கான ஒரு கனிப்பொருளாகவும் கிளிசீரியா மரம் பயன்படுகிறது. திருகோணமலையில் பிறிமா நிறுவனம் தனது மின்னுற்பத்திக்கு கிளிசீரியா மரங்களையே பயன்படுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

மிகவும் பயன்தரும் இம் மரங் களை கால்நடைகளின் இயற்கையான தீவனத்திற்காகவும், நல்ல சுற்றுச்சூழலுக்காகவும் வளர்க்க வேண்டியது. மிக மிக அவசியமாகும்.

— குமாரு

## சமபந்திப் போசனம்.....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

அடையாளத்தை வைத்தே தேர்தலில் நிற்கின்றனர். ஆனால் இலங்கையில் தாழ்த்தப்பட்ட ஒருவன் தனது சாதியின் பெயரால் மேலெழத் தயங்கு கிறான். இவர்களால் வேளாளரின் பின்னால் ஒளிக்கமுடியுமே தவிர, அவர்கள் வேளாளர்களாக மாறுவதற்கு மற்றவர் கள் விடப் போவதில்லை.

தமிழ் அரசியல்வாதிகள் "சிங்கள பௌத்தம்" தமிழர்களை நசுக்குகிறது என்று கூறும்போது தாம் தமிழர்களின் ஒரு பகுதியினரை நசுக்குவது பற்றி உணர்ந்தாலும் வெளியில் சொல்வதில்லை.

தமிழர் வாழ்வியலில் தொழில் ரீதியாகப் பிரிக்கப்பட்ட சாதி அமைப்பில் வேளாளர் ஒரு சாதி மட்டுமே. அவர்கள் மற்றவர்களுக்குத் தலைமைத்துவம் கொடுக்கத் தேவையில்லை. அவர்கள் அவர்களின் சமூகத்திற்குத் தலைவர்களாக இருந்தாற்போதும். ஏனைய சமூகங்கள் சிறந்த கல்விமான்களாகவும், தமது மக்களின் முன்னேற்றத்திற்காகவும் பாடுபடக்கூடிய தமது தலைவர்களைத் தீர்மானிப்பதும், அத் தலைவர்கள் எதிர்க்கட்சியில் அல்லாது தேசிய கட்சியில் அங்கம் வகிப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

இவ்வாறான ஒரு சூழல் வடகிழக்கில் உருவாக்கப்பட்டால் ஓரிரு பிரதிநிதிகள் மட்டுமே வேளாளருக்குக் கிடைக்க வாய்ப்புண்டு. இதன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது அரசியல் அந்தஸ்தை நிலைநிறுத்த வாய்ப்பு ஏற்படும்.

விடுதலைப்புலிகள் சாதி விடயத்தில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். அதனால் அமைப்பிற்குள் வேளாள தலைமைத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை.

தேர்தல் அரசியலில் வேளாள தலைவர்களை நீக்கவேண்டியது இலங்கை அரசின் கையில் இல்லை. தமிழ் மக்கள் தம்மைத் தாம் உணரவேண்டும். அது அவர்களின் கையில் தான் உண்டு. சமூக மாற்றத்திற்காக பாதிக்கப்பட்ட மக்கள் குரல் கொடுக்கவேண்டும். சமபந்திப் போசனம் என கோயில்களிலிருந்து சாப்பிடுவதால் மட்டும் எதுவும் நடந்துவிடப்போவதில்லை.

கைத்தொழில் புரட்சிக்குப்பின் சகல தொழில்களையும் இலகுவாகவும், பாரிய அளவில் செய்து முடிக்கக்கூடியவாறும் கருவிகள் கண்டு பிடிக்கப்பட்டன. இக்கருவிகள் தொழில் அடைப்படையான சாதியினர் மட்டுமல்லாது யாரும் அத் தொழிலைச் செய்யமுடியும் என்ற நிலையை உருவாக்கியது.

தொழில்சார் பிரதிநிதிகள் பாராளுமன்றம் செல்லும் வழியைத் தேடவேண்டியதே இதற்கான தீர்வாகும். இந்து மதத்தின் பிரதான தெய்வமான சிவபெருமானின் மகனான முருகன் புலையர் குலத்தில் மிகவும் குறைந்த சாதிப் பெண்ணைத் வள்ளியைத் திருமணம் செய்தது மட்டுமல்லாது, இன்று வரை கோயில்களில் வள்ளியை அருகில் வைத்திருக்கும் வழமையும் உண்டு. அவ்வாறு பார்த்தால் முதன்முதலாக சாதி மாறித் திருமணம் செய்த பெருமை முருகனுக்கே உண்டு.அந்தது வகையில், முருகன் சூத்திரர்களின் உறவுக்காரர் எனலாம்.

# மூன்று தலைமுறைகள்

அ.விஜயகிருஸ்ணன்



> "உந்த உயிர்கள் சும்மா போகக்கூடாது. ஓர் இராணுவ முகாமையோ, பொலிஸ் நிலையத்தையோ தகர்த்து போகவேண்டிய உயிர்கள். நீங்கள் உண்ணாவிரதம் இருந்து சாகிறதுக்கு நான் ஒரு போதும் ஒத்துக்கொள்ளமாட்டேன். சட்டபூர்வமாக உங்களை விடுதலை செய்விப்பேன். உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கோ... நான் சொள்ளுறதைக் (சொல்லுறது என்ற சொல்லை அவர் அவ்வாறுதான் உச்சரிப்பார்) கேளுங்கோ"



இந்த ஆத்மார்த்தமான நம்பிக்கையூட்டும் வசனங்கள் வேறு யாருடையதும் அல்ல. அது குமார் பொன்னம்பலம் என்கின்ற மனிதனுடையது. 05.01.2000 அன்று கொலை செய்யப்படுவதற்கு சில நாட்களுக்கு முன் களுத்துறைச் சிறைச்சாலையில் அரசியற் கைதிகளின் உண்ணாவிரதத்தைப் பார்க்கச் சென்றபோது குமார் பொன்னம்பலம் அவர்களால் கைதிகளுக்கு கூறப்பட்டவை இவை.

தமிழ் அரசியற் கைதிகள் தமது சொந்தத் தேவைக்கு அல்லாமல் நாட்டின் விடுதலைக்காய் செயற்பட்டு **அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர்** என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள்.

இந்த விடயத்தில் தனது சட்டத்தரணி வல்லமையைப் பயன்படுத்தி, பல பெரிய வழக்குகளில் சிக்கியிருந்தவர்களைக்கூட இவர் விடுதலை செய்ய வைத்தார்.

ஒரு தடவை கொழும்பு மேல் நீதிமன்றில் வேறொரு வழக்கிற்குச் சென்றிருந்தபோது ஓர் அரசியற் கைதியின் வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் இருந்தது. அந்தக் கைதிக்கு பல ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை தீர்க்கப்படப்போகிறது என்பதை முன்னுணர்ந்த குமார் பொன்னம்பலம் -

" இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர் சார்பில் நானும் ஆஜர் ஆகிறேன்" என்று நீதிபதியிடம் கேட்டபோது

நீதிபதி : **"இந்த வழக்கு ஏறத்தாழ முடிவடைந்து விட்டது. குறைந்தது 60 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்படுவதற்கு வாய்ப்புண்டு. நீங்கள் இதைப் பொறுப்பேற்று தோல்வி கண்டால் அந்தக் கைதிக்கு 120 வருடங்கள் வரை தீர்ப்பு வழங்கவேண்டி ஏற்படும்"**

குமார் : **"ஆம்! சம்மதிக்கிறேன்"** என்றார்.

**பின்னர் வழக்கினை மீளப் பேசும்போது ஒரு சில வசனங்களில் அவன் கைது செய்யப்பட்டது தொடர்பான சட்டப்பிரச்சினை ஒன்றைச் சுட்டிக்காட்டி அந்தக் கைதியை விடுதலை செய்தார். இந்தத் துணிவு வேறு எந்தத் தமிழனுக்கும் இதுவரை வந்ததில்லை.**

தமிழர் விவகாரங்களில் பகிரங்க தொலைக்காட்சி விவாதங்களில் கலந்துகொண்டு பல சிங்களத் தலைவர்களுக்கும், அரசியல் சார்ந்தவர்களுக்கும் பகிரங்கமாகச் சவால் விடுத்திருக்கிறார்.

"தமிழன் இந்த நாட்டில் உரிமையுடன் வாழ்வதற்குத் தகுதியுள்ளவன்" என்பதே அவரது வாதமாக எப்போதும் இருக்கும்.

ஒரு தடவை ரி.என்.எல். தொலைக்காட்சி விவாதம் ஒன்றின்போது "புலிகள் இராணுவ முகாம்கள் மீது தாக்குதல் நடத்துகிறார்களே" என்று எதிர்த்தரப்பு விவாதி கேட்டபோது, "அதில் என்ன தப்பு இருக்கிறது. தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால், அவ்வாறு தாக்கமாட்டார்கள்" என்றார்.



சந்திரிக்கா அம்மையார் ஜனாதிபதியாகவும், ஜெனரல் ரத்வத்தை பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தவேளை "செம்மணிப் படுகொலை" தொடர்பில தமது இலவச சட்ட ஆலோசனையை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக யாழ்ப்பாணம் வர முயன்றபோது **"பாதுகாப்பு அமைச்சின் பயண அனுமதி பெறப்படவேண்டும்"** என்று கூறப்பட்டபோது, அதற்கு எதிராக வழக்கொன்றைத் தாக்கல் செய்தார்.

எப்படியோ அவர் யாழ்ப்பாணம் செல்லக் கூடாது என்பதில் சந்திரிகா அரசு மிகத் தீவிரமாக இருந்தது. குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணம் வந்தால், செம்மணிப் படுகொலை சட்டபூர்வமாக சர்வதேசத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பது சந்திரிகாவுக்கு நன்கு தெரியும். இதைத் தடுப்பதற்கான அவர்களின் முயற்சியே குமார் பொன்னம்பலத்தின கொலையாக முடிந்தது.

குமார் பொன்னம்பலம் புலிகளின் குரலாக கொழும்பிலும், சர்வதேச அரங்கிலும் செயற்பட்டவர். 1999 ஜனாதிபதித் தேர்தலின்போது சந்திரிகாவுக்கு எதிராக பிரச்சாரத்தில் ஈடுபட்டவர். தேர்தல் முடிந்தபின் "தென்பகுதியில் வாழுகின்ற புலிகளின் ஆதரவாளர்கள் கவனமாக இருக்க வேண்டும்" என சந்திரிகா எச்சரித்தது குமார் பொன்னம்பலத்திற்கே அளவான தொப்பி. அதனால்தான் புலிகள் அவர் இறந்ததும் "மாமனிதர் என்ற அதியுயர் கௌரவத்தை அவருக்கு வழங்கினர்.



பொன்னம்பலம் பரம்பரைக்கு அரசியலில் 03 சந்ததிகளின் பாரம்பரியம் உண்டு. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்ற கட்சியே முதன் முதலில் தமிழர் சார்பில உருவாக்கப்பட்ட கட்சி. அதன் பின்புதான் ஏனைய தமிழ்க்கட்சிகள் உருவாகின. இக்கட்சியின் ஸ்தாபகர் குமார் பொன்னம்பலத்தின் தந்தையாரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஆவார்.

தமிழ்த்தலைவர்களில் கைத்தொழில் அமைச்சராக இருந்து வடகிழக்கில் பல தொழிற்சாலைகளை உருவாக்கியவர் ஜீ.ஜீ. காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயண தொழிற்சாலை, வாழைச்சேனை காகித தொழிற்சாலை, கந்தளாய் சீனித்தொழிற்சாலை போன்றவற்றை உருவாக்கியவர் இவர்.

(தொடர்ச்சி 29 ஆம் பக்கம்)

# அழிப்புடன் ஆரம்பமான அமெரிக்கா

1497 இல் கொலம்பஸ் என்பவர் கடற்பயணத்தை மேற்கொண்டு அமெரிக்க கண்டத்தை கண்டுபிடித்தார். ஆனால், அதற்கு முன்னரே அங்கு பூர்வீக இனமான செவ்விந்தியர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களை கொலம்பஸ் காட்டிய வழியில் ஐரோப்பாவிலிருந்து அமெரிக்கா சென்று குடியேறியவர்கள் எறும்புகளைக் கொல்வதுபோல கொன்றுகுவித்ததன் பின்னரே அமெரிக்கா உருவானது.

வெறும் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்ததே அமெரிக்காவின் வரலாறு. ஐரோப்பாவிலிருந்து அங்கு சென்று குடியேறியவர்கள் இனிப் புதிதாக யாரும் வரவேண்டாம் என்று தடுத்த சம்பவமே அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் ஆகும். அதன் நினைவாகவே அமெரிக்க சுதந்திர சிலை அமைக்கப்பட்டது. இச்சிலை ஒக்டோபர் 28, 1886 இல் பிரான்சைச் சேர்ந்த சிற்பி ஒருவரால் வடிவமைக்கப்பட்டு, பிரான்ஸ் அன்பளிப்பாக அச்சிலையை அமெரிக்காவுக்கு வழங்கியது.

அமெரிக்க நிலத்தை 50 மாநிலங்களாகப் பிரித்தனர். ஆங்கிலம் அரச மொழியாக்கப்பட்டது. அதன் பின் ஐரோப்பாவிலிருந்து சென்ற பல இனத்தவர்களும் "அமெரிக்கர்கள்" என்ற ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

குடியேறிய வெள்ளைக்காரருக்கு சேவகம் செய்வதற்காக ஆபிரிக்கக் கண்டத்திலிருந்து கறுப்பர்கள் அடிமைகளாக ஏற்றப்பட்டனர். அதன் வழிவந்த ஒருவர்தான் இரு தடவைகள் ஜனாதிபதியாக இருந்த பெருமைக்குரியவர்தான் பராக் ஒபாமா.

இவரது ஆட்சியிலும் அமெரிக்காவின் ஜனநாயகத்தன்மை பேணப்பட்டு வந்தது. ஆனால் இந்த நடைமுறைகளுக்கு எதிராகக் குமுறிய டொனால்ட் ட்ரம்ஸ் 08.11.2016 தேர்தலில் வெற்றிபெற்று 45 ஆவது ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

- கறுப்பர்களுக்கு எதிரானவர்
- பெண்களை வெறும் காட்சிப்பொருளாகவும், போகப் பொருளாகவும் வர்ணிப்பவர்.
- தொழிலாளர் விடயத்தில் கவனம் செலுத்தாத ஒரு முதலாளி.
- ஐரோப்பிய யூனியனுக்கு எதிரான போக்கு.
- முஸ்லிம்களுக்கு எதிரான போக்கு.
- அகதிகளுக்கு எதிரான போக்கு.
- பெரும்பான்மை வெள்ளையர்களை மட்டும் அங்கீகரிப்பவர்.
- மெக்சிக்கோ நாட்டவரை, கள்வர்கள், கயவர்கள்என்று வர்ணிப்பவர்.
- ரஷ்யாவுடன் மட்டும் ஒத்துப்போகும் தன்மையுடையவர்.



இத்தகைய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளதால் கறுப்பு இனத்தவரான தற்போதைய ஜனாதிபதி பராக் ஒபாமா கூட அமெரிக்காவை விட்டு வெளியேறி, கனடாவில் குடியேறக்கூடும் என்ற செய்திகள் கூட அடிபடுகிறது.

அமெரிக்க நிறவெறி ஆட்சிக்கு மக்கள் ஆணை கிடைத்திருப்பதும், அதனை மிக மோசமான முறையில் எடுத்துச்செல்லக்கூடிய தலைவராக ட்ரம்ஸ் இருப்பதும் உலகம் முழுவதற்குமான ஒரு கெட்ட சகுனமாகவே கொள்ளமுடியும்.

# 119

இந்த தொலைபேசி இலக்கம் அவசர அழைப்புக்கானது. இதன் மூலம் அழைப்பினை ஏற்படுத்தி அவசரமான, அவசியமான அனர்த்தம் நிறைந்த விடயங்களைப் பொலிஸாருக்கு அறிவிப்பதன் மூலம் உடனடியாக செயற்பட்டு அவற்றை தவிர்க்க வாய்ப்புண்டு.

ஆனால், 119 என்ற இலக்கம் சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்திருப்பதால் பலர் அதன் முக்கியத்துவத்தை உணராது, பிள்ளைகளை வெருட்டுவதற்கும், வெருட்டிச் சோறூட்டுவதற்கும் கூட இவ் இலக்கங்களின் அழைப்பினை ஏற்படுத்துவதாக பிரதிப் பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

தேவையற்ற வகையில்மேற்படி அழைப்பினை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**கடைச்சங்க தமிழ் நூல்கள்**

**எட்டுத்தொகை**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**பத்துப்பாட்டு**

திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை, மலைபடு கடாம், மதுரைக் காஞ்சி, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப் பாட்டு, நெடுநல்வாடை, பட்டினப் பாலை

# துயர் பகிர்வோம்



**இளம் காட்டூன் கலைஞன் அஸ்வின் உக்ரேன் நாட்டில் அகாலமரணமடைந்தார். அவரது இழப்பிற்கு புதிய முகவரி தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.**

## மூன்று தலைமுறை... (28 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அதன் பின்னர் குமார்பொன்னம்பலமும் அவரது மகனான கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அரசியலில் ஈடுபட்டனர்.

**தமிழ் அரசியற் தலைவர்கள் வரிசையில் வெளிநாட்டிற்கு ஓடாமலும், தமிழ் மக்களை அரசியலுக்காக படுகொலை செய்யாமலும், தமிழ் மக்களை தமது தேவைக்காக அடகு வைக்காமலும் இருந்த பெருமை பொன்னம்பலம் குடும்பத்திற்கே உண்டு.**

தமிழில் ஓர் பழமொழி உண்டு. **"மூன்று சந்ததி வாழ்ந்தது மில்லை, மூன்று சந்ததி வீழ்ந்ததுமில்லை"** என்று இது மேலைத் தேயத்தவர்களுக்குப் பொருந்தாது. பல பாரிய உலக கம்பனிகளை உருவாக்கியவர்களின் பூட்டப்பிள்ளைகள் வரை தொடர்ச்சியாக அவற்றை நடாத்தி வருவதை அங்கு காண முடியும்.

எனவே, தமிழர் அரசியலில் காலகட்டத் தலைவர்களாக ஜீ.ஜீ.பொன்னம்பலம், குமார் பொன்னம்பலம், ஆகியோர் இருந்தனர். அதன் தொடர்ச்சியாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அரசியலில் ஈடுபட்டு வருகிறார். தமிழர் அரசியலில் பேரன், தந்தை, மகன் என்ற மூன்று தலைமுறை அரசியற் பாரம்பரியம் பொன்னம்பலம் குடும்பத்திற்கே உண்டு. முதல் இருவரும் தமிழ் மக்களுக்காக ஆற்றிய நேர்மையான சேவையை முதலீடாக வைத்து தமிழ் மக்களுக்கான அரசியல் தலைமைத்துவத்தை தக்க வைத்துக்கொள்ளும் வாய்ப்பு கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கே அதிகம் உண்டு.

அவரது கட்சியில் தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்தவர்களாக தமிழ் மக்களைக் கொல்லாதவர்களாக, தமிழ் மக்களை விலைகூறி விற்காத மனிதர்களாக தேர்ந்தெடுத்து, இக்கட்சியினை முன்னெடுப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் அரிய வாய்ப்புக்களை பெற்றுக்கொடுக்க முடியும் என்பதில் ஐயமில்லை.





# ஆடம்பரமாக வாழக்கூடாது – மைத்திரி

2015 தை மாதம் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி ஆனவுடன் தனது பதவியேற்பு வைபவத்தை மிகவும் எளிமையாக வெறும் 6000 ரூபா செலவில் சுதந்திர சதுக்கத்தில் நடாத்தி முடித்தார். இதன்மூலம் மகிந்த ராஜபக்ஷவை விட எளிமையில் எவ்வளவோ உயரத்தில் இருப்பதாக மக்கள் நம்பினர்.

ஜனாதிபதி ஆனதன் பின் தனக்கு ஜனாதிபதி மாளிகை தேவையில்லை. மின்சாரத்திற்காக மட்டும் 150000 ரூபா செலவிடப்படுவதால் தான் அங்கு குடியிருக்கவில்லை என பாடசாலை மாணவர்களிடம்விளக்கமளித்தார். அந்த ஆடம்பர மாளிகையைபாடசாலைமாணவர்களும், பொது மக்களும் பார்வையிடவும் அனுமதித்தார். ஊழல்செய்தவர்கள் கட்டாயம் தண்டிக்கப்படவேண்டும் என பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்.

திருச்செல்வம்

அவரது மகனான தஹம் சிறிசேன கட்டுகின்ற இடுப்புப்பட்டியின் விலை 328500 ரூபா என அறிய முடிகிறது. "நான் ஜனாதிபதித் தேர்தலில் இறங்கியபோது எனது கையில் ஒரு ரூபாகூட இருக்கவில்லை" என்று ஜனாதிபதி தனது உரையொன்றில் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறெனில், மகனின் இடுப்புப்பட்டிக்கான பணம் யாருடையது?

சுற்றுச்சூழல் அதிகாரிகள் தமது கடமைகளை சரியாகச் செய்யவில்லை என்று அவ் அதிகாரிகள் முன்னிலையிலேயே குற்றம்சாட்டினார். ஆனால் அவர்கள் மனதில் இவ்வாறு முணுமுணுத்திருப்பார்கள். "உன்ர தம்பிதான் மகாவலி ஆற்றல் வரும் மணலை மன்னம்பிட்டியில் மறித்து, அள்ளுகிறாரே நாங்கள் என்ன செய்ய முடியும்" என்று தற்போது கட்டட வேலைகளுக்கான மண்ணை கடற்கரையில் அள்ளுமாறு ஜனாதிபதியே கூறுகிறார். இயற்கைக் கடற்கரை ஓரங்களை மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தினர் அழித்துவிட்டார்கள் என்று முதலில் அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

இவ்வாறான சிக்கனங்களைப் பற்றிக் கதைத்த ஜனாதிபதி மைத்திரிக்கான 2017 ஆம் ஆண்டு ஒதுக்கீடு 6.45 பில்லியன்கள். இது இந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 03 மடங்கு அதிகம். 2016 இல் ஜனாதிபதிக்காக ஒதுக்கப்பட்ட செலவு 2.3 பில்லியன் மட்டுமே.

இரண்டு வருடங்களுக்குள்ளேயே இவ்வளவு மாற்றம் ஜனாதிபதியிடமே ஏற்பட்டது என்றால் மற் றவர்கள் சும்மாவா இருப்பார்கள். அடுத்த ஆண்டு ஜனாதிபதிக்கென ஒதுக்கப்படும் நிதி கடந்த காலங்களில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது ஒக்கப்பட்ட நிதியை விட பல மடங்கு அதிகமாகும். ஆடம்பரமாக வாழக்கூடாது என்று கூறும் ஜனாதி பதி மைத்திரிபாலவுக்கு ஒதுக்கப்படும் நிதியை அவர் பாவிக்கப்ப போவதில்லையா?




அரசின் வரிச்சலுகையுடன் வாகனங்களை இறக்குமதி செய்யும் வாய்ப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு. அந்தச் சலுகையைப் பயன்படுத்தி புளொட் இயக்கத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் பலகோடி ரூபா பெறுமதியான ஹம்பர் தர சொகுசு வாகனத்தை இறக்குமதி செய்திருக்கிறார். மக்களுக்கு இரவு பகலாக ஓடி ஓடி வேலை செய்வதற்கு இவ்வகையான வாகனங்கள் அவசியம்தானே.!

# 15வது இதழில் தடம் பதிக்கின்றது...

## புதிய முகவரி
PUTHIYA MUHAVARY

முற்றுப்புள்ளியறியாத
முகவரியின்
முடிவுறா பயணத்தில்
முடிந்த நிகழ்வுகளில் சில...

